Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3210)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 29 ஞாயிற்றுக்கிழமை (15.12.2013) பக்கங்கள் 20 ஓசை - 075

## அஞ்சலிகள் பதிவு



(கொழும்பு)

மறைந்த தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு அஞ்சலி செலுத்தும் விதத்தில், கொழும்பிலுள்ள தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகராலயத்தில் வைக்கப்பட்டிருந்த இறுதி அஞ்சலி குறிப்புப் புத்தகத்தில் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் தமது அஞ்சலிகளைப் பதிவு செய்து வருகின்றனர்.

அந்தவகையில், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் தமது அஞ்சலியினைப் பதிவு செய்தார்.

## உரும்பிராயில் விபத்து; முதியவர் உயிரிழப்பு

(உரும்பிராய்)

உரும்பிராய் சந்திக்கருகில் நேற்றிரவு இடம்பெற்ற ஹன்ரர்-சவாரி மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

ஆலடி லேன், ஊரெழு மேற்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த குமாரசாமி பாலசுப்பிரமணியம் (வயது-73) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றிரவு 8.30 மணியளவில் உரும்பிராய் சந்திக்கருகில் மருதனார்மடம் வீதியில் குறித்த நபர் சவாரி மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை எதிரே வந்த ஹன்ரர் வாகனம் மோதி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (25)

09



அணியில்

18



கைது

## இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை

# சர்வதேச நீதிமன்றம் விசாரிக்க முடியாது

(கொழும்பு)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் இணக்கப்பாடுகளில் இலங்கை கையெழுத்திடவில்லை என்பதனால் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தும் அதிகாரம் சர்வதேச நீதிமன்றுக்கு இல்லையென அந்த நீதிமன்றின் வழக்குகள் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் அஹமட் பா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் சர்வதேச நீதிமன்றம் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் கருத்தரங்கொன்றில் அமெரிக்காவின் ஹுவர் அமைப்பின் பிரதிநிதியான துங்கு வரதராஜன் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்.

இலங்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் இணக்கப்பாடுகளில் கையெழுத்திடவில்லை என்பதால், நீதிமன்றத்தினால் நடவடிக்கை எடுக்க முடியாது என அவர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

(19) பக்கம் பார்க்க...

## முப்பது வருட யுத்தத்தின் பின்னர் சமாதானத்திற்குள் இலங்கை



### ஜனாதிபதி தெரிவிப்பு

முப்பது வருட கால யுத்தம் நிறைவடைந்து தற்போது இலங்கை சமாதானத்திற்குள் பிரவேசித்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கென்யாவிற்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அந்நாட்டு ஜனாதிபதி உகுரு கென்யட்டினால் வழங்கப்பட்ட விருந்துபசாரம் ஒன்றில் கலந்து கொண்டிருந்த போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை, ஒன்றிணைந்த தேசமாக அனைத்து மக்களும் ஒரே கொடியின் கீழ் வாழும் நாடாக, அபிவிருத்தியை நோக்கி பயணித்துக் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜ

(19) பக்கம் பார்க்க...

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்த முடியாது

### கூறுகிறார் பாதுகாப்புச் செயலர்



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் 500 இற்கும் மேற்பட்ட பரிந்துரைகளை அமுல்படுத்த முடியாதென பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளதுடன், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றினால் முன்வைக்கப்பட்டுள்ள தேசிய கீதத்தில் திருத்தம் செய்யப்படுதல் மற்றும் போரின் போது உயிரிழந்த புலி உறுப்பினர்களுக்கு

(19) பக்கம் பார்க்க...

## ஐ.நா.மனித உரிமை அமர்வில் ஜனாதிபதியின் செயலர் பங்கேற்பு

### அகாஷி தெரிவிப்பு



ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகளில் பங்கேற்பார் என இலங்கைக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி தெரிவித்துள்ளார். குற்றச் செயல்களுக்குத் தண்டனை விதித்தல் தொடர்பில் எடுக்கப்பட்ட முனைப்புக்கள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் லலித் வீரதுங்க தெளிவுபடுத்துவார் எனக் குறிப்பிட்டுள்

(19) பக்கம் பார்க்க...

## காணாமற் போனோரின் உறவினருக்கு நட்டஈடு வழங்குவதற்கு பரிந்துரை

### ஜனாதிபதி ஆணைக்குழு

காணாமற் போனவர்கள் கண்டுபிடிக்கப்படாவிட்டால், அவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு அரசாங்கத்திடம் பரிந்துரை செய்யவுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பாக ஆராய்ந்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளினால் காணாமற்போகச் செய்யப்பட்டதாகக் கூறப்படும் 148 பேர் தொடர்பான முறைப்பாடுகளை நேற்று முன்தினம் பெற்றுக் கொண்ட நிலையில், ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம இவ்வாறு தெரிவித்தார்.

காணாமற்போனவர்களை கண்டுபிடிக்க முடியாமல்

(19) பக்கம் பார்க்க...

## கிளிநொச்சி தர்மபுரத்தில் பரீட்சை மண்டபத்தில் முதலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தர்மபுரம் மகாவித்தியாலய மண்டபத்திற்குள் க.பொ.த சாதாரணதர பரீட்சை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது சுமார் ஐந்து அடி நீளமான முதலை ஒன்று உட்புகுந்தது.

படுத்திருந்த நிலையில் மேற்பார்வையாளரின் சமயோசித செயற்பாட்டால் பரீட்சை எவ்வித

(19) பக்கம் பார்க்க...

## நல்லிணக்க முனைப்புகளுக்கு உதவி வழங்கத் தயார்

### தென்னாபிரிக்கா அறிவிப்பு

இலங்கையின் நல்லிணக்க முனைப்புக்களுக்கு உதவிகளை வழங்கத் தயார் என தென்னாபிரிக்கா அறிவித்துள்ளது. இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்க விரும்புவதாக இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஜிவ் டொயிட்ஜ் தெரிவித்துள் ளார்.

நல்லிணக்க முனைப்புக்களில் தமது நாடு பெற்றுக்கொண்ட அனுபவங்களை இலங்

(19) பக்கம் பார்க்க...



கோவைநந்தனின் "கழுகு நிழல்" கட்டுரைகளின் தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வு யாழ். நூல் நிலைய மண்டபத்தில் நேற்றுப்பிற்பகல் கவிஞர் கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதல் நூலை யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரிபற்குணராசா அறிமுகம் செய்து நூலாசிரியரின் நண்பர் வரதராஜவிடம் கையளிப்பதையும், நிகழ்விற்கு வந்திருந்த அதிதிகள் அமர்ந்திருப்பதினையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (படம்:- பார்த்தீபன்)

# சமூகஒருமைப்பாட்டு அமைச்சின் இறுதி நடமாடும் சேவை இன்று

(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டமும் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் மற்றும் கண்டாவளை பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் சட்ட ஆவணங்களைப் பெறறுக்கொள்வதற்கான இலவச இறுதி நடமாடும் சேவை இன்று நடைபெறவுள்ளது.

கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் காலை 9மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெறும் இந்நடமாடும் சேவையில் கி./43, குமாரபுரம், கி/44 பரந்தன், கி/45 உமையாள்புரம்,கி/46 ஆனைவிழுந்தான், ஜே/47 தட்டுவான்குட்டி, ஜே/48 கோரக்கன்கட்டு, கி/49 ஊரியான், கி/50 முரசுமோட்டை, கி/51 கண்டாவளை, கி/52 பெரிய குளம், கி/53 கல்மடுநகர், கி/54 தர்மபுரம் தெற்கு, கி/55 தர்மபுரம் கிழக்கு, கி/56 புளியம்பொக்கனை, கி/57 புன்னைநீராவி, கி/58 பிரமந்தனாறு ஆகிய கிரம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த மக்கள் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்நடமாடும் சேவை மூலம் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகள், இறப்பு, விவாகச் சான்றிதழ்களின் பிரதிகள், காலங்கடந்த பிறப்பு, இறப்புக்களுக்கான பதிவுகள், விவாகப் பதிவு, தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் முதியோர் அடையாள அட்டை வழங்கல், தெலைந்த அடையாள அட்டைகக்கான பொலிஸ் அறிக்கை, அன்றைய தினம் இலவச ஆயுர்வேத சிகிச்சையும் சட்ட உதவி ஆலோசனைகள் என்பன வழங்கப்படவுள்ளன.

மேலும் பொதுமக்கள் சட்ட ஆவணங்களை பெறுவதற்கான தங்களதும் தங்கள் பிள்ளைகள் சார்ந்த அனைத்து ஆவணங்களையும் கொண்டுவருமாறும் முத்திரைகள், புகைப்படங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கே,90, 29)


## வீடு விற்பனை

சுதுமலை தெற்கில் பல குடிமனைகள் சூழவுள்ள பாதுகாப்பான இடத்திலுள்ள ஒரு குடியிருப்புக் காணியும், அதிலுள்ள வீடும் விற்பனைக்குண்டு. பெண்கள் தலைமையிலுள்ள குடும்பத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு : கனகர்
சீவறட்ணம் (சிவராசா)
சம்பந்தர் ஒழுங்கை
சுதுமலை தெற்கு.

(R/329)


# யாழ். போதனாவில் தொடரும் பணிப்பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலை தொண்டர் பணியாளர்கள் மூன்றாவது நாளாக நேற்றும் யாழ். போதனாவைத்தியசாலை வளாகத்தில் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

நேற்றும் காலை வைத்தியசாலைக்கு வந்திருந்த அவர்கள் வைததியசாலையின் புதிய நான்குமாடிக்கட்டத்திற்கு முன்பாக ஒன்றுகூடி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்று கோரி இவர்கள் முன்னெடுத்துவரும் பணிப்பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறு பல்வேறு மட்டங்களில் கோரிக்கை விடப்பட்டபோதும் தமக்கு உறுதியான பதில் கிடைக்கும்வரை தாம் பகிஷ்கரிப்பைத்தொடரப் போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ப[illegible])

# மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையினரின் 59 ஆவது ஆண்டு மணிவாசகர்விழா, இன்று மாலை 5 மணிக்கு ஈழத்துச்சிதம்பர வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ்ப்பாணம் சின்மயமிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜாக்கிரத்சைதன்ய சுவாமிகள் "மாற்றமாம் வையகத்தின்" என்னும் பொருள்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

மணிவாசகர் சபை நடத்திய சைவசமயப் பாடப்பரீட்சையில் முதன்மைச் சித்திபெற்ற ஐந்து மாணவர்களுக்கு தங்கப்பதக்கமும், தரரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. ([illegible])

# நிதிவழுங்கலில் தாமதம்; செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படும் நிதி கடந்த 4 வருடங்களாக வழங்கப்படாமையால் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்நிதி வழங்கப்படாமையினால் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட 88 சனசமூக நிலையங்களின் வளர்ச்சி பாதிப்படைந்துள்ளதாகவும் சமாசத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிதி தொடர்பாக பல தடவை உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கும் சமாசம் சனசமூக நிலையங்கள் தொடர்ந்தும் இயங்கச் செய்வதற்கு ஏதுவாக இந்நிதியினை பெற்றுத்தர ஆவன செய்யுமாறு துறை சார்ந்தோரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (18)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 213 | திகதி 2013.12.13 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்: 21 22 37 63 | ஆங்கில எழுத்து: J

பரிசுத் தொகை ரூபா. 13,688,380/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 07 | 350,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 209 | 209,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 357 | 357,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9387 | 563,220/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4959 | 198,360/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 122778 | 2,455,560/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17955 | 359,100/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 13,688,380/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,492,240/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்கொகை ரூபா. 13,928,680/-

2013.12.17ம் திகதி செவ்வாய்க்கிழமை
அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது
மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

(C/3176)

web : www.dlb.lk


# வவுனியா கலை இலக்கிய வட்டத்தின் "முழுநிலா" நிகழ்வும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாதாந்த முழுநிலா நிகழ்வும் கலாநிதி அகளங்கனின் 'கம்பனில் நான்' (கட்டுரைகள்) நூல் வெளியீடும் நாளை காலை 10 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் செயலாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்தியகலாநிதி ப. சத்தியலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைத்தலைவர் க. சிவலிங்கம் வடமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன் ம.தியாகராசா, இ.இந்திரராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்புப் பேருரையை புலவர்மணி காப்பியக்கோ டாக்டர் ஜின்னாஷ் ஷரிபுத்தீன் வழங்கவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையை இலங்கை இலக்கிய பேரவைத் தலைவர் சாகித்ய ரத்னா கலாநிதி செங்கை ஆழியான் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் கலாநிதி அகளங்கன் யாழ். இலக்கிய வட்டத்தின் முத்தமிழறிஞர் சொக்கன் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

# நெல்சன்மண்டேலாவின் நினைவுப் பகிர்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சமூக செயற்பாட்டு மையம் ஒழுங்கமைத்து நடத்தும் "மனிதம்வெல்லும்" நெல்சன் மண்டேலாவின் நினைவுப்பகிர்வுகள் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். நாவலர் வீதியிலுள்ள தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் ஆர்.சர்வேஸ்வரா இன விடுதலை என்னும் பொருளிலும், சின்மய மிஞன் சுவாமி ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள் வாழ்க்கை வரலாறும் ஆன்மீகமும் என்னும் விடயம் பற்றியும் சிறப்புரையாற்றவுள்ளனர். மேலும் சமாதானத்துக்கும் ஒத்துழைப்புக்குமான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அருட்தந்தை ஜே.ஜே.கமலநாதன் உலக சமாதானமும் நெல்சன் மண்டேலாவும் என்னும் பொருளில் சிறப்புரையாற்றுவார்.

தொடர்ந்து இசை அஞ்சலி நிகழ்வை குணராசா நக்கீரன் வழங்குவார்.



'இந்துநெறி காப்போம்
இந்துவாக வாழ்வோம்'

"ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி"

இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை 1008 தடவை எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமதுசமயத்தினையும் சமயவிழுமியங்களையும் எம்மக்களையும் காத்திட

அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்துமந்திரம் முதலீடு செய்வீர்களாக!

# 70 வயதை அடைந்த முதியோருக்கு

# பொதுசன மாதாந்த உதவிப்பணம்

## ஜனவரிமுதல் நடைமுறை

(கிளிநொச்சி)

சமூக சேவைகள் அமைச்சினால் 70 வயதை அடைந்த வறிய முதியோர்களுக்கு வழங்கப்படும் 1000 ரூபா மாதாந்த உதவிப்பணத்துடன் பொதுசன மாதாந்த உதவிப் பணமும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

மத்திய அரசின் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளரும் முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளருமான அனுசா கோகுல பெர்ணான்டோ இத்தகவலைத் தெரிவித்தார்.

70 வயதை அடைந்த முதியோரின் ஆதரவற்ற நிலை, வறிய நிலை ஆகியவற்றைக் கருத்தில் எடுத்து இத் தீர்மானத்தை சமூக சேவைகள் அமைச்சு எடுத்துள்ளது.

மாகாண சமூகசேவைகள் திணைக்களங்கள் தமது சொந்த நிதியிலிருந்து 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையில் இக் கொடுப்பனவின் நிலுவையை வழங்க விரும்பினால் வழங்கலாமென அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் மாகாண சபை மட்டும் தனது சொந்த வருமானத்திலிருந்து இக் கொடுபனவை முதியோர்களுக்கு செலுத்தி இருந்தது.

ஏனைய மாகாண சபைகள் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இக் கொடுப்பனவைச் செலுத்தும் வகையில் சமூக சேவைகள் அமைச்சால் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுமெனவும், 70 வயதை அடைந்த மேலும் ஒரு தொகுதியினருக்கும் மாதாந்தம் 1000 ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் அனுசா கோகுல பெர்ணான்டோ தெரிவித்தார். (90)

# கலாபூஷணம் விருது

(யாழ்.நிருபர்)

மானிப்பாய் வீதி பெரிய முஹிதின் பள்ளிவாசல் தலை வரும் யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளன பிரதிச் செயலாளருமான மீராலெப்பை லாபிர் சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால். கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

29ஆவது கலாபூஷண அரச விருது வழங்கும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பு றோயல் கல்லூரி நவங்கல மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் இவருக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் ஈழநாடு, தினபதி பத்திரிகைகளில் நீண்டகாலம் செய்தியாளராக பணியாற்றியவர். தற்போது வீரகேசரி, தினமுரசு பத்திரிகைகளின் பிரதேச செய்தியாளராகவும் பணியாற்றிவருகிறார்.

இவருக்கு தேசகீர்த்தி பட்டத்தினை கொழும்பு தெலுங்கு காங்கிரஸ் இயக்கமும், தேசக்தி பட்டத்தினை இரத்தினபுரி அகில இன நல்லுறவு இயக்கமும், ஊடக சுடர் பட்டத்தினை கண்டி இரத்தின தீபம் அமைப்பும், நிழப்படத்தாரகை பட்டத்தினை மலையக கலை கலாசார சங்கமும் சமூகதிலகம் பட்டத்தினை யாழ்.கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் ஏற்கனவே வழங்கிக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# வெளிஇணைப்பு இயந்திரம் திருத்தல் இலவச ந்டமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யமஹா வெளி இணைப்பு இயந்திர பரிசோதனையும், பழுது பார்த்தல் இலவச நடமாடும் சேவை தற்பொழுது யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவருகின்றது.

இதன்படி இன்று காக்கைதீவு, நாவாந்துறைப் பகுதியிலும், நாளை பருத்தித்துறை முனையிலும், நாளை மறுதினம் சுப்பர்மடம் சக்கோட்டையிலும், 18ஆம் திகதி வல்வெட்டித்துறை தொண்டைமானாறிலும், 19ஆம் திகதி மாதகல், காரைநகர் பகுதியிலும், 20ஆம் திகதி வேலணை, ஊர்காவற்றுறைப் பகுதியிலும் இடம்பெறவுள்ளது.

மேலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3 மணிவரை கிறீன் கிறாஸ் ஹோட்டலில் யமஹா இயந்திரம் திருத்துநர்களுக்கான இலவசப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது. (27)

# இடமாற்றம்

(யாழ்.நிருபர்)

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியில் இதுவரை காலமும் இடம்பெற்று வந்த சங்கானை பிரதேசசெயலர் பிரிவு இணக்க சபையின் செயற்பாடுகள் இடமாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கம்பரை அம்பாள் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் மேற்படி இணக்கசபையின் செயற்பாடுகள் நடைபெற்று வருவதாக இணக்கசபை அறிவித்துள்ளது. (10)

# பொதுக்கூட்டம்


(குருநகர்)

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கங்களின் ஒன்றிய விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஒன்றியத்தலைவர் கி.இரத்தினராசா தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மேல் நீதிமன்ற நீதவான் அன்னலிங்கம் பிரேம்சங்கர் பிரதம விருந்தினராகவும், யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் சிறப்பு விருந்தினராகவும், கௌரவவிருந்தினர்களாக யாழ்.பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி எம்.எம்.ஜிப்ரி மற்றும் யாழ்.பிரதித் தொழில் ஆணையாளர் க.கனகேஸ்வரன், பொது சுகாதார பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

புதிய பொருளாளர் தெரிவு, யாப்பு அங்கீகாரம் செய்தல் ஆகியன முக்கிய நிகழ்வுகளாக இடம்பெறும். சகல பிராந்திய சிகை அலங்கரிப்பு நிலையங்களை முழுமையாக மூடி கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (68)

# திசை திருப்பும் அபாய அரசியல்




இந்த முறை மாரி முழக்கம் இல்லையெண்டாலும் மாகாண சபை முழக்கத்துக்குக் குறையில்லை.

'வட மாகாணசபையில் ஆளுநருக்கும் சபையினருக்கும் இடையில் மூண்டது சட்டப்போர்' எண்டு சில பத்திரிகைகளும் இணையத்தளங்களும் முழங்கித் தள்ளுகின்றன.

இந்தச் செய்திகளைப் படித்து விட்டு ஒழுங்கை, தெரு, சந்தி, கடையடி, அலுவலகங்கள் எண்டு எங்க பார்த்தாலும் ஆரைப் பார்த்தாலும் இந்தச் சட்டப்போரைப் பற்றித்தான் கதை.

ஆளுநரைத் தோற்கடிக்கக் கூடிய ஒருவர் – சட்டத்துறை நிபுணர் – தமிழர்களின் அடையாளச் சின்னம் எண்டெல்லாம் சிலர் கருதும் விக்கினேஸ்வரனை இந்தப் பந்தயத்தில் அவர்கள் பந்தயக் குதிரை ஆக்கப்பார்க்கிறார்கள்.

களத்தில் மெல்ல மெல்ல காலடி எடுத்து வைச்ச இந்தக் குதிரையும் தற்பொழுது ஏறக்குறைய முழுசாக இறங்கி விட்டது.

இனியென்ன? ஓடக்கூடிய வரை ஓடத்தான் வேணும். பந்தயமென்றால் சும்மா இருக்க முடியுமா?

தமிழ்ப்பெருங்குடி பட்டிமன்றத்தில் சுகம் காணும் குணத்தைக் கொண்டது.

அதற்கு நாலுபேர் நல்ல மாதிரி வசனம் பேசினால் போதும். அவர்களே அறிவாளிகள் எண்டு நினைத்துத் தங்களின் பின்பக்கத்தில் தட்டிக் கொள்ளும்.

எத்தனையோ அறிவாளிகள் எல்லாம் இருக்கும்போது அடுக்கு வசனங்களை எழுதிய கருணாநிதியைத்தானே தமிழர்கள் கொண்டாடினார்கள்.

வீரபாண்டிய கட்டபொம்மன் படம் எதற்காக அத்தனை நாள் ஓடியது?

'மஞ்சள் அரைத்தாயா? குங்குமம் கரைத்தாயா? எங்கள் குலப்பெண்களுக்குக் கஞ்சிக் கலயம் சுமந்தாயா? மச்சானா, மாமனா, மானங் கெட்டவனே…?' எண்டு சிவாஜிகணேசன் கண்களை உருட்டி நாலு வசனம் பேசியபோது தட்டிய கைகள் இன்னும் ஓயவில்லை. அடித்த விசில் சத்தம் இன்னும் குறையவில்லை:

வாயிருந்தால் வங்காளம் போகலாம் எண்டு ஊரில் சொல்வார்கள்.

வாயிருந்தால் பாராளுமன்றம் போகலாம் எண்டு செய்து காட்டியவர்கள் முந்திய தமிழ் அரசியல்வாதிகள்.

சட்டப்புத்தகத்தைக் கரைச்சுக் குடிச்ச மேதைகள் எண்டு நம்பிய ஆட்கள் பாராளுமன்றத்திலும் வாதாடுறதுக்கெண்டு அப்புக்காத்துமாரை அனுப்பினார்கள்.

அங்க போன அப்புக்காத்துமார், பாராளுமன்றத்தில் நாலு வார்த்தை பேசுவினம். பிறகு களைப்புத் தீர அங்க இருக்கிற கன்ரீனில் தேத்தண்ணி குடிப்பினம். பிறகும் ஒரு நாலு வார்த்தை.

அவ்வளவும்தான். அந்த நாலு வார்த்தையும் எதிராளியைத் திட்டிறதாகத் தானிருக்கும். மற்றப்படி உருப்படியாக தங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு எதையாவது பெற்றுக்குடுக்கோணும் எண்டு கதைக்கிறதில்லை.

இந்த அப்புக்காத்துமாரை விடச் சாதாரணமாக இருந்த தொண்டமான் தனக்குத் தெரிஞ்ச அளவில கதைச்சுக் காரியம் பாத்த அளவுக்கு யாழ்ப்பாணத்து அப்புக்காத்துமார் ஒண்டும் புடுங்கேல்ல.

கைதட்டுகிற ஆட்கள் இருக்கிற வரையும் மேடை கலகலப்பாகவே இருக்கும்.

'வீடு பட்டினி எண்டாலும் பரவாயில்லை, றோட்டில வேடிக்கை பார்த்தால் காணும்' எண்டு இருக்கிற ஆட்களுக்கு பசி ஒரு பொருட்டேயில்லை. பிள்ளை குட்டியின் எதிர்காலத்தைப் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள்.

அப்பிடிக் கவலைப்பட்டால், இந்த மாதிரி சட்டப்பிரச்சினைக்குள் தலை- யைக் குடுத்து, தங்களின் வாழ்க்கையை ஆராவது பாழடிப்பார்களா?

சட்டப்போரை ஆரம்பிக்கப்போறதாக விடுகிற புலுடா என்னத்துக்குத் தெரியுமா?

மாகாணசபையை ஒரு வலுவான சபையாக நடத்தி, இந்தப் பாதிப்பும் பரிதவிப்புமாக இருக்கிற சனங்களின் வயிற்றை நிரப்புவதை விட்டிட்டு, தங்களை அறிவாளிகளாகக் காட்ட ஆலாய்ப்பறக்கிற ஆட்களின் விளையாட்டே.

வண்டிற்சவாரி விடுகிற மாதிரி இதுவும் ஒரு சவாரிதான். அதாவது, ஒரு வேடிக்கை.

இந்தச் சட்டப்பிரச்சினையைப்போல எத்தனை சட்டப்பிரச்சினைகளை எங்களின் சட்ட மேதாவிகள், கியூஸீக்கள் எல்லாம் மேசையில் குத்திப் பேசினார்கள்.

கடைசியில் கண்ட மிச்சமென்ன?

கடல் வலயச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம், ஊரடங்குச்சட்டம், புலித்தடைச்சட்டம், அந்தச் சட்டம், இந்தச் சட்டம் எண்டு புதுசு புதுசாகப் பல சட்டங்கள் முளைச்சு எங்களைச் சுற்றி வளைச்சுக் கட்டிப்போட்டதுதான்.

மரணம் என்பது கடன். அந்தக் கடனை எல்லோரும் கொடுத்துத்தான் ஆக வேண்டும். - சுவாமி விவேகானந்தா.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## முடிவு உங்கள் கையில்!

ஒரு துறவியும், அவர் சீடர் ஒருவரும் காட்டு வழி நடந்து சென்றனர். இருவரும் ஓர் ஆற்றைக் கடக்க நேர்ந்தது. அப்போது, ஒரு பெண் ஆற்றைக் கடக்கத் தயங்கி நின்றுகொண்டிருந்தாள். தனக்கு உதவி செய்யுமாறு அவள், அவர்கள் இருவரையும் கேட்க, துறவறம் கொண்டபின் பெண்ணைத் தொட்டுத் தூக்குவதா என்று சீடன் யோசிக்க, துறவி சட்டென்று அந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு ஆற்றைக் கடந்து, அந்தப் பக்கம் இறக்கி விட்டு விட்டார்.

சீடனுக்குப் பெரும் குழப்பம், துறவி எப்படி அந்தப் பெண்ணைத் தொட்டுத் தூக்கலாம் என்று. துறவியும் சீடனும் நெடு நேரம் நடந்து, நெடுந்தூரம் கடந்தபின்னும் சீடனுக்கு குழப்பம் தீரவில்லை.

சரி கேட்டு விடுவோம் என்று, “குருவே அந்தப் பெண்ணை நீங்கள் தூக்கியது துறவறத்துக்கு இழுக்கல்லவா?” என்று கேட்க, குரு சொன்னாராம், “சீடனே நான் அந்தப் பெண்ணை அப் போதே இறக்கி விட்டு விட்டேனே, நீ இன்னுமா சுமந்து கொண்டிருக்கிறாய்?” என்று!

இப்படித்தான் நம்மில் பலரும் பிறர் மீதான கோபத்தை, நாமாக உருவாக்கிக் கொண்ட வஞ்சினங்களை இறக்கமுடியாமல் சுமந்து கொண்டு இருக்கிறோம். நம்மைத் தோல்வியடைய வைத்தவர்களைப் பழிதீர்க்காமல், நமக்கொரு வாழ்வு தேவையில்லை என்றொரு ரோசத்தில் தீய்ந்தழிய தயாராயிருக்கிறோம்.

மன்னிப்பிலும், பரஸ்பர விளக்கத்திலும் சில விஷயங்கள் தெளிந்து விடும், காலப்போக்கில் சிலது ஐதாகி விடும். ஆனால் நாம் பேச விரும்புவதில்லை. நாமே நமக்கு அறிவாளி, பிறர் எல்லாம் மூடர்கள்–நியாயங்களே அற்றவர்கள் என்ற ரீதியிலேயே நமது நினைப்பும், செயலும் அமைந்து விடுகிறது.

குறைந்தபட்சம் நம்மை நாம் திருத்திக் கொள்ள வேண்டி இருக்கிறது, வளரும் தலைமுறைக்கு ஒரு வழிகாட்டுதல் தேவை இருக்கிறது. வெறுப்பும் விரோதமும் பழியுணர்ச்சிகளுமாக நமக்குள் புரையோடிப் போனவற்றை மெல்ல மெல்ல விலக்கி நம்மை சமன்நிறை மனிதர்கள் ஆக்கிக் கொள்வதற்கான போராட்டத்தை நமக்குள்ளேயே தொடங்குவோம்.

வளரும் இளந்தலைமுறைக்கு வழிகாட்டுதலை வீட்டில் இருந்து தொடங்குவோம். நம் குழந்தை, மற்ற குழந்தைகள் மீதான குற்றம் குறைகளைச் சொல்லும் போது, அந்தக் குழந்தையைச் சரியானபடி வழி நடத்த வேண்டும்.

அதை விடுத்து, அந்தக் குழந்தையைத் திருப்பி அடி, அந்தக் குழந்தையுடன் சேராதே, அவர்களின் பிள்ளைகள் அப்படித்தான், இந்தச் சாதி, அந்த மதம் எல்லாம் அப்படித்தான் என்று தப்பும் தவறுமாகச் சொல்லிக் கொடுக்கும் அடிப்படையில் உருவாகிறது தீவிரவாதம், இனவாதம், மேட்டிமைவாதம் எல்லாமும்.

தீவிரவாதம் நமக்குள் உருவாகிவிட்டால் பிறகு நமக்குப் பொறுமையில்லை, கேட்டுத் தெளியும் அறிவும் இல்லை. பொறுமையும் அறிவும் இல்லாதவருக்கு வன்முறை ஒன்றே ஆயுதம்!

விதை பழுது ஆனால், விருட்சம் எப்படி வளரும்? வருங்காலம் வளமாக இருக்க, உங்கள் வீட்டில் குழந்தைகள் மனதிலாவது நல்லதை விதையுங்கள். அன்பையும் அறிவையும் உரமாக்குங்கள்.

அடுத்த தலைமுறை கையில் பூக்களோடும், புத்தகங்களோடும் இருக்க வேண்டுமா அல்லது கத்தியோடும், கறையோடும் இருக்க வேண்டுமா? மற்ற மற்ற சமூகங்களின் மீது வெறுப்பும் விரோதமுமுடனே வளரவேண்டுமா?

முடிவு உங்கள் கையில்.

- ஆசிரியர்.

# அரச போக்குவரத்து துறையை பலப்படுத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபைக்கு மேலும் 2000 பேருந்துகளை இறக்குமதி செய்து அரச போக்குவரத்துத் துறையைப் பலப்படுத்தத் தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் போக்குவரத்து அமைச்சின் வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் வெல்கம தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

பேருந்து ரிக்கட் பண மோசடிகளைத் தடுக்கும் வகையில் முற்கொடுப்பனவு அட்டை முறையை நடை முறைப்படுத்த தீர்மானிக்கப்படவுள்ளது.

ரிக்கெட் மோசடியினால் ஒரு டிப்போவில் சுமார் 50,000 ரூபா வரை நட்டத்தை எதிர்கொள்ள நேரிடுகின்றது. பயணிகளுக்குச் சேர வேண்டிய மிகுதிப் பணம் கிடைக்காமை உட்பட அசௌகரியங்களுக்கு நிவர்த்தியாக இந்த புதிய திட்டம் அமுல்படுத் தப்படவுள்ளது.

ரயில் சேவை தற்போது மிக முன்னேற்றமடைந்துள்ளது. பெரும்பாலான மக்கள் தற்போது ரயிலிலேயே பயணம் செய்கின்றனர். சிறந்த சேவை குறைந்த கட்டணமே இதற்குக் காரணமாகும். இதனால் பஸ்களில் பயணிப்போரின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

மதவாச்சிக்கும் காங்கேசன் துறைக்குமான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு தற்போது மடு வரை ரயில் சேவை இடம்பெறுகிறது. காங்கேசன்துறைக்கான ரயில் சேவையின் முதற்கட்டமாக கிளிநொச்சி வரை தற்போது ரயில் சேவை நடை பெறுகிறது.

இதுவரை ஆட்சியிலிருந்த எந்த அரசாங்கமும் ஒரு அங்குலமாவது ரயில் பாதையை நிர்மாணித்ததில்லை. தற்போது அரசாங்கம் வடக்குக்கு மட்டுமன்றி தெற்கில் மாத்தறையிலிருந்து பெலியத்தை வரையிலான ரயில் பாதையை நிர்மாணித்து வருகிறது. நானு ஓயா பதுளை ரயில்கள் அழகானவையாகவும் சொகுசானதாகவும் உள்ளன. அரசாங்கம் நல்லவற்றைச் செய்யும் போது அதனை எதிர்க் கட்சியினர் நன்மையாகப் பேச வேண்டும். குறைகள் எங்கும் உள்ளன. தவறுகள் எவராலும் நடக்க முடியும் எனினும் நல்லவற்றை அரசாங்கம் செய்யும் போது அதனை எதிர்க் கட்சி விமர்சிக்கக்கூடாது. நாம் செய்வது 100 இற்கு 100 நல்லது என நான் ஒருபோதும் கூறவில்லை. எனினும் சிறந்த போக்குவரத்து சேவையை வழங்குவதற்கு நாம் முடிந்தளவு முயற்சித்துள்ளோம். அதன் பிரதிபலன்களை மக்கள் பாராட்டுகின்றனர் என்றார்.

## கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவில் போலிக் கச்சேரி சுற்றிவளைப்பு

(கொழும்பு)

கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருப் பகுதியில் இயங்கிய போலி கச்சேரி ஒன்றை சுற்றிவளைத்த பொலிஸார், சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர். கதிரேஷன் வீதியிலுள்ள வீடொன்றில் இயங்கிவந்த இந்த போலி கச்சேரி பொலிஸாரால் நேற்று முன்தினம் சுற்றிவளைக்கப்பட்டது.

இதன்போது போலி ஆவணங்களை தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட 45 இறப்பர் முத்திரைகளையும் அங்கிருந்து கைப்பற்றியதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அவற்றுள் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்ற பதிவாளர், வவுனியா நீதவான் நீதிமன்றப் பதிவாளர், வைத்தியசாலைகள் சிலவற்றின் மாவட்ட வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் ஆகியோரின் பெயர்களிலான இறப்பர் முத்திரைகளும் அடங்கியுள்ளன.

இதுதவிர போலியாக தயாரிக்கப்பட்ட பல்வேறு ஆவணங்களும் சந்தேகநபர் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 54 வயதான ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். ஆட்டுப்பட்டித் தெரு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மனைவியை மீட்டுத்தரக் கோரிய கணவனின் உண்ணாவிரதம் நிறைவு

(கொழும்பு)

வெளிநாட்டிற்கு பணிப்பெண்ணாக சென்றுள்ள தனது மனைவியை மீட்டுத்தருமாறு கோரி கடந்த வியாழக்கிழமை முதல் உண்ணா விரத போராட்டத்தில் ஈடுபட்டுவந்த அந்த பெண்ணின் கணவர் தனது உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுக்காலை முடிவுக்கு கொண்டுவந்துள்ளார்.

திருகோணமலை, புல் மோட்டையைச் சேர்ந்த அபூபக்கர் முகமட் ரபீக் என்ற நபர் வெளிநாட்டிலுள்ள தனது மனைவியை மீட்டுத் தருமாறு கோரி கடந்த வியாழக்கிழமை முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்.

இவருடன் இவரது மூன்று பிள்ளைகளான பாத்திமா முபிசா (வயது 10) தரம் 5, முகம்மது வசீம் (வயது 8) தரம் 4, முகம்மது ரொசான் (வயது 3) ஆகியோரும் உண்ணாவிரதப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடரந்து குச்சவெளி பிரதேச சபைத்தவிசாளர் ஏ.முபாறக், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலாளர், அரச அதிகாரிகளை சந்தித்து மேற்படி விவகாரம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளதுடன் அவரது மனைவியை மீட்டுத்தருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் உறுதியளித்துள்ளார். இதையடுத்தே உண்ணாவிரத போராட்டம் நிறைவுக்குகொண்டு வரப்பட்டுள்ளது.

## வெளிநாடு செல்லும் ஆண்களுக்கு வட்டி இல்லாக் கடன்

வெளிநாடு செல்லும் ஆண் பணியாளர்களுக்கு வட்டியில்லாக் கடனை பெற்றுக்கொடுப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஆண் பணியாளர்கள் வெளிநாடு செல்வதற்கான ஆர்வத்தை அதிகரிக்கச் செய்வதே இதன் பிரதான நோக்கமாகும் என பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கல ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குடும்பங்களில் கணவன்மார் வெளிநாடு செல்வதற்கு தடையாகவுள்ள காரணிகளில், அவர்களே பணம் செலுத்தவேண்டியுள்ளமை பிரதான காரணியாக அமைகின்றது. இதில் விமானச் சீட்டுக்காகவும், வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்திற்கு செலுத்தும் கட்டணமும் முக்கியமானவையாகும். எனவே இந்த பணத்தை வட்டியில்லாக் கடனாக பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சர் டிலான் பெரேரா தீர்மானித்துள்ளார். இதன் பிரகாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் இந்தக் கடன் தொகை வழங்கப்படவுள்ளது. இத்தகைய குடும்பங்களிலுள்ள கணவன்மார்களுக்கு தொழில் பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை சகல வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கும் இருக்கின்றது எனவும் மங்கல ரந்தெனிய குறிப்பிட்டுள்ளார் அவர் தெரிவித்துள்ளார்.

## கிழக்கு மாகாணத்தில் கனிமவள ஆய்வு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கனிமவள ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

முதற்கட்ட ஆய்வு நடவடிக்கைகள் திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வுகள் குறித்த தரவுகள் திரட்டப்பட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்படவுள்ளது. இதனடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் விரைவில் ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை தயாரிக்கவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்காலத்தை இருளாக்கும் கூட்டமைப்பின் சுயநல அரசியல்

**தமிழ்த் தலைவர்கள் இனப்பிரச்சினைகளைத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாகப் பார்க்காமல் பயன்படுத்தப்பட வேண்டிய பிரச்சினைகளாகவே பார்த்தார்கள். தேர்தல் காலங்களில் இனப்பிரச்சினைகளைப் பிரதான பேசுபொருளாக்கி மக்களின் வாக்குகளைப் பெற்றார்கள். இந்தப் பிரச்சினைகள் இருப்பதுதான் தங்கள் பதவிக்கு உத்தரவாதம் என்பது போல நடந்துகொண்டார்கள்.**

சங்கர சிவன்

தமிழ் மக்களின் எதிர்காலம் என்ன என்ற கேள்வி தமிழ் அரசியல் வட்டாரங்களில் எழுந்திருக்கின்றது. கூட்டமைப்புத் தலைவர்களும் இக்கேள்வியைக் கேட்கின்றார்கள். கூட்டமைப்புக்கு வெளியே உள்ளவர்களும் இதே கேள்வியைக் கேட்கிறார்கள். தமிழ் மக்களின் நலன்களைப் பாதிக்கக்கூடிய காணி அபகரிப்பு, திட்டமிட்ட குடியேற்றம், இன விகிதாசாரத்தை மாற்றியமைத்தல் போன்றவற்றை முன்னிலைப்படுத்திக் கூட்டமைப்பினர் இக்கேள்வியை எழுப்புகின்றனர். அரசியல் தீர்வில் அக்கறை இல்லாதிருப்பதன் மூலம் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நலனுக்கு விரோதமாகச் செயற்படுவதாகக் குற்றஞ்சாட்டிக் கூட்டமைப்புக்கு வெளியே உள்ளவர்கள் இக்கேள்வியைக் கேட்கின்றனர்.

இரு பக்க நியாயங்களையும் சீர்தூக்கிப் பார்ப்பதன் மூலமே தமிழ் மக்கள் சரியான நிலைப்பாட்டுக்கு வர முடியும்.

காணி அபகரிப்பு, இன விகிதாசாரத்தை மாற்றும் முயற்சி போன்ற அரசாங்க செயற்பாடுகள் பற்றிக் கூட்டமைப்பினர் கூறுவதை ஒதுக்கித் தள்ள முடியாது. அக்குற்றச்சாட்டுகளில் நியாயம் இல்லாமலில்லை. அத்தியாவசிய தேவைக்கு மேலதிகமாகவே காணிகள் கையகப்படுத்தப்படுகின்றன. ஒரு புறத்தில் இராணுவம் கையகப்படுத்திய காணிகள் விடுவிக்கப்படுகின்றன அதேவேளை, மறுபுறத்தில் தேவைக்கு அதிகமாகக் காணிகள் கையகப்படுத்தப்படுகின்றன.

ஒரு நாட்டில் சிறுபான்மையினர் செறிந்து வாழும் பிரதேசத்தில் அவர்களுக்குப் பாதகமான விதத்தில் இன விகிதாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்துவது சந்தேகத்துக்கு இடமின்றி இனவிரோத செயற்பாடாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுதந்திரத்துக்கு முன்னரே இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது. சுதந்திரத்துக்குப் பின்னரும் சில இடங்களில் ஏற்பட்டிருக்கின்றது. உதாரணமாகத் திருகோணமலை மாவட்டத்தைக் கூறலாம். 1901முதல் 1981 வரையான காலப்பகுதியில் இம்மாவட்டத்தில் தமிழ் மக்களின் விகிதாசாரம் 60 வீதத்திலிருந்து 36.4 வீதமாகக் குறைந்தது. சிங்கள மக்களின் விகிதாசாரம் 1920களிலேயே அதிகரிக்கத் தொடங்கியது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஸ்தாபகரான டீ.எஸ். சேனநாயக்க ஆரம்பித்த குடியேற்றத் திட்டம் இந்த அதிகரிப்பைத் தொடக்கி வைத்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலங்களிலேயே இன விகிதாசார மாற்றம் பெருமளவில் இடம்பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தலைவர்கள் இனப்பிரச்சினைகளைத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளாகப் பார்க்காமல் பயன்படுத்தப்பட வேண்டிய பிரச்சினைகளாகவே பார்த்தார்கள். தேர்தல் காலங்களில் இனப்பிரச்சினைகளைப் பிரதான பேசுபொருளாக்கி மக்களின் வாக்குகளைப் பெற்றார்கள். இந்தப் பிரச்சினைகள் இருப்பதுதான் தங்கள் பதவிக்கு உத்தரவாதம் என்பது போல நடந்துகொண்டார்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்த போதெல்லாம் தமிழ்த் தலைவர்கள் இடதுசாரி எதிர்ப்புக்கு முக்கியத்துவம் அளித்து அச்சந்தர்ப்பங்களைக் கைவிட்டார்கள். பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் பிரதான சரத்துகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு1965ஆம் ஆண்டு கிடைத்த சந்தர்ப்பத்தையும் அதே ஒப்பந்தத்தின் முக்கிய சரத்துக்களை அரசியலமைப்பில் உள்ளடக்குவதற்கு ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தையும் உதாரணமாகக் கூறலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களும் இதே பாரம்பரியத்திலேயே செயற்படுகின்றார்கள். காணி பறிபோகின்றது, குடியேற்றம் இடம்பெறுகின்றது, இன விகிதாசாரம் மாறுகின்றது என்று மேடைக்கு மேடை கண்ணீர்க் கதை சொல்லி வாக்குப் பொறுக்கும் இவர்கள் இனப்பிரச்சினைகளின் தீர்வுக்காக உருப்படியான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. இப்பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி இவர்கள் நடத்துகின்ற ஆர்ப்பாட்டங்களும், உண்ணாவிரதங்களும் தலைவர்களின் அரசியல் இருப்பைத் தக்கவைப்பதற்கான முயற்சிகளேயொழியப் பிரச்சினைகளின் தீர்வுக்கான முயற்சிகளல்ல.

கூட்டமைப்புத் தலைவர்கள் பின்பற்றுவது தமிழ் மக்களின் பிரச்சினைகளைச் சொல்லி வாக்குப் பெறும் அரசியலேயொழிய பிரச்சினைகளின் தீர்வுக்காக முயற்சிக்கும் அரசியலல்ல என்பதாலேயே கூட்டமைப்பு கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகின்றது.

ஒவ்வொரு தேர்தலிலும் மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிடும் வகையில் கண்ணீர்க் கதைகளைக் கூறித் தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ளும் கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையின் தீர்வுக்காகச் சிறிதளவு முயற்சிகூட மேற்கொள்ளாதிருப்பதால் தமிழ் மக்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே காணப்படுகின்றது. இனப்பிரச்சினையின் தீர்வைப் பொறுத்த வரையில் இவர்கள் தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றார்கள். அரசியல் தீர்வில் அக்கறை உள்ளவர்களென்றால் நடைமுறைச் சாத்தியமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்று நான்கு வருடங்களாகக் கதையளக்கின்றார்கள். சர்வதேச சமூகம் எவ்வாறான தீர்வைப் பெற்றுத் தரும் என்ற கேள்விக்கு இவர்களிடம் பதில் இல்லை. சர்வதேச சமூகம் பற்றிக் கூறுவதன் மூலம் கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது என்ற குற்றச்சாட்டை வார்த்தைகளால் மறுதலிப்பதில் அர்த்தமில்லை. செயல் மூலம் மறுதலிக்க வேண்டும். குறைந்த பட்சம் எவ்வாறான தீர்வைச் சர்வதேச சமூகம் பெற்றுத் தரும் என்பதையும் அரசியல் தீர்வில் எந்தெந்த நாடுகள் எவ்வாறான அக்கறையை வெளிப்படுத்துகின்றன என்பதையும் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். கூட்டமைப்புத் தலைவர்களால் இதைச் செய்ய முடியாது. ஏனென்றால் இனப்பிரச்சினையின் தீர்வில் இந்தியாவைத் தவிர வேறெந்த வெளிநாடும் அக்கறை கொள்ளவில்லை.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலில் இல்லை என்பதை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரிப்பதிலிருந்தும் மாகாண சபையை அரசியல் தீர்வை அடைவதற்காகப் பயன்படுத்த மறுப்பதிலிருந்தும் விளங்கிக்கொள்ளலாம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைவதற்கான நகர்வில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் மாகாண சபையும் பிரதான இடம்வகிக்கின்றன. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றிய தமிழ் மக்களின் நிலைப்பாட்டை எடுத்துரைப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு பொருத்தமான இடம். அரசாங்கமும் தமிழ்த் தலைமையும் பேசுவதிலும் பார்க்கத் தமிழ்த் தலைமை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எல்லாக் கட்சிகளுக்கும் தமிழர் தரப்பு நியாயத்தை எடுத்துக் கூறுவதே மேலானது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அதைச் செய்ய முடியும். தெரிவுக்குழுவை நிராகரிப்பதற்கு கூட்டமைப்பு கூறும் காரணங்கள் அனைத்தும் நொண்டிக் காரணங்கள். தெரிவுக்குழுவில் அரசாங்கம் அதன் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்களுக்குப் பாதகமான முடிவை எடுத்துவிடும் என்று சொல்கின்றார்கள். இது சரியான நியாயமென்றால் நாடாளுமன்றத்தை கூட்டமைப்பு பகிஷ்கரிக்க வேண்டுமே. அங்கேயும் அரசாங்கம் பெரும்பான்மை பலத்துடன் தானே இருக்கின்றது. நாடாளுமன்றத்துக்கு ஒரு நியாயம் தெரிவுக் குழுவுக்கு இன்னொரு நியாயமா?

பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்பு செய்வதற்காகவே தெரிவுக்குழு என்று இன்னொரு குண்டைத் தூக்கிப் போடுகின்றார்கள். இது தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றும் வேலை. பதின்மூன்றாவது திருத்தத்தை வலுக்குறைப்பு செய்வது அரசியலமைப்புத் திருத்தத்தோடு சம்பந்தப்பட்டது. அவ்வாறான திருத்தத்துக்குச் சாதகமாகத் தெரிவுக் குழு தீர்மானித்தாலும் அது நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற வேண்டும். இப்படியான அரசியலமைப்புத் திருத்தத்துக்குத் தேவைப்படும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அரசாங்கத்துக்கு கிடைப்பது சாத்தியமில்லை. பதின்மூன்றாவது திருத்தத்தில் மாற்றம் செய்வதற்கு .அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியுற்றதை நினைவூட்டலாம்.

அரசியல் தீர்வுக்குச் சாதகமானவர்களும், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பார்கள். எனவே, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றுவதன் மூலம் தமிழ் மக்களுக்குச் சில நன்மைகள் கிடைக்கலாம். கிடைக்காமல் போனாலும் தமிழ் மக்கள் இழக்கப்போவது எதுவுமில்லை.

வடமாகாண சபையின் அதிகாரம் இப்போது கூட்டமைப்பின் கையில் இருக்கின்றது.இந்த அதிகாரத்தைச் சரியான முறையில் பயன்படுத்தி அரசியல் தீர்வை நோக்கிச் செல்ல முடியும். ஆனால், கூட்டமைப்புத் தலைமை மாறான நோக்கத்துக்காகவே மாகாண சபையைப் பயன்படுத்துகின்றது. மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகவும் ஏற்க முடியாது என்று கூறியவர்கள் மாகாண சபையினால் ஒரு நன்மையும் இல்லை என்று காட்ட இப்போது முயற்சிக்கின்றார்கள். மாகாண சபைக்கு எதிரான இந்தச் சதி தமிழ் மக்களுக்கு செய்யும் மிகப்பெரிய துரோகம். அரசியுல் தீர்வைத் தடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டையே இப்படி வெளிப்படுத்துகின்றார்கள்.

பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வடமாகாண முதலமைச்சர் இப்போது முன்வைக்கிறார். நல்ல கோரிக்கை. ஆனால், நோக்கம் நல்லதல்ல.

**ஒவ்வொரு தேர்தலிலும் மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிடும் வகையில் கண்ணீர்க் கதைகளைக் கூறித் தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக்கொள்ளும் கூட்டமைப்புத் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையின் தீர்வுக்காகச் சிறிதளவு முயற்சிகூட மேற்கொள்ளாதிருக்கின்றனர். தீர்வு காண்பதற்கான முயற்சியில் விசுவாசமாக ஈடுபடாமல் பிரச்சினைகள் பற்றிப் பேசிப் பேசியே தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ளும் கூட்டமைப்பினரில் நம்பிக்கை வைக்கும் வரை தமிழ் மக்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே இருக்கும்.**

பதின்மூன்றாவது திருத்தத்தைமுழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வராவிட்டால் மாகாண சபையைச் செயற்படுத்த முடியாது என்று கூறுவதற்காகவே இக்கோரிக்கை. கைவசமுள்ள அதிகாரங்களை முதலில் நடைமுறைப்படுத்திக்கொண்டு முழுமையான அதிகாரங்களுக்கான கோரிக்கையை முன்வைப்பது தான் ஆக்கபூர்வமான அணுகுமுறை.

புதின்மூன்றாவதுதிருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை முன்வைப்பதற்கு மிகவும் பொருத்தமான இடம் நாடாளுமன்றத் தெரிவுக் குழு. யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு தனிக் குரல் எழுப்புவதிலும் பார்க்கத் தெரிவுக்குழுவில் மற்றைய கட்சிகளுடன்இணைந்து குரல் எழுப்புவது கூடுதலான பலனைத் தரும். கூட்டமைப்புக்கு வெறும் சிலுசிலுப்பு வேண்டுமேயொழிய பலகாரம் தேவையில்லை.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியில் விசுவாசமாக ஈடுபடாமல் பிரச்சினைகள் பற்றிப் பேசிப் பேசியே தங்கள் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்ளும் கூட்டமைப்பினரில் நம்பிக்கை வைக்கும் வரை தமிழ் மக்களின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவே இருக்கும்.





# பரிந்துரைகளை முன்னெடுக்க ஆலோசனை தேவையில்லை

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழு. எனும் கட்டமைப்பை நாமே ஏற்படுத்தினோம். அதனை எவ்வாறு செயற்படுத்த வேண்டும் என யாரும் எமக்குச் சொல்லித்தரத் தேவையில்லை.

மற்றவர்களின் நிகழ்சிநிரல் படி நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்படமாட்டாது என அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக செயற்படுத்த வேண்டுமென இலங்கை அரசாங்கத்தை கேட்கும் தீர்மானமொன்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதன் அறிக்கை கிடைத்தவுடன் நாடாளுமன்றத்திலும் அது சமர்ப்பிக்கப்பட்டதோடு அதன் பரிந்துரைகளை துரிதமாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நல்லிணக்க ஆணைக் குழுவை நியமித்தபோது, அதனால் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது எனவும் அதனை அரசாங்கம் முன்னெடுக்காது எனவும் சில தரப்பினர் விமர்சித்தனர்.

ஒரு பக்கச் சார்பாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் 50 வீதத்துக்கும் அதிகமானவை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் முன்பு நல்லிணக்க ஆணைக்குழுவை விமர்சித்தவர்கள் அதனை ஏற்கும் நிலை இன்று உருவாகியுள்ளது. இந்த மாற்றத்தை நாம் வரவேற்கிறோம். இந்த ஆணைக் குழுவினால் எதுவும் நடக்காது என்றவர்கள் இன்று அதன் சிபார்சுகளை அமுல்படுத்துமாறு கேட்கின்றனர்.

எஞ்சியுள்ள அநேகமான பரிந்துரைகளை செயற்படுத்த அரசியலமைப்பில் திருத்தம் முன்னெடுக்க வேண்டும். மக்களின் பங்களிப்புடனே இவற்றை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்றார்.

## தலைமைத்துவ சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள சஜித்திற்கு அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபையில் கலந்து கொள்ளுமாறு அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவுக்கு விசேட அழைப்பை விடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதன்படி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கூடவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ சபையின் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, அன்றையதினம் இடம்பெறும் தலைமைத் துவசபைக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அதுகோராலவும் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

## போலி அனுமதிப்பத்திரங்களுடன் 300 பேருந்துகள் சேவையில்



போலியான அனுமதிப் பத்திரங்களை பயன்படுத்தி சுமார் 300 இற்கும் அதிகமான பேருந்துகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் சேவையில் ஈடுபடுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கிடையிலான தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

பேருந்து உரிமையாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, சங்கத்தின் தலைவர் சரத் விஜித இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு போலியான அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்தி பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதால் தாம் பெரிதும் பாதிப்படைவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## காணாமற் போன உறவினர்களுக்கு நட்டஈடு வழங்க பரிந்துரைக்கப்படும்

### ஜனாதிபதி ஆணைக்குழு

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் கண்டு பிடிக்கப்படாவிட்டால், அவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குமாறு அரசாங்கத்திடம் பரிந்துரை செய்யவுளளதாக ஜனாதிபதி ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பாக ஆராய்ந்துவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

புலிகளினால் காணாமற் போகச் செய்யப்பட்டதாகக் கூறபபடும் 148 பேர் தொடர்பான முறைப்பாடுகளை நேற்று முன்தினம் பெற்றுக்கொண்ட நிலையில், ஊடகங்களிடம் பேசும்போது ஆணைக்குழுவின் தலைவர் மகஸ்வெல் பரணகம இது தொடாபாக மேலும் தெரிவிக்கையில்,

காணாமற்போனவர்களை கண்டுபிடிக்க முடியாமல் போனால் அவர்களின் உறவினர்களுக்கு, அவர்களில் தங்கி வாழ்ந்தவர்களுக்கு இழப்பீடு கொடுக்குமாறு நாங்கள் அரசாங்கத்திடம் பரிந்துரை செய்வோம். சிலர் தகவல்களை வழங்க அச்சப்படுவதாக எங்களுக்கு தகவல் கிடைத்துளளது.

அப்படியான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டால் எங்களிடம் மக்களை முறைப்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

இதேவேளை, கொழும்பு கொஹுவலை பகுதியில் அமைநதுள்ள இந்த ஜனாதிபதி ஆணைககுழுவின் அலுவலகத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட பலர் தங்களின் காணாமற்போன உறவினர்கள் தொடர்பான முறைப்பாடுகளை செய்திருந்தனர்.

தங்களின் உறவினர்களை விடுதலைப் புலிகள் பிடித்துச் சென்றதாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த பலர் இங்கு முறைப்பாடு செய்தனர்.

தமது உறவினர்கள் கண்டு பிடிக்கப்படாவிட்டால் தமக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் அரசாங்கத்திடம் கேட்டுக்கொண்டனர். உயிரிழந்த மற்றும் காணாமற்போனவர்களின் பெற்றோர்கள் ஒன்றியம் என்ற அமைப்பு இந்த முறைப்பாட்டைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தது.

மூன்று ஆண்டுகளாக தென்னிலங்கையில் மட்டும் இயங்கி வந்த தங்களின் அமைப்பு, வடக்கிலும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளால் காணாமற்போனவர்களின் பிரச்சினை நிலவுவதால் அங்கும் சென்று பணியாற்றி வருவதாக அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் ஆனந்த ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் கல்வித்தரம் உயர்ந்த நிலையில் உள்ளது



(கொழும்பு)

நாட்டில் கல்வித்தரம் மேம்பட்டுள்ளது. நாட்டின் கல்வி தொடர்பில் மேற்கொள்ளப்படும் தவறான பரப்புரைகளை களைவதற்கு சர்வதேச மட்டத்தில் பதிலை வழங்க முடியும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி பெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கல்வித்தரம் உயர்ந்த நிலையில் காணப்படுகிறது. அதற்கு சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் வெற்றிபெற்று நாடு திரும்பியுள்ள இந்த மாணவர்கள் ஒரு சிறந்த சாட்சியாக உள்ளனர்.இந்த நிலையில், நாட்டின் கல்வி தொடர்பில் மேற்கொள்ளப்படும் தவறான பரப்புரைகளுக்கு இதன்மூலம் பதில் வழங்க முடியும் என்றும் கல்வியமைச்சர் குறிப்பிட்டார்.

## மேர்வின் சில்வாவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது



(கொழும்பு)

பொது உறவு மற்றும் நலன்புரி துறை அமைச்சர் மேர்வின் சில்வாவை மீண்டும் களனியின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தொகுதி அமைப்பாளருக்கான சந்தர்ப்பததை அளிக்கப் போவதில்லை என்று களனி பிரதேச சபையின் உறுப்பினர்கள் உறுதி கொண்டுள்ளனர்.

பிரதேச தலைவர் உள்ளிட்ட 12 உறுப்பினர்கள் களனி பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் ஊடக சந்திப்பொன்றை நடத்தினர்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதேச சபையின் உப தலைவர் சமில துமிந்த ஆளும் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதேச சபைகள், நகர சபைகள் என்பனவற்றின் வரவு செலவுத் திட்டம் தோல்வியடைவதற்கான பொறுப்பை அமைச்சர் மேர்வின் சில்வாவே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

## மேல்மாகாண சபைத் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னணி தனித்துப்போட்டி

(கொழும்பு)

மேல்மாகாணசபைத் தேர்தலில் கொழும்பு, கம்பகா மற்றும் களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் ஏணிச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

அதேவேளை எதிரணியில் செயலாற்றுகின்ற அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரே எதிர்க்கட்சி கூட்டணியாக பொதுச சின்னத்தில் போட்டியிடும் நிலைமை உருவாகுமானால் தனித்துப் போட்டியிடும் தீர்மானம் மறுபரிசீலனை செய்யப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல்குழு கூட்டம் கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீசூர்யா விடுதியில், கட்சித் தலைவர் மனோகணேசன் தலைமையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. இதன் போதே இவ்வாறு தீர்மானம் எட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் கட்சியின் பதினேழு பேர் கொண்ட அரசியல்குழு அங்கத்தவர்களுடன், விசேட அழைப்பின் பேரில் கம்பகா, களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்டங்களைச் சேர்ந்த கட்சி முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

அரசியல்குழுவில் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் கட்சியின் பிரதித் தலைவரும், மேல் மாகாண சபை உறுப்பினருமான கலாநிதி நல்லையா குமரகுருபரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

மேல்மாகாணத்தின் கொழுமபு, கம்பகா மற்றும் களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும், எமது சொந்தச் சின்னமான ஏணிச் சின்னத்தில் நமது கட்சி தனித்துத் போட்டியிடும்.

கட்சித்தலைவர் மனோ கணேசன், நேரடியாக கொழுமபு மாவட்ட தேர்தலில் களமிறங்கி, மேல்மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் போட்டியிடும் நமது வேட்பாளர் அணியினருக்கு தலைமை தாங்குவார்.

தமிழ், முஸ்லிம் மக்களை சொல்லொணா இன-மத ஒழிப்புகளுக்கும், ஒட்டுமொத்த நாட்டு மக்களை சமூக, பொருளாதார, தொழில் வர்த்தக, சட்ட ஒழுங்கு சீர்குலைவுகளுக்கும் ஆளாக்கியுள்ள இந்த அரசாங்கம் தோற்கடிக்கப்பட வேண்டும்.

இந்த அரசு இன்று நிலைத்திருப்பதற்கு ஒரே காரணம், பொது எதிரணிக் கூட்டணி இல்லாமையாகும். பலமிக்க ஒற்றுமைப்பட்ட எதிரணி உருவாகுமானால் இந்த அரசாங்கத்தை ஆறு மாதத்தில் தோற்கடிக்க முடியும் பொது எதிரணி அமைக்க ஜனாதிபதி தேர்தல் அல்லது பொதுத்தேர்தல் வரை காத்திருக்கத் தேவையில்லை.

இந்த மாகாணசபைத் தேர்தலகள் மூலமாகவே இந்த அரசை வீழ்த்தும் முயற்சியை ஆரம்பிக்கலாம். ஆகவே ஐக்கிய தேசிய கட்சி, ஜனநாயக கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளை குறைந்த பட்ச வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்று சேர அழைக்கிறோம் என்றார்.

# ஆவணங்களை தொலைத்த மக்களுக்கு நடமாடும் சேவைகள் வரப்பிரசாதமாகும்

## கரைச்சி பிரதேச செயலாளர் நாகேஸ்வரன்




(கிளிநொச்சி)

கடந்த யுத்த அனர்த்தங்களினால் தமது ஆவணங்களை தொலைத்துள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு அவர்களின் வாழ்க்கைக்கு தேவையான ஆவணங்கள் நடமாடும் சேவைகளின் ஊடாக இலவசமாக வழங்கப்படுவது பெரும் வரப்பிரசாதமாகும் என கரைச்சி பிரதேச செயலாளர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை பதிவாளர் நாயகத்தின் சேவைகளான சட்ட ஆவணங்களைப் பொதுமக்களுக்கு வழங்கும் நடமாடும் சேவை கிளிநொச்சி கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

"மக்களுக்கான சேவைகள் அவர்களின் காலடியில் வழங்க வேண்டுமென்ற அரசின் கொள்கைக்கேற்ப உருவாக்கப்பட்ட பிரதேச செயலகங்கள் அவ்வப்போது அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து இது போன்ற சேவைகளை வழங்கி வருகின்றன.

அரச துறை நிறுவனங்களின் மூலம் நாம் செய்து வரும் இச் சேவையை கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் வழங்க முன் வந்துள்ளது. காலத்திற்கு காலம இது போன்ற சேவைகளை நாம் தொடர்ந்து வழங்க ஆவன செய்வோம்." என்றார்.

இச்சேவையில் பிறப்பு , இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்களை பெறுவதற்கான விண்ணப்பங்கள், காலங்கடந்த பிறப்பு, இறப்பு விவாகப்பதிவுச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஆகியவை பொறுப் பேற்கப்பட்டன. அத்துடன் உத்தேச வயதுச் சான்றிதழ் வழங்கலுக்கான பதிவும் மேற் கொள்ளப்பட்டதுடன் அடையாள அட்டைகளுக்கான புகைப் படங்கள் யாவும் இலவசமாக எடுக்கப்பட்டன.

60 வயதை அடைந்த முதியோருக்கான அடையாள அட்டை வழங்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு அன்றைய தினமே அடையாள அட்டைகளும் விநியோகிக்கப்பட்டன.

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பொதுமக்கள் 700 பேர் வரையில் இச் சேவையில் பங்கு கொண்டு பயன் பெற்றனர். சமாதான நீதிவான்களின் சேவையும் கிடைப்பதற்குரிய வழி வகைகளும் மேற்கொள்ளப்பட்டன. (90)

## விபரத் திரட்டு

வரணிப்பிரதேசத்தில் கடந்த கால யுத்தப் பாதிப்பு பதிவுகள் கிராம சேவகர் ஊடாக மேற்க் கொள்ளப்படுகின்றன். இப பதிவு நடவடிக்கையில் யுத்தத்தால் ஊனமுற்ற காணாமற் போனோர் மற்றும்சொத்திழப்பு போன்ற பல வித விடயங்கள் ஆராயப்பட்டு விண்ணப்பப்படிவம் பூரணப்படுத் தப்படுகின்றன. (150)

# சிறுமி மீதான வன்புணர்வு இளைஞனுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பொலிஸ் பிரிவில் அச்சுவேலிப் பகுதியில் 15 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கிய இளைஞர் ஒருவரை அச்சுவேலிப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் பாரப்படுத்தியதாகவும் அவரை நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டிருப்பதாகவும் யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொகாண்டயஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். கடந்த 06ஆம் திகதி அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் இவ்விடயம் குறித்து செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அச்சுவேலிப் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் சந்தேகநபரை எதிர்வரும் தை மாதம் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதனைத் தொடர்ந்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டடுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இளவாலை பொலிஸ் பிரிவில் கடந்தவாரம் இருபதாயிரம் ரூபா பெறுமதியான வைரவர் சிலை ஒன்று கோயில் ஒன்றில் இருந்து காணாமற் போயிருப்பதாகவும் முறைப்பாடு ஒன்று பதிவாகியிருப்பதாகவும் தெரிவித்த அவர் சந்தேக நபர் கைது செய்யப்படவில்லை அவரை கைது செய்வதற்காக புலனாய்வு மேற் கொள்ளப் பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (பா)

## வீதிகளில் குப்பைகள் போக்குவரத்துக்கு இடையூறு

(குருநகர்)

யாழ்.வண், வடமேற்கு சிவப்பிரகாசம் வீதியிலும், யாழ்.கே.கே.எஸ்.வீதி இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலும் குப்பைகள் வீதி ஓரங்களில் காணப்படுகிறது.

இரவு நேரங்களில் அப்பகுதியை அண்மித்த குடியிருப்புகளில் இருந்து வீட்டுக் கழிவுப் பொருட்களை மக்கள் வீதியோரங்களில் போடுவதால் அப்பகுதிகள் குப்பை நிறைந்த இடங்களாக காட்சி அளிக்கின்றன.

அதேவேளை கால் நடைகள் மற்றும் நாய்கள் அவற்றில் தேடுதல் போடுவதால் குப்பைகள் சிதறப்பட்டு வீதிகள் மாசடைகின்றன. அதனால் அவற்றில் இருந்து துர்நாற்றம் வீசுகின்றன.

அதிக போக்குவரத்துக்களைக் கொண்ட மேற்படி வீதிகளால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனம் மற்றும் பாதசாரிகள் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (68)

## சிறப்புற நடைபெற்ற மாற்றுவலுவுடையோர் தினம்

(கொடிகாமம்)

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களமும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய மாற்று வலுவுடையோர் தினம் நிகழ்வு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

மாற்றுவலுவுடையோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. மேலும் மாற்று வலுவுடையோருக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. (130)

# பொன்விழாக்காணும் யாழ்.மறைமாவட்ட ஆயர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை இம் மாதம் 21ஆம் திகதி தனது குருத்துவத்தின் 50ஆவது வருட நிறைவான பொன்விழாவைக் கொண்டாடுகிறார்,

மன்னார் மறைமாவட்டம் புதிதாக உருவான போது முதலாவதாக பொறுப்பேற்ற ஆயர் என்ற பெருமைக்குரியவர். இவரது பொன்விழாவை ஒட்டி எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (114)

# சிறுவர் வங்கிக் கணக்கு பெறுமதி மிக்கபரிசில்

(யாழ்.நிருபர்)

பாடசாலை புதிய தவணை ஆரம்பத்தை முன்னிட்டு சம்பத் வங்கியில் சிறுவர்கணக்கை ஆரம்பிப்பவர்களுக்கு வங்கி பெறுமதி மிக்க பரிசுகளை வழங்கிவருகிறது.

அந்த வகையில் பன்னிரண்டாயிரம் ரூபாய் வைப்புக்கணக்கிற்கு பாடசாலை பயிற்சிப் புத்தகம், பாடசாலை உபகரணம், மற்றும் ஆயிரம் ரூபா பெறுமதியான டி.எஸ்.ஐ.வவுச்சர் வழங்கப்படுவதுடன் ஏழாயிரத்து ஐநூறு ரூபா வைப்பிற்கு பாடசாலை பயிற்சிபுத்தகம், பாடசாலை உபகரணம் மற்றும் ரூபா ஐநூறு பெறுமதியான டி.எஸ்.ஐ.வவுச்சர் என்பன வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அரியவாய்ப்பு இரண்டாயிரத்துபதின்நான்காம் ஆண்டு ஜனவரி மாதம் முப்பத்தொராம் திகதி வரை பணம் வைப்பிலிடுபவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுவது குறிப்படத்தக்கது. (54)

## முரசின் இன்றைய பலன்



(15.12.2013 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 29 ஆம் திகதி.
கார்த்திகை நட்சத்திரம் ரோகினி. மு.இ. 09.22 வரை.
பின் திரயோதசி/சித்தம்
இராகுகாலம் 04.51 - 06.21 வரை. சுபநேரம் 09.21 - 10.51 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உற்சாகத்துடன் ஈடுபட்டதால் வெற்றிக்கான திறவு கோல் நடைபோட்டது, சகோதரருடன் ஏற்பட்ட விரிசல் விட்டுக்கொடுப்பினால் மறைதல். |
| ரிஷபம் | கட்டுப்பாட்டை வெறுத்ததால் விவாகத்திற்கு உடன்பட மறுத்தல், வைத்தியரின் ஆலோசனையின்றி வில்லைகளைப் பாவித்ததால் தேகநலம் பாதிப்படைதல். |
| மிதுனம் | வியாழ சுகமின்மையால் ஊழியர்களின் நடத்தையை கண்டிக்காது விட்டதனால் பிரச்சினை விலகி விடல், விரிசலடைந்திருந்த அயலவரின் உறவு மீண்டும் சகஜ நிலைக்கு வரல். |
| கடகம் | அவசர குடுக்கையாக இருக்காது பொறுமையைக் கடைப்பிடித்ததால் நன்மை, நெருங்கிய வருடன் மனக் குறைகளைக் கொட்டித் தீர்த்ததால் சுமை இறங்குதல். |
| சிம்மம் | மன உறுதியுடன் செயற்பட்டதால் தேங்கியிருந்த வேலைப்பளு குறைவடைதல், நம்பி எதிர்பார்த்திருந்த இடத்திலிருந்து பணம் வந்ததால் மகிழ்வு. |
| கன்னி | தேகநலத்தைப் பார்க்காது பணியில் மூழ்கிக் கிடந்தமை சௌக்கியக் குறைபாட்டை ஏற்படுத்தல், மனையாளுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடு விலகிச் செல்லல். |
| துலாம் | தவறு என்று தெரிந்ததால் மன்னிப்புக் கேட்டு பிரச்சினையை வளரவிடாது தக்கவைத்தல், அதிர்ஷ்ட இலாபச்சீட்டினால் பணவரவுண்டு. |
| விருச்சிகம் | வந்த துன்பம் கண்டு வாடி நில்லாமை தொழில் சிறப்புமேன்மையடைதல், பிறரிடம் முக்கிய அலுவலை நம்பி ஒப்படைக்காது நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். |
| தனுசு | வங்கியில் பணம் இன்றியுள்ள காசோலையைப் பெற்றதால் கவலை, மனத்தை அலையவிடாது பாதுகத்ததினால் பணியில் சிறப்பைக் காணுதல். |
| மகரம் | நோய் குணமடைய தெய்வதலத்தை நாடல், சகோதரியின் நல்வாழ்வை முன்னிட்டு உதவி செய்ய முன் வருதல். |
| கும்பம் | நீண்ட நாட்கள் இழுபட்டுக் கொண்டிருந்த நிலப் பிரச்சினை சுமுகமாதல், போலிநாணயத்தை உரைத்துப் பார்த்ததால் மோசடியிலின்றும் தப்புதல். |
| மீனம் | குடும்பத்தில் விரிசல் ஏற்படாது பொறுமையைக் கடைப்பிடித்தல், பழைய நிலுவை தொலைபேசி உரையாடல் மூலம் வந்தடைதல். |

# மைலோ கிண்ணம் வென்றது நாவாந்துறை சென். மேரிஸ்










ஆட்டநாயகன், தொடர் நாயகன் யூட்




சிறந்த கோல் காப்பாளர் டினேஸ்

(யாழ்ப்பாணம்)

மைலோ வெற்றிக் கிண்ணத்தை நாவாந்துறை சென். மேரிஸ் அணி கைப்பற்றிக்கொண்டது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுச் செயலகப் பிரிவினரால் முதன் முறையாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை லீக் அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மைலோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது.


இதில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியும், நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மோதின. இரு அணிகளுமே சமபலம் கொண்ட அணி என்பதால் இப்போட்டி பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால், ஆரம்பம் முதலே நாவாந்துறை சென். மேரிஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. குறிப்பாக, அவ் வணியின் யூட் எதிரணிக்கு அச்சுறுத்தும் வகையில் ஆடினார். முற்பாதி ஆட்டத்தின் 9ஆவது நிடத்திலும், தொடர்ந்து 12ஆவது நிமிடத்திலும் கோல் அடிக்கும் இரு வாய்ப்புக்களை நாவாந்துறை சென். மேரிஸ் அணி கோட்டை விட்டது. இருப்பினும் தொடர்ந்தும் வேகமான முறையில் ஆடி நாவாந்துறை சென். மேரிஸ் அணி முற்பாதி ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் யூட் அதிரடியான முறையில் கோல் ஒன்றைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். இந்நிலையில் முற் பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் பாசையூர் சென். அன்ரனீஸ் செயற்பட்டபோதும், நாவாந்துறை சென். மேரிஸ் அணியின் தடுப்பணையைத் தாண்ட முடியவில்லை. தொடர்ந்தும் இரு அணிகளும் கோலைப் பெற்றுக்கொள்ள முனைப்புடன் முட்டிமோதின. தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய சென். மேரிஸ் அணி பிற்பாதி ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் நட்சத்திர வீரர் யூட்டினால் கோல் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சென். அன்ரனீஸ் அணியால் எடுத்த முயற்சி யாவும் முறியடிக்கப்பட்டது. இறுதியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதை நாவாந்துறை சென். மேரிஸ் அணி வீரர் யூட், சிறந்த கோல் காப்பாளராக பொலிகண்டி விண்மீன் அணியைச் சேர்ந்த டினேஸ் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை, போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் வீரர்கள், விருந்தினர்கள், பாண்ட் மற்றும் நாதஸ்வர இசை முழங்க மைதான மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அறிமுக நிகழ்வுகள் இடம்பெற்றன. இப்போட்டி நிகழ்வின் முதன்மை விருந்தினரான பிரதி சபாநாயகர் சண்டிமல் வீரக்கொடி, வடக்குமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், தெற்காசிய மைலோ நிறுவன அதிகாரி உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் இரு அணி ஆதரவாளர்கள் உட்பட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இரசிகர்கள் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத் தக்கது.

(எஸ்.பி, 48,93,20,114)








# இங்கிலாந்து மீண்டும் திணறல்

(பேர்த்)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி திணறி வருகின்றது.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி அவுஸ்ரேலியாவின் பேர்த்தில் நடைபெற்று வருகின்றது. இதில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக ஆறு விக்கெட்டுக்களை இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாவது நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது.

சதமடித்து அசத்திய ஸ்மித்தின் விக்கெட்டை விரைவாக வீழ்த்தப்பட்ட அதே வேளை, ஏனைய விக்கெட்டுக்களும் விரைவாக சரிக்கப்பட்டது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 383 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஸ்மித் 111, ஹடின் 55, ஜோன்சன் 39, வோர்னர் 60 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீசசில் ஸ்ருவெர்ட் புரொட் மூன்று, ஸ்வான், அண்டர்சன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் சிறப்பாக ஆடியது. குறிப்பாக, கப்டன் குக், கார்பெறி இணை நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இந்நிலையில் இந்த ஜோடி 85 ஓட்டங்களைப் இணைப்பாட்டமாக பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. ஒரு முனையில் கப்டன் குக் சிறப்பாக ஆடியபோதும் நேற்றைய ஆட்டநேரம் நிறைவுபெறும் வேளை அவரும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். இறுதியில் முதல் இனிங்ஸிற்காக ஆடும் இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, நான்கு விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் 100ஆவது டெஸ்டில் ஆடிவரும் கப்டன் குக் 72 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கார்பெறி 43 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஹரிஸ், வட்சன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# வலிகாமம் கால்பந்து லீக் அங்குரார்ப்பணம்




(உடுவில்)

வலிகாமம் கால்பந்தாட்ட லீக் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ, திட்ட அமைப்பாளர் அனுர டீ சில்வா, முன்னாள் வலிகாமம் வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் மு.நடராஜா ஆகியோரினால் இவ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதன் மூலம் மிக நீண்ட காலமாக இருந்து வந்த பலரது எதிர்பார்ப்பு நனவாகியுள்ளது. இதுவரை காலமும் யாழ். மாவட்டத்தினைப் பொறுத்த வரை பருத்தித்துறை மற்றும் யாழ்ப்பாண லீக் மட்டுமே இருந்து வந்துள்ளது.

புதிதாக வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கானது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதன் மூலம் பலரின் திறமைகள் வெளிக்கொணரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கினது பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் உடுவில் பிரதேச சபைக் கட்டடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன் தலைவராக கா.நவரத்தினராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக இ.யுகராஜ்ஜும், பொருளாளராக க.யோகலிங்கமும் தெரிவானார்கள்.

இங்கு உரையாற்றிய இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ யாழ் மாவட்டத்தின் கால்பந்தாட்டத் துறையினை உயர்த்துவதற்கு சகலவிதமான பங்களிப்புகளையும் இலங்கை கால்பந்து சம்மேளனம் செய்யும் எனவும், வடக்கிலிருந்து இன்னும் பல வீரர்கள் தேசியத்திற்கு வரவேண்டும் எனவும் தெரிவித்தார். புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கானது கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியொன்றினை விரைவில் நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது(48,93)

## வட்டுக்கோட்டையில் நாளை பயிற்றுவிப்பாளர் பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கம் மற்றும் இலங்கை கிரிக்கெட் சபை ஆகியவற்றின் ஒழுங்குபடுத்தல் மூலம் யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி முகாம் நாளை காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் தரத்தை தேசிய, சர்வதேச மட்டத்திற்கு உயர்த்தும் நோக்கிலேயே இப்பயிற்சி முகாம் நடாத்தப்படவுள்ளதாகவும், இதன் முதற்கட்டமாக பாட–சாலைகளில் பயிற்றுவிக்கும் பயிற்சியாளர்களுக்குப் இப்பயிற்சி முகாம் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, இதில் பயிற்றுவிப்பாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் சபையின் கனிஷ்ட தேர்வாளர்களில் ஒருவரான நிசாந்தன் அவர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோது, நவீன கிரிக்கெட் நுட்பங்களை பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்றுவிக்கும் முகமாகவே இப்பயிற்சி முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. இது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். இதன் மூலம் கிரிக்கெட் நுட்பங்கள், நுணுக்கங்கள் குறித்து பயிற்றுவிப்பாளர்களுக்கு செயன்முறை மூலம் விளக்கமளிக்கப்படும். இதில் இலங்கை கிரிக்கெட் சபையின் பயிற்றுவிப்பாளர்கள் கலந்து கொண்டு விளக்கமளிக்கவுள்ளனர். இந்தப் பயிற்சி முகாம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுமிடத்து நிச்சயமாக யாழ். மாவட்டத்திலிருந்து சிறந்த வீரர்கள் உருவாகுவதற்கான வழிகளை உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது எனத் தெரிவித்தார். (எஸ்.பி.)

## ஐ.சி.சி. விருது அறிவிப்பு
## சங்கா, மஹேல வென்றனர்

(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரருக்கான விருதை இலங்கை அணி வீரர் குமார் சங்கக்கார வென்றுள்ளார். இதேவேளை, இலங்கை அணியின் மற்றுமொரு வீரரான மஹேல ஜெயவர்த்தன துடிப்பு மிக்க கிரிக்கெட் வீரருக்கான விருதை வென்றுள்ளார். 2013 ஆம் ஆண்டுக்கான அதி சிறந்த கிரிக்கெட் வீரராக அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் அறிவிக்கப்பட்டுள்ளார்.

முழுமையான விருது விபரங்கள்:

சிறந்த கிரிக்கெட் வீரர்: மைக்கல் கிளார்க் (அவுஸ்ரேலியா)
சிறந்த டெஸ்ட் வீரர்: மைக்கல் கிளார்க் (அவுஸ்ரேலியா)
சிறந்த ஒருநாள் போட்டி வீரர்: குமார் சங்கக்கார (இலங்கை)
சிறந்த ஒருநாள் போட்டி வீராங்கனை: சுசி பேற்ஸ் (நியூசிலாந்து)
சிறந்த வளர்ந்து வரும் வீரர்: புஜாரா (இந்தியா)
சிறந்த உப அங்கத்துவ நாடுகளின் வீரர்: கெவின் பிரையன் (அயர்லாந்து)
சிறந்த ருவென்ரி-20 போட்டி பெறுபேறு: உமர் குல் - 2.2-0-6-5 - தென்னாபிரிக்காவிற்கெதிராக
சிறந்த ருவென்ரி-20 போட்டி வீராங்கனை: சாரா ரெய்லர் (இங்கிலாந்து)
சிறந்த நடுவர்: றிச்சர்ட் கெற்றல்புரோ
விளையாட்டு உணர்விற்கான விருது: மஹேல ஜெயவர்தன
மக்கள் தெரிவு விருது: மகேந்திரசிங் டோணி

# சுவிஸ் ஐஸ் ஹொக்கி அணியில் தமிழ்ச் சிறுவன் அஸ்வின்




13 வயதுப் பிரிவு சுவிஸ் தேசிய ஐஸ் ஹொக்கி அணியில் இடம்பிடித்த முதல் தமிழ் வீரர் என்ற பெருமையை அஸ்வின் சிவ சுப்பிரமணியம் (வயது- 12) பெற்றுள்ளார்.

இவர் தனது 6 வயதில் HC Delemont Vallee Ice-Hockey கழகத்தில் இணைந்து பந்து காப்பாளராக விளையாடி வருகின்றார்.

இவரின் திறமையைக் கண்ட பயிற்றுநர்கள் 13 வயதுப் பிரிவு தேசிய மாநில அளவில் அஸ்வினை விளையாடச் செய்துள்ளனர்.

அத்துடன் கோடை காலத்தில் சுவிஸின் முன்னணி கழகமான SHC Rossemaison Inline Hockey கழகத்தில் 5 வருடங்களாக அஸ்வின் பந்துகாப்பாளராக விளையாடி வருகின்றார்.

2012- Zurich சுவிஸ் Champion கிண்ணத்துக்கான போட்டியில் அஸ்வின் சிறந்த பந்துகாப்பாளர் பட்டத்தை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானுக்குப் பதிலடி
## தொடரை சமப்படுத்தியது இலங்கை



பாகிஸ்தான் அணிகளுக்கு எதிரான பரபரப்பான இரண்டாவது ருவென்ரி-20 போட்டியில், இலங்கை அணி அபார வெற்றி பெற்றதோடு தொடர் 1-1 என சமநிலையானது.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணியும் பாகிஸ்தான் அணியும் 2 ருவென்ரி-20, 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் மோதுகின்றன. டுபாயில் இடம்பெற்ற முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வென்றது. இந்நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீர்க்கமான இரண்டாவது போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களைஇழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. குசல் ஜனித் பெரேரா 84, சீக்குகே பிரசன்ன 21, டில்சான் 48, சங்கக்கார ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு 212 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 19.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சராஜில் கான் 50, அப்ரிடி 28, சோஹைல் தன்வீர் 41 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சேனாநாயக்க மூன்று, சீக்குகே பிரசன்னா, திசர பெரேரா ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக குசல் ஜனித் பெரேரா, தொடரின் ஆட்டநாயகனாக அப்ரிடி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# புதிய சிக்கலில் ஆம்ஸ்ரோங்

(ரோம்)

7 முறை உலக சம்பியனான (டூர் டி பிரான்ஸ்) அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் சைக்கிள் பந்தய வீரர் லான்ஸ் ஆம்ஸ்ரோங் ஊக்க மருந்து பயன்படுத்தியதை சமீபத்தில் ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து அவரின் பதக்கங்கள் பறிக்கப்பட்டன. இந்த நிலையில் ஆம்ஸ்ரோங் மீது புதிய சர்ச்சை கிளம்பி இருக்கிறது. 1993ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நடந்த பெரும் பரிசுத்தொகைக்கான சைக்கிள் பந்தயத்தில் விட்டுக்கொடுக்க ஆம்ஸ்ரோங் தனக்கு 62 இலட்சம் கொடுக்க முன்வந்தார் என்று இத்தாலியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற சைக்கிள் பந்தய வீரர் ரொபர்டோ காஜிலி புகார் தெரிவித்துள்ளார். இந்தச் செய்தி இத்தாலியில் வெளியாகும் பத்திரிகைகளில் வெளிவந்து புதிய சர்ச்சையை கிளப்பி இருக்கிறது.

# மென்பந்து கிரிக்கெட்

(உரும்பிராய்)

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

யாழ். மாவட்ட மென்பந்து அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள இப்போட்டித் தொடர் அணிக்கு ஐந்து பேர் கொண்டதாக இடம்பெறவுள்ளதுடன் 6 ஓவர்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. விலகல் முறையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்களே தற்போது நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

# அதிர்ச்சியில் உறைய வைத்த புகைப்படம்!

- பூர்ணிமா -

ஜூன் 11, 1963. தெற்கு வியட்நாம் சைகோனில் காலை 11 மணியளவில் ஒரு வயதான புத்ததுறவி திச் க்வாங் டக், நகரின் இரண்டு பாதைகள் சந்திக்கும் இடத்தில் இரண்டு சீடர்களுடன் காரில் வந்திறங்கினார். ஒரு சீடர் பரபரப்பான அந்தப் பாதையில் தரையில் ஒரு சிறிய தலையணை-யை வைக்க அதன் மேல் அந்த 66 வயது புத்த துறவி சப்பணமிட்டு தியான நிலையில் அமர்ந்தார். அவருடன் வந்த சீடர்கள் மீண்டும் காருக்குள் சென்று பிளாஸ்டிக் கலன் நிறைய இருந்த பெற்றோலைக் கொண்டு வந்து புத்த துறவியின் மீது ஊற்றினார்கள். அவரைச் சுற்றி ஏராளமான புத்த துறவிகளும், பெண் துறவிகளும் சூழ்ந்திருக்க, சீடனொருவன் தீப்பெட்டியிலிருந்து ஒரு தீக்குச்சியை எடுத்து உரசி, துறவியின் மீது வீச, நொடியில் அவரது உடல் தீப்பற்றி எரியத் தொடங்கியது. வழியில் சென்ற பொதுமக்கள் அதிர்ச்சியில் உறைந்து நிற்க, அந்தப் புத்த துறவி எவ்வித அலறலையும் வெளிப்படுத்தாமல் அசையாமல் அப்படியே உட்கார்ந்திருந்தார்.

இறுதியில் அவர் உடல் முழுவதுமாக கருகி உயிர் பிரிந்தவுடன் மஞ்சள் நிறப் போர்வையால் போர்த்தப்பட்டு தயாராக எடுத்து வந்த சவப் பெட்டிக்குள் கிடத்தி புத்தர் கோவிலுக்கு ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்துவதற்காக கொண்டு செல்லப்பட்டது. ஐந்து நாட்கள் கழித்து அவரது உடல் இறுதிச் சடங்கிற்காக பூலாம் சுடுகாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டது.

ஆச்சரியப்படும் வகையில் அவரது இதயம் மட்டும் கருகி சாம்பலாகாமல் அப்படியே இருந்ததால் மீண்டும் அவரது கருகிய உடல் முறைப்படி எரியூட்டப்பட்டது. தெற்கு வியட்நாமில் ஜனாதிபதி நிகோ டின்டிம் ஆட்சியில் புத்தமதத்திற்கும் துறவிகளுக்கும் எதிராக எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகளைக் கண்டித்து க்வாங் டக் தீக்குளித்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினார். தீக்குளிப்பதற்கு முன் அவர் எழுதிய கடிதத்தில், ""நான் கண்களை மூடுவதற்கு முன் என் பார்வையை புத்தர் மீது செலுத்துகிறேன். இந்நாட்டு மக்களுக்கு மத அடிப்படையில் சமஉரிமை அளிக்க வேண்டுமென்று ஜனாதிபதியிடம் கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலம் தாய் நாட்டின் ஒற்றுமையும் வலிமையும் மேம்படும். புத்தமதத்தைக் காப்பாற்ற எங்கள் உறுப்பினர்கள் ஒருமித்த கருத்துடன் உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இவரது தீக்குளிப்பைத் தொடர்ந்து அடுத்த சில மாதங்களில் மேலும் ஐந்து புத்த துறவிகள் தீக்குளித்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். 1963ஆம் ஆண்டு நவம்பர் முதல் திகதியன்று ஜனாதிபதி டிம் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு, மறுநாளே கொல்லப்பட்டார்.




சம்பவதினத்தன்று அமெரிக்காவில் உள்ள "அசோசியேட்டட் பிரஸ்" பத்திரிகை புகைப்பட நிருபராக பணியாற்றி வந்த மல்கம் வைல்ட் பிரவுன், புத்த துறவி தீக்குளித்ததைத் தன்னிடமிருந்த ஒரு சாதாரண ஜப்பான் தயாரிப்புக் கமரா மூலமாகப் புகைப்படமெடுத்து பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தார். அப்போது தெற்கு வியட்நாமில் மேற்கத்திய நாடுகளின் பத்திரிகை நிருபராக இவர் ஒருவர்தான் இருந்தார். இந்தப் புகைப்படம் அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியான போது உலகமே அதிர்ச்சிக்குள்ளாகியது. அந்த ஆண்டின் "மிகச்சிறந்த உலக செய்திப் புகைப்படம்" என தெற்கு வியட்நாம் அரசே இதற்கு தலைப்பிட்டது. "இதுவரை எந்தவொரு செய்திப் புகைப்படமும் இந்த அளவுக்கு மத உணர்வை வெளிப்படுத்தியதில்லை" என்று அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி கென்னடி சொன்னார்.

ஐம்பதாண்டுகளுக்குப் பின்னரும் பத்திரிகை வரலாற்றில் இந்தத் தீக்குளிப்பு புகைப்படம் நிலையான இடத்தைப் பெற்றுள்ளது. புகைப்படமெடுத்த மல்கம் பிரவுன் இது குறித்து கூறிய போது, "ஒரு வயதான துறவி தீக்குளிப்பதைப் பார்த்தபோது முதலில் அவரைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் தோன்றினாலும், சுற்றிலும் இருந்த புத்த துறவிகள், பெண் துறவிகள் நிச்சயம் என்னை அனுமதிக்கமாட்டார்கள் என்றே தோன்றியது. அதே சமயம் தங்கள் மதத்தைக் காப்பாற்ற அவர்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பதை ஒரு நிருபர் என்ற முறையில் உலகுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமையும் எனக்கிருந்ததால் மனதை திடப்படுத்திக் கொண்டு படமெடுத்தேன். அரசுக்கு எதிராக மக்கள் பல வழிகளில் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர். அதில் இதுவும் ஒருவகை என்ற கருத்தில் இதை செய்திப் புகைப்படமாக வெளியிட்டேன்" என்றார்.

புலிட்சர் விருது உட்பட பல சர்வதேச விருதுகளைப்பெற்ற இவர், கடந்த ஆண்டு ஓகஸ்ட் 27 ஆம் திகதி அவரது 81 ஆவது வயதில் காலமானார். 1960 ஆம் ஆண்டுகளில் நடந்த யுத்தங்கள் சம்பந்தமான புகைப்படங்கள் வெளியாகிக் கொண்டிருந்த நேரத்தில், மனித உணர்வை வெளிப்படுத்தும் வகையில் புத்த துறவி தீக்குளித்த புகைப்படம் வெளியானது புகைப்பட ஜேர்ணலிசத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை துவக்கிவைத்தது எனலாம்.

# ஒரு நகரமும் இரு எழுத்தாளர்களும்...


● தென்காசியில் சப்ரெஜிஸ்டர் அலுவலக குமாஸ்தா வேலையை விட்டு சென்னைக்கு வந்தேன். 1943, டிசம்பரில் நான் முதல் முதலாய் பார்த்த சென்னை நான் கற்பனையில் கண்ட சென்னையாக இல்லை. இலக்கிய உலகம் பற்றி விசாரித்தபோது உண்மையாகவோ, பொய்யாகவோ எனக்குக் கிடைத்த தகவல்கள் அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சியாக இருந்தன. ஆனானப்பட்ட பத்திரிகை ஆசிரியர்களுக்கே ஐம்பது, அறு-பதுதான் சம்பளம் என்றும், எல்லோருமே பாதி நாள் அரைப்பட்டினி கிடப்பவர்கள்தான் என்றும் எனக்குக் கூறப்பட்டது. மூன்று வேளையும் வயி-றாரச் சாப்பிடும் பத்திரிகாசிரியர்கள் என்று மூவர் மட்டுமே குறிப்பிடப்பட்டவர்கள். "அடி, ஆத்தே! தெரியாத்தனமாக அல்லவா இங்கே கால் வைத்து விட்டோம்" என்று 26 நாட்களில் சென்னையைவிட்டுப் புறப்பட்டு விட்டேன். ராஜிநாமா செய்து உதறிய குமாஸ்தா வேலைக்காக திரும்பவும் மண்டியிட்டுக் கெஞ்சி ராஜினாமாவை வாபஸ் பெற்று வேறு ஒரு ஊர் அலுவலகத்தில் போய் உட்கார்ந்தேன்.

கடைசியில் 1944, ஜுலையில் சென்னைக்குத் திரும்பவும் வந்து எட்டு வருஷ காலம் வெவ்வேறு பத்திரிகைகளில் வேலை பார்த்தேன். 1952 - செப்ரெம்பரில் மலாயாவுக்கு கப்பல் ஏறினேன். 5 வருஷங்களுக்குப் பிறகு 1958இல் மீண்டும் சென்னைக்கே திரும்பிவிட்டேன்.

சென்னைக்கு வந்த புதிதில் இந்த நகரில் திருவல்லிக்கேணி கடற்கரை உட்பட எதுவுமே என் மனதைக் கவரவில்லை. மனசைக் கவர்ந்த இடங்கள் என்று சொல்ல வேண்டுமானால் பழைய புத்தகக் கடையைத்தான் சொல்லலாம். மின்சார ரயில், பஸ் ஆகியவற்றில் ஒரு மாதிரியான நாற்றம் அடித்தது (சென்னைக்கு வந்த புதிதில்). இப்போது நாற்றம் போய் விட்டதோ, மூக்கு பழகி விட்டதோ தெரியவில்லை. இந்த நகரில் கவிதை எழு-துவது என்பது நடக்காத காரியம் வேண்டுமானால் செய்யுள் கட்டலாம். இதை ஒரு அட்டையில் எழுதி தொங்கவிட்டால் எழும்பூர், சென்ட்ரல் ஸ்டேஷன்களில் இங்கே குடியேறுவதற்காக வரும் உண்மைக் கவிஞர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகக் கூட இருக்கும். எவ்வளவு செலவழித்துச் சாப்பிட்டாலும் இங்கே வயிறு நிறையாது. வயிறு நிறைந்து விட்டாலோ பல சமயங்களில் அஜீரணத்திலும் சில சமயங்களில் வாந்திகளிலும் பேதிகளிலும் போய் முடியும். நாம் சம்பாதிக்கும் அற்பக்காசு கூட நமக்கும் பூரணமாகப் பயன்படாது. பெரும்பாலும் யார் யாருக்கோ வா-டகை, வாகனக் கட்டணம் என்ற பல ரூபங்களில் கொடுக்கத்தான் நாம் சம்பாதிக்க வேண்டி வரும். நாம் இதற்காகவா ஜன்மம் எடுத்தோம்?

சென்னை வாழ்க்கை என்பது எனக்கு அவ்வளவாகத் திருப்தி அளிக்கக்கூடியதல்ல. அன்றாட ஜீவனம் சிரமமில்லாமல் கழியும் என்ற நம்பிக்கைக்கு வழி பிறந்தால் நாளை-யே நான் சென்னையை விட்டுவிட்டு ஏதேனும் ஒரு கிராமத்திற்குப் போய் குடியேறத்தான் ஆசைப்படுவேன்.

- கு. அழகிரிசாமி



● எப்படியும் சென்னை போய்ச் சேருவது என்று முடிவு செய்தேன் நான். எழுத்து வெறி பற்றி, நான் அரசாங்க குமாஸ்தா வேலையை ராஜிநாமா செய்ததும் ஒரு பெரியவர் சொன்னார்.

"தம்பி! நீ வெற்றிலை பாக்கு கடை வை. பிளாக் மார்க்கெட் பண்ணு. என்ன வேண்டுமானாலும் செய். ஆனால் எழுத்துத் தொழிலில் மட்டும் ஈடுபடாதே. நான் சொல்வதைக் கேட்டு புத்தியாய்ப் பிழை".

நான் அப்படிப் பிழைக்க விரும்பவில்லை. உருப்படாமல் போகவே ஆசைப்பட்டேன். தீவிரமாய் முயற்சி செய்து, சிறு பத்திரிகைகளில் வேலை பிடித்து, வெளியூர்களில் காலம் கழித்து, ஒரு வழியாக 1943 பிற்பகுதியில் சென்னை வந்து சேர்ந்தேன். சக்திதாசன் சுப்பிரமணியன் "நவசக்தி" எனக்கு இடம் அளிக்கும் என்று அழைத்தார். அப்பொழுது வ.ரா. "நவசக்தி" யில் தொடர் கட்டுரை எழுதிக் கொண்டிருந்தார். ஒருநாள் அவர் காரியாலயத்திற்கு வந்தார். என்னை அவருக்கு அறிமுகப்படுத்தினார்கள். "சென்னை வந்து சேர்ந்து விட்டீரல்லவா? பேஷ். இனிமேல் சென்னையை விட்டுப் போகாதீர். இலக்கியத்துக்காக வீட்டை விட்டு வெளியேறக் கூடிய தெம்பு இருந்தால்தான் ஒருவன் இலக்கிய உலகத்திலே முன்னேற முடியும்" என்று சொன்னார் அவர். எனினும் நான்கு மாதங்களுக்குப் பிறகு திருச்சிக்கு சென்று "கிராம ஊழியன்" என்ற மறுமலர்ச்சி இலக்கிய இதழில் நான்கு வருஷங்கள் பணிபுரிந்தேன். அப்புறம் அது மண்டையைப் போட்டுவிட, மீண்டும் சென்னைக்கு ஓர் அன்பர் அழைப்பின்பேரில் வந்து சேர்ந்தேன். பிறகு தி.க. சிவசங்கரன் திருநெல்வேலியிலிருந்து வந்து சேர்ந்தார். டி.ஆர். நடராஜனும் அடிக்கடி வருவார். நாங்கள் எழுத்துலகில் பெரியவர்களைச் சந்திப்பதைவிட தெருக்களில் திரிவதிலும் எலெக்ட்ரிக் ரயிலில் பிரயாணம் செய்வதிலும், நேரம் பொழுது பாராமல் கடலோரத்தில் நிற்பதிலும்தான் அதிக சுவாரஸ்யமும் அதிகமான பலனும் உண்டு எனக் கருதினோம்.

நான் சென்னைக்கு வந்த இந்த பத்தரை ஆண்டுகளில் எவ்வளவோ பத்திரிகைகள் தோன்றி மறைந்துள்ளன. தமிழ்நாட்டின் மிக அழகான ஊர் சென்னை என்பது என் கருத்து. புதிய புதிய அனுபவங்கள் பெறவும், பிறரால் கவனிக்கப்படாமலே மனித வர்க்கத்தின் குணாதிசயங்களை ஆராயவும் வாழ்க்கையை கற்றறியவும் வகை செய்கிற பெரிய கல்லூரி சென்னை என நான் உணர்கிறேன்.



- வல்லிக்கண்ணன்

(வ. விஜயபாஸ்கரன் தொகுத்த 'சக்தி களஞ்சியம' தொகுப்பிலிருந்து)

# இவர்கள்...

### குழந்தைக் கவலை!




சீனாவில் சட்டப்படி ஒரு குழந்தைதான் பெற்றுக்கொள்ள அனுமதி. அதற்கு மேல் பெற்றுக் கொண்டால் அபராதம் கட்ட வேண்டிவரும்! இந்த வகையில் பிரபல இயக்குநர், ஸாங் யிமொ (Zhang Yimou) இற்கு 4 மனைவிகளும், 6 குழந்தைகளும் உள்ளனர் என தகவல் பரவி, தற்போது விசாரணை நடக்கிறது! கேள்விப்பட்டது உண்மை என நிரூபிக்கப்பட்டால் இவருக்கு 160 மில்லியன் யென் அபராதம் விதிக்கப்படுமாம்! 62 வயதாகும் பிரபல இயக்குநருக்கு இப்படியொரு சோதனை.

### ஏமாற்றும் கலை!



பொதுக்கூட்டத்திற்கு கட்சித் தலைவர் குறித்த நேரத்தில் செல்லக்கூடாது. கூட்டம் நடைபெறும்போது திடீரென்று மேடையில் ஏற வேண்டும். மேடையை வண்ண விளக்குகளால் அலங்கரிக்க வேண்டும். மாலைப்பொழுதுதான் கூட்டம் நடத்த உகந்த நேரம். தொழிலாளர்கள் களைத்துப் போயிருப்பார்கள் என்பதால் பொய்யைச் சொல்லி நம்ப வைப்பது சுலபம். இப்படிச் சொன்னவர்: ஹிட்லர்.

### லிங்கனின் மதம்!




அமெரிக்க ஜனாதிபதியாக ஆபிரகாம் லிங்கன் இருந்தபோது அவரிடம், "உங்களது மதம் என்ன?" என்று ஒருவர் கேட்டார். அதற்கு லிங்கன், "நல்லதைச் செய்யும்போது எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. கெட்டதைச் செய்யும்போது வருத்தம் ஏற்படுகிறது. இதுதான் என்னுடைய மதம்" என்று பதில் அளித்தார்.

### கல்லறை வாசகத்தில்!




தென்னிந்திய மொழிகளுக்குத் தமிழே தாய். தூய தமிழுக்குத் திருக்குறளே சிறந்த எடுத்துக்காட்டாகும் என்று உலகுக்கே தெரிவித்த டாக்டர் ஜி.யு. போப் 1908ஆம் ஆண்டில் தன் 88 ஆவது வயதில் இயற்கை எய்தினார். இவர் தமது கடைசி விருப்பத்தை - மரணத்துக்குப் பின் ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலை வளாகத்தில் தன் உடலை அடக்கம் செய்வதுடன் கல்லறைக் கல்வெட்டில் "ஒரு தமிழ் மாணவன்" என்று தவறாது குறிக்கப்பட வேண்டும் - என தெரிவித்தார். அவரது மாணவர்கள், போப்பின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து பெருமையடைந்தனர்.

### மூன்று பேர் ஆட்சியில்!



இந்திய ஆட்சிப் பணியைச் சாராத ஒருவர் அரசுச் செயலாளராக (Secretary to Government) நேரடி நியமனம் செய்யப்பெற்ற ஒரே அலுவலர் தமிழ்ப் பேராசிரியரான ஔவை நடராசன்தான். முதலமைச்சர்கள் எம்.ஜி.ஆர்,கருணாநிதி, ஜெயலலிதா ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் அரசுச் செயலாளராக 8 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

### இறவாப் புகழ்!




புகழ்பெற்ற தத்துவஞானி சோக்ரடீஸ்ஃக்கு ஏதென்ஸ் நகர நீதிமன்றம் மரண தண்டனை விதித்தவுடன் அவருக்கு விஷம் கொடுத்து தண்டனையை நிறைவேற்றுவதென முடிவானது. அவர் அக்கொடிய விஷத்தை அருந்துவதற்கு முன், "எனக்கு ஒரு வெள்ளைத் தாளும் பேனாவும் தாருங்கள். எனது உடலில் விஷம் எப்படி மற்ற பகுதிகளுக்குப் பரவுகிறது என்றும் அதனால் எப்படியெல்லாம் அவ்வுறுப்புகள் பாதிப்படைகின்றன என்று அத்தாளில் எழுதுகிறேன். அது பிற்கால அறிவியலுக்குப் பயன்படும்" என்று கூறி ஒவ்வொன்றாக எழுதி வரும்போது கை நடுங்க ஆரம்பித்தபோது தாளும் பேனாவும் கையிலிருந்து நழுவ, உடல் செயலாக்கம் படிப்படியாக நின்று போனதாம்.

### பாம்புப் படுக்கை!



மகாவிஷ்ணுவின் அனந்தசயனம்-பாம்பின் மேல் படுத்திருப்பதைக் கண்டிருப்பீர்கள். பாம்புப் படுக்கையில் படுத்திருப்பது எவ்வளவு கடினம் என்பது உங்களுக்குத் தெரியும். என்னைப் பிரதம மந்திரி பதவி ஏற்க வேண்டும் என்று பல பேர் வேண்டுகிறார்கள். ஆனால், பதவியில் உட்காருவது பாம்பின் மேல் உட்காருவது பாம்பின் மேல் படுத்திருப்பதைப்போல கஷ்டமான காரியம். இந்தியாவின் பிரதமர் பொறுப்பை ஏற்கும்படி கூறி வற்புறுத்தியவர்களுக்கு ராஜாஜி கூறிய பதில் இது.

### ராட்டையின் பெறுமதி!



மகாத்மா காந்தி பயன்படுத்திய ராட்டையை 1,10,000 பவுண்ஸ்ஃக்கு ஏலம் விட்டுள்ளது லண்டனில் உள்ள முல்லாக் என்ற ஏல நிறுவனம். 1920 இல் புனே ஏரவாடா சிறையில் காந்தி இருந்தபோது பயன்படுத்திய ராட்டையாகும். ராட்டை தட்டச்சு இயந்திரம் அளவுக்கு உள்ளது. அதனை மடித்து எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லக்கூடியது.

# குளிர்காலத்தில்...

**- கீதா -**

பனிக்காலத்தில் இனிப்பு நிறைய சாப்பிடக் கூடாது. தயிர், மோர் போன்ற பால் பொருட்களையும் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். சுரைக்காய், புடலங்காய், பூசணிக்காய் மாதிரியான நீர்க்காய்களையும் தவிர்க்க வேண்டும். இளஞ்சூடான தண்ணீர் குடிப்பது நல்லது. குளிர்பானங்களை தவிர்த்து விடுங்கள். உணவில் மிளகு, பூண்டு, இஞ்சி, தூதுவளை அதிகம் சேர்க்க வேண்டும்.

குழந்தைகளை மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளில் முன்னுக்கு உட்கார வைத்து கூட்டிபோகக் கூடாது. குழந்தைகளுக்கு இந்த குளிர்காலத்தில் காலை மற்றும் மாலை நேரங்களில் வெளியில் போகும்போது காதில் ஸ்கார்ப், மப்ளர் ஏதாவது ஒன்றை காது மறையும்படி கட்டி வைக்க வேண்டும். பெரியவர்களும் காலை மற்றும் மாலை நேரங்களில் வெளியில் போகும்போது இதேபோல் காது மறையும்படி கட்டிக்கொள்வது நல்லது.

குளிர்காலங்களில் சைக்கிள், ஸ்கூட்டரில் செல்லும்போது, மார்பில் காற்று பலமாகத் தாக்கும். ஆகையால், ஒரு நியூஸ் பேப்பரை நான்காக மடித்து, பனியனுக்குள் வைத்து, சட்டை போட்டுக் கொண்டால் மார்புக்கு பலமான பாதுகாப்பு கிடைக்கும். ஸ்வெட்டர் தேவையில்லை.

பொதுவாக குளிர்காலத்தில் கூந்தல் வறண்டு போகும் என்பதால் எப்போதும் கூந்தலில் எண்ணெய்ப் பசை இருப்பதுபோல் பார்த்துக் கொள்ள வேண்டும். குளிர்காலத்தில் கூந்தலை அடிக்கடி ஷாம்பு வோஷ் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

பனிக்காலத்தில் முடி வறட்சி காரணமாக பொடுகுப் பிரச்சினையும் அதிகமாகும். அந்த பொடுகானது தோல், கைகளில் எல்லாம் செதில், செதிலாக உதிர்ந்து பார்ப்பதற்கே அருவருப்பாக இருக்கும். இதைத் தவிர்க்க வாரம் ஒருமுறை கற்றாழை ஜெல்லை எடுத்து வெதுவெதுப்பான நீரில் கரைத்து தலையில் நன்றாகத் தடவி ஐந்து நிமிடங்கள் ஊற வைத்து அலசினால் வறட்டுத்தன்மை நீங்குவதுடன் பொடுகும் மட்டுப்படும்.

குளிர்காலத்தில் வறட்சி காரணமாக நரையும் அதிகரிக்கலாம். அதற்காக "டை" அல்லது "கலரிங்" பயன்படுத்தும்போது அது கூந்தலின் வறட்சியை மேலும் தாக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஒரு கப் மருதாணி இலையுடன் கால் கப் தேயிலைத்தூள் எலுமிச்சைச் சாறு கால் கப் தேங்காய் எண்ணெய் நான்கு தேக்கரண்டிகள் சேர்த்து மிக்ஸியில் விழுதாக அரைத்து வாரம் ஒருமுறை இந்த விழுதை தலையில் தேய்த்து அலச, டை மற்றும் கலரிங் போன்றவை காரணமாக ஏற்படும் பாதிப்புகள் நீங்கும்.

குளிர்காலத்தில் இன்ஃபெக்ஷன் காரணமாக சிலருக்கு உடலில் அரிப்பு ஏற்படலாம். அதற்கு குளிக்கும் நீரில் வேப்பம் பொடி ஒரு கரண்டியுடன் மஞ்சள் தூள் ஒரு கரண்டி கலந்து குளிக்கலாம்.

குளிர்காலத்தில் தலையில் பேன் தொல்லை அதிகரிக்கும். வசம்பு பவுடருடன் தேங்காய் எண்ணெயும் தயிரும் கலந்து பத்து நிமிடம் ஊற வைத்துக் குளித்தால் பேன் தொல்லை குறையும்.

உதடுகளில் வெடிப்பு ஏற்படாமல் இருக்க தேன், கிளிசரின், பீட்ரூட் சாறு, வஸிலீன் தடவலாம்.

குளிக்கப் போவதற்கு முன்பு உடம்பிலும் முகத்திலும் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் குளிர்காலத்தில் உடம்பில் நீர்ச்சத்து குறையாமல் இருக்க பச்சைக் காய்கறிகள், பழங்களை அதிகம் சாப்பிடுங்கள்.

இந்தக் காலத்தில் முக்கிய தேவை நிறைய தண்ணீர் குடிப்பது. அதனால் நிறைய தண்ணீர் குடியுங்கள்.



# ஆக்கபூர்வமான விமர்சனங்களே சரியான பாதையில் பயணிக்க உதவும்



## மக்கள் சந்திப்பில் யாழ். ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பு

ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர்கொள்ளும்போதே ஒரு அரசியல் கட்சி மக்கள் மத்தியில் தன்னை முறையாக கால் பதித்துக்கொள்ள முடியுமென ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார்.

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வளாகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொது மக்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடமராட்சி அமைப்பாளர் மு.ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில், இடம்பெற்ற, இந்நிகழ்வில் உரையாற்றிய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சீரற்ற காலநிலையின் மத்தியிலும் பெரும் எண்ணிக்கையில் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தமைக்கு நன்றி தெரிவித்து தனது உரையைத் தொடர்ந்தார்.

கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் நாம் மேற்கொண்ட பணிகளின் சாதக பாதக நிலமைகளை எமது மக்கள் சுதந்திரமாக திறந்த மனதுடன் எமக்கு சுட்டிக்காட்டுவதே சரியான பாதையில் நாம் அடியெடுத்து வைப்பதற்கு பேருதவியாக அமையும் என்பதை அழுத்தம் திருத்தமாக அவர் குறிப்பிட்டார்.

கலந்துகொண்ட அனைவரும் கருத்து தெரிவிப்பதற்கு வசதியாக விடயத்தை சுருக்கமாக தெளிவாக முன்வைக்குமாறு கேட்டுக்கொண்டதை அடுத்து கட்சியின் தமதுநிலைப்பாட்டை விளக்கி பலரும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

தமக்கான மக்கள் பணிகளை முன்னெடுப்பதற்கு வசதியாகவே கட்சி தனது வலய அலுவலகங்களை திறந்திருப்பதால் அதன் பெயரைக்கட்சி அலுவலகம் எனக் குறிப்பிடுவதற்கு பதில் மக்கள் பணியகம் என குறிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும். என்று சிலர் கருத்து தெரிவிக்கப்பட்டது.

தினமுரசு எமது கட்சியின் பத்திரிகையாக உணரப்பட்டிருப்பதால் அதனை ஒரு பொதுவான பத்திரிகையாக வெளிப்படுத்து வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமே அதன் பரந்தளவிலான விற்பனைக்கு வழியை ஏற்படுத்த முடியும் என்றும் அங்கு கருத்து தெரிவித்தனர்.

அரசுசார்பு நிலையெடுத்ததை காரணங்காட்டி எமது கட்சிக்கு துரோகிப்பட்டம் சூட்ட முனைகிறார்கள். உலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. உங்கள் வாக்குத்தான் முழு தமிழ் மக்களதும் தலைவிதியை தீர்மானிக்கப் போவதாக கூறி முழு மக்களதும் வாக்குகளை தமிழ் கூட்டமைப்பினர் அபகரித்துக்கொண்டு விடுகிறார்கள்.

இப்போது ,இணைத்லைமையை காரணங்காட்டி வடக்கின் அபிவிருத்தி புறக்கணிக்கப்படுகிறது. யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் தலைமையை முதல்வர் விக்கினேஸ்வரனிடம் கொடுத்தால் தான், இவர்களின் போலித்தனம் அம்பலத்துக்கு வரும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல சிரமங்களின் மத்தியில் தனது பணிகளை முன்னெடுத்து வருகிறார். அவரை சூழ இருப்பவர்கள் அவருக்கு சரியான திட்டங்களை முன்னெடுக்க தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கி உதவ வேண்டும்.

பலித்தலைவர் பிரபாகரனை சூழ இருந்தவர்களால்தான் அவரால் சரியாக செயற்பட முடியாமற்போனது. எமது அமைச்சர் எமக்கு தேவையானதை முன்னெடுப்பவர். அவரது கரத்தை பலப்படுத்தி அவரை நாம் பாதுகாக்க வேண்டும்.

வடமராட்சியைப்பொறுத்தவரை ஈ.பி.டி.பி.க்கு கூடுதலான ஆதரவு இருந்தது. ஆனால் இறுதி நேரத்தில் தேசியத்தின் பெயரால் வாக்குவங்கி தடம்புரண்டிருக்கிறது. கமல் விவகாரம் நீதிமன்றின் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது. இதுவிடயத்தில் கட்சி பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.தேர்தலுக்கு முன் சின்னத்தை மாற்றுவதற்கு பரந்தளவில் ஆலோசனைகள் பெறப்பட்ட போதும் இறுதியில் அந்த விடயம் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இதற்கு முன் கடந்தகாலங்களில் பதவியில் இருந்த அமைச்சர்கள் பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை போன்ற பாரிய திட்டங்களை முன்னெடுத்தார்கள். எமது அமைச்சரும் இது போன்ற திட்டங்களை இனங்கண்டு முன்னெடுக்க வேண்டும்.

அரசுடன் இணைவதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் வேட்பாளர்களை நிறுத்தும் போது அனைவரையும் எமது கட்சியே நிறுத்த வேண்டும்.

தேர்தலின், இறுதிக்கட்டம் வரை நிலமை எமக்கு சாதகமாகவே ,இருந்தது: ஜனாதிபதியின் படத்தை பிரசாரங்களுக்காக முன்நிலைப்படுத்த முனைந்ததை அடுத்தே நிலமைகள் தலை கீழாக மாறியிருக்கின்றன.

நாட்டில் கொலைகள் ,இடம்பெறுவது சகஜம். எல்லா அரசியல் கட்சிகளுமே இந்தப்பிரச்சினையை சந்தித்துள்ளன. ,இது ஒன்றும் பிரச்சினை இல்லை. ஈபிடிபி தனது வரலாற்றில் மக்களுக்காக உச்சகட்ட சேவைகளை வழங்கி இருக்கிறது.

பல்வேறு வலயங்களிலும் தனது கிளைகளை நிறுவி பரந்துபட்டு தனது பணிகளை ஈபிடிபி முன்னெடுத்திருக்கிறது. ஆனால் கட்சியை அரசு ஓரங்கட்டுகிறதா என்றும் எண்ணத்தோன்றுகிறது.

பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்குவதில்லை. அவைகள் தவறாக வழிநடத்தப்படுகின்றன. கமலின் விடயம் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது. தினமுரசு பத்திரிகை மூலம் உங்கள் சரியான கருத்து வெளிப்பட நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

தோழர் ரங்கனின் வெற்றியை எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் இறுதி நேரத்தில் நிலமைகள் பிசகி விட்டன. அடுத்து வரும் தேர்தல்களில் ஈ.பி.டி.பி வடமாகாண சபையை நிச்சயம் கைப்பற்றும்.

தேர்தலின் போது அமைச்சரை துரோகி என்கிறார்கள். ஆனால் துரோகி என கூறிக் கொள்ளும் ,இந்த அமைச்சரிடமிருந்துதான் சந்தர்ப்பங்கள், சூழல்களை பயன்படுத்தி உதவிகளை பெற்றுக்கொண்டு விடுகிறார்கள்.

கட்சிக்கு துரோகிப் பட்டம் சூட்டுபவர்கள் அதனிடமே வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அரசாங்கத்தை குறை கூறுகிறார்கள். நடந்து முடிந்த போரில் மக்கள் கேடயமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். உண்மையான ஒரு மக்கள் தலைவன் என்றால் அவன் மக்களை காப்பாற்றுபவனாக ,இருக்க வேண்டும்.

மக்களுக்கு எவ்வகையிலா வது உதவ வேண்டும் என்ற உணர்விருந்தால் வெற்றிலையாக இருந்தாலென்ன மாவிலையாக இருந்தாலென்ன அவையெல்லாம் எமக்கு பிரச்சினையில்லை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வாரி வழங்கி இருக்கிறார். முடிந்தால் தமிழ் கூட்டமைப்பினர் மக்களுக்கு உதவிசெய்து காட்டட்டும். பார்க்கலாம்.


மூன்று தேர்தலிலும் ஈ.பி.டி.பி தோல்வியை தழுவி இருக்கிறது. எட்டப்பர் மாதிரி எங் களுடன் ஒட்டிக்கொண்டு இருந்துவிட்டு பிறகு அப்பால் சென்று எங்களை சிங்கள கட்சி என்கிறார்கள். தோழர் ரங்கனுக்கு இருந்த பலமான ஆதரவு தமிழ் தேசியத்தின் பெயரால் மறுதலிக்கப்பட்டிருக்கிறது.

இச்சந்திப்புக்காக வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து தொடர்மழையையும் பொருட்படுத்தாது அணிதிரண்டிருந்த மக்களை வரவேற்று கட்சியின் பிரதேச அமைப்பாளர் தோழர் ரங்கன் உரையாற்றினார்.

இன்றைய சந்ததிப்பில் நீங்கள் முன்வைக்கவிருக்கும் கருத்துக்கள் எமது கட்சியின் வளமான எதிர்காலத்தை தீர்மானிக்க இருக்கின்றன. கடந்த கால கட்சிப்பணிகளில் நீங்கள் முகம்கொடுத்த அனுபவங்களே எம்மை நாம் புடம்போட்டுக்கொள்வதற்கான சிறந்த வழிமுறையாக இருக்கும் எனவே, இச்சந்திப்பை மிகவும் பயனுள்ளதாக்கிக் கொள்ள உங்கள் ஆரோக்கியமான விமர்சனங்களை கட்சி எதிர்பார்த்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ஆதரவாளர்களின் கருத்துக்களை அடுத்து கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் (தோழர்கிபி) உரையாற்றினார். நாம் மக்களின் பெயரால் பெற்றுக்கொண்ட அதிகாரங்களுக்காக வடக்கு கிழக்குக்கும் அப்பால் மலையகம் தென்னிலங்கை பகுதி மக்களுக்கும் எமது அமைச்சர் அவர்களின் உதவி கிட்டியிருக்கிறது. நாம் மக்களுக்குரியவர்களாக இருந் தால்தான் அவர்கள் எமக்குரியவர்களாக இருப்பார்கள் என தனதுரையில் குறிப்பிட்டார்.

# மகிழ்வூட்டல் அரங்க பயிற்சிப் பட்டறை



முல்லைத்தீவு முள்ளியவளை பாரதி சிறுவர் இல்லம் முத்தையன்கட்டு அன்பு இல்லம் சிறுவர்களுக்கான மகிழ்வூட்டல் அரங்கப்பயிற்சிப்பட்டறை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. இப்பயிற்சிப் பட்டறையில் பாரதி இல்லத்தைச் நேர்ந்த 80 மாணவிகளும், அன்பு இல்லத்தினைச் சேர்ந்த 80 மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

பயிற்சிப்பட்டறையின் வளவாளர்களாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வழிகாட்டலும் ஆலோசனைப்பிரிவின் ஆசிரியர் நா.கு. மகிழ்ச்சிகரன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத் துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரன், சுவிஸ் நாட்டைச் சேர்ந்த மதி அமிர்தன் பொலரன் சுதா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இப்பயிற்சிப்பட்டறையில் மகிழ்வான கற்றலுக்கு மாணவர்களுக்கு தடையாக உள்ள விடயங்களினை நீக்குவதற்கான வழிகள் கற்பனையாற்றல் விருத்தி செய்தல் படைப்பாக்கத்திறன் மகிழ்வான வாழ்வினைக் கட்டியெழுப்புதல் போன்ற விடயங்கள் மாணவர்களுக்கு பயிற்சிகளாக வழங்கப்பட்டன.

இப்பயிற்சிப்பட்டறை தொடர்பாக மாணவ மாணவிகள் கருத்து தெரிவிக்கும் போது மிகவும் பயனுள்ள வகையில் அமைந்ததுடன், கற்றலுக்கான இலக்கு நோக்கி அடைவதற்கான வழிவகைகள் தொடர்பாக அறிந்ததாகவும் மகிழ்வான ஒரு பொழுதாக இருந்ததாகவும் கருத்து தெரிவித்தார்கள். இப்பயிற்சிப்பட்டறையில் சிறுவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள். (48)

# குற்றச் செயல்களின் குறிகாட்டி அம்பலம் யாழில் ஒரு வாரத்தில் 208 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ்.மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச்செயல்களின் நிமித்தம் நீதிமன்றப் பிடியாணையின் பிரகாரமும் 208 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொகான் டயஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.பொலிஸ் பிரிவில் அடித்துக் காயப்படுத்திய குற்றத்திற்காக 18 பேரும், பிடியாணையின் பிரகாரம் 22 பேரும், சந்தேகத்தின் பேரில் 8 பேரும், போலியான தங்கத்தை வங்கியில் அடகுவைத்தவர்கள் 11 உட்பட 115 பேரும்,

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பிடியாணையின் பிரகாரம் 19 பேரும், சந்தேகத்தின் பேரில் 9 பேரும் உட்பட ஏனைய குற்றத்திற்காகவும் மொத்தம் 93 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிடடார்.

மேலும் பொலிஸாருக்கு அரசாங்கம் சம்பளம் வழங்கி வருகிறது. பொதுமக்களுக்கு சேவை செய்யவே. எனவே பொதுமக்கள் பொலிஸாருக்கு காசு கொடுக்கவேண்டியதில்லை என்றும் தெரிவித்த பிரதிப் பொலிஸமா அதிபர் அவ்வாறு பொது மக்களிடம் காசு பெறும் பொலிஸார் குறித்து தமக்கு அறியத் தரும்படியும் அவர் கேட்டுக் கொண்டார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தமிழில் முறைப்பாடுகள் பதிவு செய்வதற்கு தமிழ் தெரிந்த பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

அவ்வாறு இல்லாது இருக்கும் பொலிஸ் நிலையங்கள் குறித்து தமக்குத் தெரியப்படுத்துமாறும் அவர் பொது மக்களை மேலும் கேட்டுக் கொண்டார். (பா)

# மணி அடிக்க பணிப்பு

வலி.தென் மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட பண்டத்தரிப்பு பட்டின பொதுச் சந்தையில் புதிய நடைமுறையொன்று அமு லாகியுள்ளது.

இந் நடைமுறையினை வலி. தென் மேற்கு பிரதேசசபையின் உப தவிசாளர் சண்முகம் சிவகுமாரன் கொண்டுவந்துள்ளார்.

பண்டத்தரிப்பு சந்திக்கண்மையிலுள்ள இக் குறித்த பண்டத்தரிப்பு பட்டின பொதுச் சந்தைக்கு இரவு நேரத்தில் கடமைக்காக காவலாளி ஒருவர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார். இவரது கடமைகளினைக் கண்காணிக்கும் பொருட்டு ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒருமுறை மணி அடித்தல் வேண்டும் எனப் புதிய நடை முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த காவலாளி கடமை நேரத்தில் வெளியில் சென்று வருகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டே இப்புதிய நடைமுறையானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (48)

# பிரதம செயலாளரின் வினைத்திறனை உள்ளூராட்சிசபை செயலாளர்கள் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையின் வரவு செலவுதிட்டம் முதன்முதலாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அரங்கேறியுள்ளது.

இவ்வரவு செலவுத்திட்டத்தினை முழுமையாக அமைச்சுகளிடம் இருந்து தொகுத்து உரிய நேரத்தில் வழங்கியுள்ளார் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி

பிரதம செயலாளரின் வினைத்திறன்மிகு செயலை பாராட்ட வேண்டும் என வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாண பிரதம செயலாளரின் வினைத திறன் மிக்க செயலும் அபிவிருத்தியும் தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மாகாணம் திருகோணமலையில் இருந்து வடக்கு மாகாணத்திற்கு வந்தபின்னர் பல்வேறு நிர்வாக சிக்கல்களை வடக்கு மாகாணம் எதிர்நோக்கியது.

இக்காலத்தில் வ்டமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக இருந்து பணியாற்றிய வேளையில் அதிமேதகு ஜனாதிபதியினால் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டவர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி.

திருமதி ரமேஸ் விஜயலட்சுமி வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து பிரதம செயலாளரின் நேரடி நிர்வாகத்திற்கு உட்பட்ட கல்வி, சுகாதாரம், விவசாயம், உட்கட்டுமானம், உள்ளூராட்சி அமைச்சுக்கள் பெருவளர்ச்சி அபிவிருத்தியினை கொண்டு அமைந்ததோடு ஏனைய வெளிமாகாண்ங்களின் அபிவிருத்தியைவிட வடக்கு மாகாணம் சிறப்பானதொரு வெளிப்பாட்டினை கொண்டமைந்ததுடன்

ஜனாதிபதியின் பாராட்டுதல்களுக்கும் உள்ளானார்.

தற்போது வடக்கு மாகாண பிரதம செயலாளர் இலங்கை நிர்வாக சேவையின் (Slas-speaial grade) விசேட தர நிர்வாக பணியாற்றிவருவதோடு வடமாகாண சபையுடன் இணைந்த வகையில் முதன்முதலாக வரவு செலவுத் திட்டத்தை அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்களின் ஒத்துழைப்போடு நிறைவேற்றி வடக்கின் அபிவிருத்திக்கு கைகொடுத்துள்ளார்.

இதன்மூலம் 2014ஆம் ஆண்டு அபிவிருத்தியின் ஆண்டாக வடமாகாணசபை செல்லக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் வடக்கின் அபிவிருத்திக்கு பல வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைத்து பேசியும் புதிய வருமானமூலங்களை திரட்டி அபிவிருத்தி செய்வதற்குப் பிரதம செயலாளர் நடவடிக்கை எடுத்து வருவதை வடக்குமாகாண உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் இணைந்த வகையில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# கிளிநொச்சியில் நடைபெற்ற மனித உரிமைகள் தின நிகழ்வு



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மனித உரிமைகள் தின நிகழ்வு, நேற்று கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தலைமையில் இடம்பெற்ற ,இந்நிகழ்வில் மனித உரிமைகள் தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் ந.செல்வக்குமரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசஅதிபர் செ.ஸ்ரீநிவாசன் மற்றும் சட்ட உதவி அணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்ட தலைவியும் சட்டத்தரணியும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதவானுமாகிய விஜயராணி கிளிநொச்சி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகா எட்மன் மகேந்திர ,ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் கிளிநொச்சி மகாவித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களின் குற்றச்செயலை தடுப்பது புனர்வாழ்வா தண்டனையா எனும் தலைப்பில் விவாத அரங்கும் இடம்பெற்றது இந்நிகழ்வில் மதகுருமார்கள் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர்கலந்துகொண்டனர். (29)

# விபரம் திரட்டு

கிளிநொச்சி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவைகளை வழங்கும் அரச துறைகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான விபரங்களை மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தினர் சேகரித்து வருகின்றனர்.

உற்பத்தி திறன் ஊக்குவிப்புத் துறை அமைச்சின் கீழ்வரும் இத் திணைக்களம் தனது சேவைகளை வினைத்திறனுடன் வழங்க இத்தகைய விபரங்களைச் சேகரித்து வருகின்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கு பொருத்தமான சேவைகளை வழங்க இத்தகைய தரவு சேகரிப்பு உதவும் என்பதாலேயே சேகரிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் கிளிநொச்சி மாவட்டத்தில் பலதுறையான தரவுகளைச் சேகரித்துவருகின்றது.

மாவட்ட மனிதவலு வேலைவ்ாய்ப்பு அலுவலர் எஸ். கமலதாசன் அரசாங்க அதிபரின் வழிகாட்டலின் கீழ் தனது அமைச்சின் பணிகளை ஆற்றிவருகின்றார். (90)



பார்த்தீனியம் ஒழிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையும் கோப்பாய் வடக்கு கிராம சேவையாளரும் ஒழுங்கு செய்த பார்த்தீனியம் ஒழிப்பு விழிப்புணர்வு செயற்றிட்டத்தில் கோப்பாய் கண்ணகை அம்மன் கோவிலடி சனசமூக நிலைய அங்கத்தவர்கள் பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதைக் காணலாம். (48)

# பதிவிருக்கப் பெட்டகம்

மேலைத்தேய பணக்கார நாடொன்றில், கையில் காசில்லாமல் புதிதாக வரும் ஒருவர், உணவு விடுதியில் சுத்திகரிப்பு வேலை செய்து சம்பாதித்து, வசதியாக வாழ முடிகிறது. போதுமான பணம் சம்பாதித்து, ஒரு வருடத்திலேயே சொந்த வீடு, கார் என்று வாங்க முடிகின்றது. ஆனால், இலங்கையில், இந்தியாவில் அதே வேலையை செய்யும் ஒருவர், ஒரு சைக்கிள் கூட வாங்க முடியாமல், வீட்டு வாடகையை கூட ஒழுங்காக கட்ட முடியாத நிலைக்கு என்ன காரணம்? இருவரும் ஒரே உழைப்பைத் தானே செலுத்துகின்றனர்? ஒரு தொழிலாளியின் ஒரு மணிநேர உழைப்புக்கு, நாடுகளுக்கு ஏற்றவாறு விலை தீர்மானிக்கப்படுகின்றது. அதனால் தான், தமது உழைப்புக்கு அதிக் விலை கிடைக்கும் நாட்டை நோக்கி பலர் புலம்பெயர்ந்து செல்கின்றனர். உலகப் பொருளாதாரத்தை சந்தை தீர்மானிக்கும் காலத்தில், தொழிலாளர்களின் வெளிநாடுகளை நோக்கிய இடப்பெயர்வும் தடுக்க முடியாதது.

பணக்கார நாடுகளில் தொழிலாளிக்கு கொடுக்கும் கூலி அதிகம் என்பதால், பொருளின் உற்பத்திச் செலவும் அதிகமாகின்றது. அவற்றை நுகர்வதற்கு தகுதியான வருமானம் பெறும் மக்களைக் கொண்டுள்ளது. பொருளின் விலைக்கும், தொழிலாளியின் கூலிக்கும் இடையில் சிறிதளவே வித்தியாசம் இருப்பதால், மேலதிக இலாபத்திற்காக சர்வதேச சந்தையை பிடித்து வைக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. மேலைத்தேய பன்னாட்டு நிறுவனங்கள், உலகம் முழுவதும் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி, தமது பொருட்களை அதே விலைக்கு விற்க முடிகின்றது. "வெளிநாட்டுப் பொருள் என்றால் தரமானதாக இருக்கும்" என்று நம்பும் மக்கள் வாழும் இலங்கை, இந்தியா போன்ற வறிய நாடுகளிலும், அந்தப் பொருட்கள், அதே விலைக்கு விற்கப்படுகின்றன. வறிய நாடுகளின் பணக்காரர்கள் அவற்றை வாங்கி அனுபவிக்கிறார்கள். அதே நேரம், செல்வந்த நாடுகளில், தங்கி வேலை செய்யும் வாய்ப்புக் கிடைத்த, அடிமட்ட தொழிலாளர்களும், அதே விலையை கொடுத்து அனுபவிக்க முடிகின்றது.

உலகமயமாக்கல், சுதந்திர வர்த்தகம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டாலும், வறிய நாடுகள் தமது பொருட்களை சர்வதேச சந்தைக்கு கொண்டு வர முடியாமல் திணறுகின்றன. இது வரை காலமும், சர்வதேச தரம் வாய்ந்த "பிராண்ட்" பொருள் எதையும் அவை சந்தைப் படுத்த முடியவில்லை. அதற்குக் காரணம், மூலதனம் குவித்து வைத்திருக்கும் நாடுகளின் அசுர பலம், சர்வதேச சந்தையை கட்டுப்படுத்துகின்றது. சந்தையில் நிலவும் "சுதந்திரமான போட்டி", ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டால் மட்டுமே, வறிய நாடுகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் ஊதியம் உயர வாய்ப்புண்டு.

ஒரு சிக்கலான பொருளாதார கட்டமைப்பு புரிந்து கொள்ள முடியாத, மேலைத்தேய நாட்டு பாட்டாளி வர்க்கம், நடுத்தர வர்க்கத்தின் ஒரு பிரிவாக, சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் வாழ்வதாக, தன்னைத் தானே நினைத்துக் கொள்கின்றது. அந்த நாடுகளில் வாழும், தமிழ் தொழிலாளர்களும் அதற்கு விதிவிலக்கல்ல. இந்த தோற்றப்பாடு, ஐரோப்பிய சமூகத்திற்கு புதிய விடயமல்ல. "பாட்டாளி வர்க்கத்தில் மேட்டுக்குடியின் உருவாக்கம்" (labour aristocracy) பற்றி, கார்ல் மார்க்ஸ் 150 வருடங்களுக்கு முன்னரே எழுதி இருக்கிறார். தமது சமூக அந்தஸ்து குறித்து பெருமைப்படும், மேலைத்தேய தமிழ் பாட்டாளி வர்க்கமும், மார்க்ஸ் எழுதியவற்றை ஒரு தடவை வாசித்துப் பார்ப்பது நல்லது.

**– கலையரசன்**

இடதுசாரி, வலதுசாரி என்பதன் மிக எளிய அடையாளம் என்பது மக்கள் மையமான சிந்தனை, ஆதிக்க மையமான சிந்தனை என்பதே. ஒவ்வொரு தனிமனிதருக்காகத் தான் அமைப்பும், சமூக விதிகளும், அரசுகளும் என்னும் புரிதலும்; அரசு, சமூக மேலாண்மை, விதிகள் இவற்றிற்கு சேவை செய்து அடிமைப்பட்டு இருப்பதற்குத்தான் தனி மனிதர்கள் என்னும் புரிதலுக்கும் இடையில் உள்ள மோதலில் தொடங்குவது இது. **– பிரேம் ரமேஷ்**

எவருடைய வாழ்க்கை வாழ்க்கையாக கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது? வாழ்வதற்கான உரிமை எவரெவருக்கு உண்டு என்று இங்கே புரிந்துகொள்ளப்படுகிறது? இவையே இங்கு கேட்கப்பட வேண்டும். **– ஜுடித் பட்லர்**

# எதிர்கால நடவடிக்கைகளை இனங்காண ஈ.பி.டி.பி.யின் ஆதரவாளர்களுடன் சந்திப்பு



நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி முன்னெடுக்க வேண்டிய எதிர்கால நடவடிக்கைகளை இனங்காணவென கட்சி ஆதரவாளர்களுக்கிடையிலான சந்திப்பொன்று அண்மையில் நல்லூர் பொற்பதியில் நடைபெற்றது.

ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச இணைப்பாளர் அம்பலம் ரவீந்திரதாசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பீ.யின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் ஆரம்ப உரைநிகழ்த்தினார்.

நெடுந்தீவு பிரதேச சபை தலைவரின் ஈவிரக்கம் அற்ற படுகொலையினை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவ்வாறான செயல்களினை எமது கட்சி ஒரு போதும் அனுமதிக்காது. அதேபோல் இவ்வாறான பாதிப்புகள் யாருக்கு நடந்தாலும் இதனை நாம் அனுமதிக்கப் போவதில்லை. ஆனால இப்பிரச்சினையை பத்திரிகைகள் தமது வியாபார நோக்கத்திற்காகவும், அரசியல் பழிவாங்கலுககாகவும் உண்மைக்கு புறம்பான செய்திகளை திரிவுபடுத்தி எழுதி வருகின்றன. இதனால் இதன் உண்மைத்தன்மையை மக்களுக்கு விளங்கப்படுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது.

உதாரணமாக காரைநகர் இராணுவமுகாம் தாக்குதலில் கமலேந்திரனின் சகோதரி சோபா கொல்லப்பட்டதாக குடாநாட்டிலிருந்து வெளியான நாளிதளொன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் உண்மையில் சோபா என்பவர் கமலேந்திரனின் சகோதரி அல்ல. இவ்வாறு பல கதைகளை உருவாக்கி பத்திரிகை தர்மத்துக்கு முரணாக செய்திகளை வெளியிடுவதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்) நெடுந்தீவு பிரதேசசபை தலைவரின் படுகொலையினை வன்மையாகக் கண்டித்ததுடன், இதற்கு நீதிமன்றம் சரியானதொரு தீர்ப்பினை வழங்கும், அதனூடாக நீதி நிலை நாட்டப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, ஈ.பி.டி.பி வடமராட்சி பிரதேச இணைப்பாளர் ஜயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தனதுரையில், நீண்ட கால அரசியல் வரலாறு கொண்ட எமது கட்சியை காலத்தின் தேவை உணர்ந்து புனரமைப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். அதன் வெளிப்பாடே தீவகத்தில் சில அலுவலகங்கள் மூடப்பட்டமைக்கான காரணம் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கட்சி ஆதரவாளர்கள், பொது மக்கள் கருத்துத் தெரிவிக்கையில, எமது கட்சியிலும் அதன் தலைமையிலும் பூரண நம்பிக்கை இருக்கிறது. ஆனால் பத்திரிகைகள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை தொடர்ந்து எழுதும் போது தாம் பெரும் மன உளைச்சலுக்கு ஆளாவதாக கருத்து வெளியிட்டனர். இச்சந்திப்பின் போது ஈ.பி.டி.பி.யின் பிரதேச பொறுப்பாளர்கள், மற்றும் கட்சி முக்கியஸ்தாகள் எனப பலரும கலந்துகொண்டனர்.

# மன்னாரில் கைதான மூவரையும் தொடர்ந்தும் விசாரிக்க உத்தரவு

மன்னார், முருங்கன் பகுதியில் கடந்த மாதம் 27ஆம் திகதி கைது செய்யப்பட்ட மூவரையும் தொடர்ந்து 14 நாட்களுக்கு வவுனியா பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள மன்னார் பதில் நீதவான் இ.கயஸ் பல்டானோ நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் முருங்கன் பகுதியில் உள்ள வீதி மதில்களில் கடந்த நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாவீரர் தினம் என எழுதிக்கொண்டிருந்ததாக சந்தேகத்தின் பேரில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மூவரை இராணுவத்தினர் கைது செய்து முருங்கன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் முருங்கன் பொலிஸாரினால் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய தொடர்ந்தும் வவுனியா பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் சந்தேக நபர்கள் மூவரையும் நேற்று முன்தினம் மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார், சந்தேகநபர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நீதவானின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். இதனைக் கருத்திற் கொண்ட நீதவான், குறித்த சந்தேக நபர்களை தொடர்ந்தும் 14 நாட்கள் விசாரணைகளை மேற்கொள்ள வவுனியா பயங்கரவாத தடுப்புப்பிரிவு பொலிஸாருக்கு அனுமதி வழங்கியதோடு குறித்த மூவரையும் எதிர் வரும் 27ஆம் திகதி மீண்டும் மன்றில் ஆஜர்ப்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

# இல்லச்சிறுவர்களுக்கு மாற்றுப்பாதுகாப்பு முறை

சிறுவர் இல்லங்களில் உள்ள சிறுவர்களுக்கு மாற்று பாதுகாப்பு முறைகள் அறிமுகஞ் செய்யப்படவுள்ளதாக சிறுவர் பாதுகாப்புச் சேவை ஆணையாளர் யமுனா பெரேரா தெரிவித்துள்ளார். இந்தத் திட்டத்தின் மூலம் பல கட்டங்களாக சிறுவர் இல்லங்களில் இருக்கும் சிறுவர்கள் சமூகங்களுடன் இணைக்கப்படவுள்ளனர்.

இந்தத் திட்டம் அடுத்த ஆண்டு நடைமுறைக்கு வரும்.

இதன் முதல் கட்டமாக சிறுவர் இல்லங்களிலுள்ள, சமூகத்துடன் இணைக்க கூடிய சிறுவர்கள் அனைவரும் அவர்களின் குடும்ப சூழலில் பாதுகாப்பு பெற்றுத் தருவதுடன், இரணடாம் கட்டமாக அவர்களுக்கு தேசிய தொழில் வாய்ப்பினைப பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 8 பிள்ளைகளின் தந்தை யானை தாக்கிப் பலி

மட்டக்களப்பு, போரதீவுப் பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி இளைஞர் விவசாயத் திட்டக் கிராமத்தினைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கிலக்காகி மரணமடைந்துள்ளார்.

தும்பங்கேணி இளைஞர் விவசாயத் திட்டக் கிராமத்தினைச் சேர்ந்த 45 வயதுடைய செல்வநாயகம்-இராசநாயகம் என்ற 8 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு காட்டு யானையின் தாக்குதலுக்கு இலககாகி பலியாகியுள்ளார்.

இவர் கச்சக்கொடி சுவாமி மலை எனும் பிரதேசத்திற்கு விறகு ஷேகரிபபதற்கு நேற்றுமுன்திளம காலை சென்றுள்ளார

வீதியினால் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது இவரை காட்டு யானை தாக்கியுள்ளது. இவருடன் விறகு சேகரிப்பதற்கு சென்ற ஏனைய இருவரும் தப்பியுள்ளனர்.

# மருதானை தமிழ் வர்த்தகரிடம் கப்பம் பெற முயன்றவர்கள் கைது

மருதானை பகுதி தமிழ் வர்த்தகர் ஒருவரிடம் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் என்று பொய் கூறி 2 இலட்சம் ரூபா கப்பம் பெற முயற்சித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வு பிரிவின் ஏஎஸ்பி ஹெட்டியாராச்சி என்றும் ஓஐசி என்றும் கூறிய இருவர் இவ்வாறு கப்பம் பெற முயற்சித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட இருவரும் தமிழர்கள் என்பதுடன் ஏஎஸ்பி எனக் கூறியவர் கவுடான பிரதேசத்தைச் சேர்ந்த வெள்ளசாமி கிறிஸ்டி என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் வழிபாட்டு சபை ஒன்றில் பூசகராகவும் இருந்துள்ளார்.

ஓஐசி என்று கூறியவர் கொழும்பு 6, டபிள்யு ஏ சில்வா மாவத்தையைச் சேர்ந்த கனகராஜா சஜீவகான் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## அதிவேக நெடுஞ்சாலையில் சைக்கிளில் பயணித்தவர் கைது

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க நுழைவாயிலில் உட்சென்று சீதுவ பண அறவீட்டு நிலையம் வரை குறித்த நபர் துவிச்சக்கர வண்டியில் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு தனிநபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 2014 ஏப்ரல 21ஆம் திகதி அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

சந்தேகநபர் துவிச்சக்கர வணடியை அதிவேக வீதிக்குள் உட்செலுத்தும் போது அங்கு கடமையை தவறவிட்ட இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களின் சேவை இரத்து செய்யப்பட்டுள்ளது. தெற்கு மற்றும் கட்டுநாயக்க அதிவேக வீதிகளில் முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கரவண்டி, உழவியந்திரங்கள் உள்ளிட்ட வாகனங்கள் பயணிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கு இலங்கை ஜனாதிபதி விஜயம்




கென்யாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் காலை நைரோபியில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு விஜயம் செய்தார்.

நைரோபி ஐ.நா. அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் திருமதி சாலே வேக் செவ்டே, மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் அசிம் ஸ்டெய்னர் ஆகியோரினால் ஜனாதிபதி வரவேற்கப்பட்டார்.

ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் பார்வைக்கு வைப்பதற்காக கண்டி பெரஹற வரையப்பட்ட ஓவியம் ஒன்றை இலங்கையின் சார்பில் ஜனாதிபதி பரிசளித்தார்.

தமது விஜயத்தின் நினைவாக அலுவலக வளாகத்தில் ஆபிரிக்க இறப்பர் மரக்கன்று ஒன்றையும் ஜனாதிபதி நாட்டினார்.







கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் சரஸ்வதி கலையரங்கில் நடைபெற்றபோது விருந்தினர்களை மாணவர்கள் அழைத்துவருவதையும், மாணவர்களின் கலைநிகழ்வினையும், கௌரவிக்கப்பட்ட மாணவர்களுடன், ஆசிரியர்கள், விருந்தினர்கள் நிற்பதையும் காணலாம். (51)

33. சனக்கூட்டமொன்றில் 2/9 பங்கினர் 8 பேர் ஆயின் அக்கூட்டத்திலிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை.
1. 4 2. 36 3. 92

34. சிராயாவால் நான்கு வருடங்களுக்கு ஒருமுறை மட்டுமே பிறந்தநாள் கொண்டாட முடியும். அப்படியாயின் அவளின் சரியான பிறந்த திகதி.
1. 04.04.1992 2. 14.04.1992 3. 29.02.1992

**கீழே சில தரவுகள் தரப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

35. விசுவின் நண்பி ராதிகா. ராதிகாவின் நண்பி கமலா. கமலாவின் நண்பி சுனிதா. ஆகவே சுனிதாவின் நண்பன் விசுவாகும்.
1. சரி 2. பிழை 3. கூறமுடியாது

36. புலி பருந்தைக் கடிக்கும். பருந்து முயலைக் கடிக்கும். ஆகவே புலி முயலைக் கடிக்கும்.
1. சரி 2. பிழை 3. கூறமுடியாது

37. ராதாவைவிட மாலா 30 ரூபா குறைவாக வைத்திருக்கின்றாள். அவர்கள் இருவரிடமும் மொத்தம் 100 ரூபா இருந்தால் மாலாவிடம் மொத்தம் எத்தனை ரூபா இருக்கும்.
1. 35 2. 60 3. 70

38. கொழும்பை நோக்கிச் சென்ற பேருந்து ஒன்று புகையிரத வண்டியில் மோதியது. இவ்விபத்துக்குக் காரணமாக இருக்கக் கூடியது.
1. பஸ் சாரதியின் கவனயீனம் ஆகும்
2. புகையிரத சாரதியின் கவனயீனம் ஆகும்
3. பலத்த காற்று வீசியமையினால் ஆகும்

39. ஞாயிற்றுக்கிழமைகளில் வீதிகளில் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கை குறைவாகும். அதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
1. ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால் ஆகும்.
2. ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் பஸ் வண்டியில் பயணம் செய்வதனால் ஆகும்
3. ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் சினிமாவுக்குச் சென்றுவிடுகின்றனர் என்பதால் ஆகும்.

40. இலங்கை ஒரு தீவு ஆகும். அவ்வாறு கூறப்படுவது.
1. இலங்கையைச் சுற்றிக் கடல் இருப்பதனால் ஆகும்
2. இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதனால் ஆகும்
3. இலங்கை மாங்காய் வடிவில் அமைந்திருப்பதனால் ஆகும்

41. இரவில் நித்திரைக்குச் செல்லும் முன் பல் துலக்குதல் வேண்டும். அதற்குக் காரணம்
1. பல் துலக்கிய பின் நன்கு தூங்கலாம் என்பதால் ஆகும்
2. பல் பாதுகாக்கப்படும் என்பதால் ஆகும்
3. பற்கள் சக்தி பெறுகின்றன என்பதால் ஆகும்

42. மாணவர்கள் அதிகமாகப் புத்தகங்கள் வாசிப்பது சிறந்த ஓர் பழக்கமாகும். காரணம்.
1. புத்தகங்கள் வாசிப்பதனால் அறிவு விருத்தியடையும் என்பதால் ஆகும்
2. புத்தகங்கள் விலை குறைவு என்பதனால் ஆகும்
3. ஆசிரியர்களும் புத்தகங்களையே வாசிக்கின்றார்கள் என்பதனால் ஆகும்.

43. 35. 0.001, 0.01, 0.1, 0.0001 இவைகளில் பெரிய எண்
1. 0.001 2. 0.01 3. 0.1

**சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

44. வீதி விளக்கில் செம்மஞ்சள் நிறம் பயணத்தை ஆரம்பிக்கலாம் என்பதற்கான சமிக்ஞையாகும் ( )

45. ஆடையில் தீப்பற்றினால் விரைவாக ஓட வேண்டும் ( )

46. மின்னினால் பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக செயற்கைச் சுவாசம் அளிக்க வேண்டும் ( )

47. இலங்கையின் மிகப் பெரிய மின் உற்பத்தி நிலையம் விக்டோரியா வலு நிலையம் ஆகும். ( )

48. ஆறுகள் கடலுடன் சங்கமிக்கும் இடம் கழிமுகம் எனப்படும். ( )



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014


பகுதி - I

# கல்வி முரசு

1.30 மணி



01. கொடுக்கப்பட்ட இருப்பிடம்.



1. விடாமுயற்சியைக் குறிப்பது
2. களவாகப் பிறர் பொருளைப் பயன்படுத்துவது
3. குச்சிகளால் ஆக்கப்பட்டது.

02. கொடுக்கப்பட்ட படத்திற்குப் பொருத்தமான வாக்கியம்



1. வீரியமானதும், கொடியதும்
2. நீரிலும் நிலத்திலும் வாழ்வது
3. நச்சுத் தன்மையுடையதும் சிறு பிராணிகளை உண்ணுவதும்

**பொருத்தமான விடையைத் தெரிந்து கோடிடுக.**

03. கேலியாகவும் அறிவுத்திறனுடனும் பேசுபவர்
1. கவிஞர் 2. விகடகவி 3. புலவர் 4. பேராசிரியர்

04. 'தினேஷ் அதிகம் கெட்டுவிட்டான். அவனது பழக்கவழக்கங்கள் சரியில்லை' என்று எல்லோரும் பேசக் காரணமாக இருக்கக்கூடியது.
1. அவனுடைய பெற்றோர் அவன் மீது அதிக அன்பு காட்டுதல்
2. பாடசாலை விடுதியின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுதல்
3. வயது வந்துவிட்டதால் திமிர் பிடித்துவிட்டது
4. கெட்ட நண்பர்களின் தொடர்பினால் நடத்தை மாறிவிட்டது

05. அமலன் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியின் போது 100 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் நல்ல பயிற்சி பெற்றும் அவன் அந்த நிகழ்ச்சியில் வெற்றிபெற முடியவில்லை. இதற்கான காரணமாக அமையக் கூடியது.
1. உணவு உண்ணாமல் பங்குபற்றியமை
2. அமலனை விட மிகவேகமாக ஓடக்கூடியவர்கள் இருந்தமை
3. விளையாட்டு மைதானம் வேறுபட்டமை

**நெல் வயல்களில் அல்லது பண்ணைகளில் பின்வருவனவற்றைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சொல் எழுதுக.**

06. வயல்

.................................................................................

07. மாடுகள்

.................................................................................

08. கலப்பை

.................................................................................

**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.**

09 இன்று காலைக் கூட்டத்தின்போது வகுப்பு மாணவன் ஒருவன் மயக்கமடைந்து நிலத்தில் விழுந்துவிட்டான். பின்வரும் எக்காரணத்தினால் அவனுக்கு அவ்வாறு மயக்கம் ஏற்பட்டிருக்கலாம்?
1. நேற்று மாலை வரை அவன் விளையாடியமை
2. கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் அவனுக்கு விருப்பமில்லாது இருந்தமை
3. அவன் காலை உணவை உண்ணாமல் பாடசாலைக்கு வந்தமை

10. புலமைப்பரிசில் பரீட்சையில் திறமையாகச் சித்தியடைவேன் என்று சாந்தன் கூறுகின்றான். அவன் இவ்வாறு கூறுவது,
1. இப்பரீட்சையில் எவரும் இலகுவாகச் சித்தியடையலாம் என்பதனாலாகும்
2. அவன் பரீட்சைக்கு நன்கு தயாராகி இருந்ததனாலாகும்
3. இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் பரீட்சை நடைபெறுவதனாலாகும்.

11. அருண் பாடசாலைக்கு அருகில் வசித்து வந்தான். எனினும் அவன் பல நாட்களாகப் பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை. அவன் பாடசாலைககுச் சமுகமளிக்காததற்குக் காரணமாக இருகக்கக் கூடியது எது?
1. அது பாடசாலை விடுமுறைக் காலமாக இருந்தமை
2. அருண் சுகவீன முற்றிருந்தமை
3. பாடசாலை பஸ் வராதிருந்தமை

12. நாளைய தினமும் சூரிய வெய்யில் இல்லாவிட்டால் பின்வருவனவற்றுள் எது நடந்திட அதிக வாய்ப்புண்டு.
1. தொடர்ந்து மின்சார விளக்கு எரிந்து கொண்டிருக்கும்
2. தொடர்ந்து இருட்டாக இருக்கும்
3. மக்கள் தொடர்ந்து தூங்கிக் கொண்டிருப்பார்கள்

13. நாட்டிலுள்ள மரங்கள் யாவற்றையும் வெட்டி அழித்தால் ஏற்படக்கூடிய மிகப் பிரதானமான பாதிப்பு இவற்றுள் எது?
1. வீடுகள் கட்டப்படுவது நின்றுவிடும்
2. மழை இல்லாமல்போய் வறட்சி உண்டாகும்
3. பறவைகளுக்கு கூடு கட்ட இடம் இல்லாமல் போகும்

14. ஆறு பசுக்கள் 6 சாக்குப் புல்லை 6 நாட்களில் தின்று முடிக்குமாயின், ஒரு பசு 6 சாக்குப் புல்லைத் தின்று முடிப்பதற்கு எவ்வளவு நாட்கள் எடுக்கும்?
1. 6 நாட்கள் 2. 12 நாட்கள் 3. 36 நாட்கள்

15. ஒரு சங்கத்தில் 10 பேர் உறுப்பினராக உள்ளனர். அவர்கள் மாதத்திற்கு ஒரு தடவை ஒழுங்கு முறையில் ஒவ்வொரு உறுப்பினரின் வீட்டில் கூடுவர். திரு.குணசேகரன் வீட்டில் சென்ற மார்ச் மாதம் கூட்டம் நடைபெற்றது. திரு.குணசேகரனின் வீட்டில் அடுத்த கூட்டம் எந்த மாதத்தில் நடைபெறும்?
1. ஜனவரி 2. பெப்ரவரி 3. நவம்பர்

16. சரவண்னுக்கு இப்போது வயது 9 ஆண்டுகளாக இருக்கும்போது, சமீனின் வயது 13 ஆண்டுகளாகும். சமீனின் வயது சரவணனின் வயதைவிட இரு மடங்காக இருந்தபோது சமீனின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?
1. 4 ஆண்டுகள் 2. 6 ஆண்டுகள் 3. 8 ஆண்டுகள்

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக.**

**(லக்சபானா, இரணைமடுக்குளம், மகாவலி, பம்பரகந்த, ஹற்றன்)**

17. இலங்கையில் மிக நீளமான ஆறு...........................................கங்கை ஆகும்.

18. நீர் மின்னைப் பெறுவதற்கு இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட வலு நிலையம்........................ ஆகும்.

19. மிக உயரமான நீர்வீழ்ச்சி ......... ........................................ நீர்வீழ்ச்சியாகும்.

20. மலை நாட்டிலிருந்து உருவாகும் ஆறுகளிலிருந்து நீரைப் பெறாதது..........................................ஆகும்.

21. மகாவலி கங்கை உற்பத்தியாவது..........................................மேட்டுநிலத்திலிருந்து ஆகும்.



22. உடற்பயிற்சி கண்காட்சிக்காக ஒரு வரிசையில் மாணவர்கள் நின்றனர். புனிதா முன்னிருந்து 17 ஆவதாக நின் றாள். பின்னிருந்து பார்க்கும்போது 24ஆவது ஆளாக நின்றாள். வரிசையில் நின்ற ஏனையோர் சிவப்புத் தொப்பி அணிந்திருக்க புனிதா மட்டும் வெள்ளைத் தொப்பி அணிந்திருந்தாள். அவ்வரிசையில் சிவப்புத் தொப்பி அணிந்தவர்கள் எத்தனை பேர்?
1. 41 2. 40 3. 39


23. 36 உடன் அதன் சம அளவையும், அதன் அரைப் பங்கையும், அரைப் பங்கின் அரைவாசியையும் ஒன்றையும் கூட்ட வரும் எண் யாது?
1. 127 2. 115 3. 100

24. கலா பிறந்ததினத்தை நாளை மறுதினம் வியாழக்கிழமை சிறப்பாகக் கொண்டாடுவாள். ஜெயா தனது பிறந்நாளை —நேற்று முதல்நாள் சிறப்பாகக் கொண்டாடினாள் எனின், ஜெயா பிறந்த நாளைக் கொண்டாடிய தினம்.
1. புதன்கிழமை 2. ஞாயிற்றுக்கிழமை 3. திங்கட்கிழமை


25. நான்கு வருடங்களுக்கு முன்னர் அமீரின் வயது 4 வருடங்களாகும். அப்போது அவரின் அம்மாவின் வயது அவனின் வயதைப் போல் 5 மடங்காகும். தற்போது அமீரின் அம்மாவின் வயது அமீரின் வயதின் எத்தனை மடங்கு.
1. 3 மடங்கு 2. 4 மடங்கு 3. 5 மடங்கு

26. 'கடி நாய் கவனம்' என்பது ஒரு
1. கட்டளை 2. வேண்டுகோள் 3. ஆபத்தைக் குறிக்கும் வாக்கியம்

27. எனது வயது 36. எனது அம்மாவின் வயது எனது வயதின் இரண்டு மடங்கிலும் 6 வயதுகள் குறைவாகுமெனின், நான் பிறந்து 4 வருடங்களின் பின்னர் எனது அம்மாவின் வயது என்னவாக இருந்திருக்கும்?
1. 30 2. 34 3. 3

28. 

சிறுவன் ஒருவன் மைதானமொன்றில் நடந்து சென்ற பாதைய அருகே உள்ள படம் காட்டுகின்றது. சிறுவன் ஆரம்பித்த இடம் A எழுத்தாலும் நடந்து முடிந்த இடம் B எழுத்தாலும் காட்டப்பட்டுள்ளன.
சிறுவன் எத்தனை முறை வலது பக்கமாகத் திரும்பினான்.
1. 6 2. 7 3. 8

29. 
புள்ளிக்கோட்டினால் வரையப்பட்ட பெரிய சதுரமுகியினைப் பூரணப்படுத்த உருவில் காண்பிக்கப்பட்டது போன்று சிறிய சதுரமுகிகள் இன்னும் எத்தனை தேவை?
1. 64 2. 54 3. 44 4. 42

30. 
1. பிள்ளை ஒன்று பரீட்சைக்காகப் படிக்கின்றது.
2. பிள்ளை ஒன்று ஏதோ வேலையில் ஈடுபட்டுள்ளது
3. பிள்ளை ஒன்று இரவு நேரத்தில் படித்துக்கொண்டிருக்கிறது

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றையும் கவனமாகப் படித்து சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

31. ஒரு மாணவன் 4 பாடங்களில் பெற்ற புள்ளிகள் முறையே கணிதம் -80, தமிழ் -70, ஆங்கிலம் -60, விஞ்ஞானம் -50 ஆயின், அவனது சராசரிப் புள்ளி.
1. 65 2. 55 3. 75

32. ஒரு இலக்கத்துடன் 8ஐக் கூட்டினால் வரும் விடை அவ்விலக்கத்தின் மும்மடங்காகவும், 4 ஐக் கூட்டினால் வரும் விடை அவ்விலக்கத்தின் இரு மடங்காகவும் இருக்கும். ஆகவே அவ்விலக்கம் யாது?
1. 8 2. 4 3. 16

# இலங்கையில் ஆயுட்காலம் அதிகரிப்பு மகப்பேற்று மரணம் வீழ்ச்சி

## –சுகாதார அமைச்சர்–



(கொழும்பு)

இலங்கையைப் பொறுத்த வரை மனிதரின் ஆயுட்காலம் அதிகரித்துள்ளது. மகப்பேற்று மரணம் மிகவும் குறைந்துள்ளது. உலக சுகாதார அமைப்பு இது குறித்து பாராட்டுத் தெரிவித்துள்ளது என சுகாதாரஅமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன தமதுரையில் மேலும் தெரிவிக்கையில்,

2005ஆம் ஆண்டிலிருந்து இதுவரை காலமும் டாக்டர்கள், பயிற்சி டாக்டர்கள் என 32,000 பேருக்கு நியமனம் வழங்கியுள்ளதாக தெரிவித்த அமைச்சர், தட்டுப்பாடின்றி மருந்துகளைப் பெறுக் கொள்ளும் வகையில் பங்களாதேஷ், தாய்லாந்து மறறும் மலேசியா போன்ற நாடுகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தாலும் உலக சுகாதார நிறுவனத்தின் பாராட்டைப் பெறும் வகையில் எமது சுகாதாரத் துறை உயர்தரத்தில் உள்ளது.

டெங்கு நோயினால் ஏற்படும் மரணங்களை வெகுவாகக் குறைக்க முடிந்துள்ளது. கடந்த வருடங்களோடு ஒப்பிடுகையில் 2012ஆம் ஆண்டில் டெங்கு நோயாளர்கள் 47,823 பேராக இருந்த போதிலும் 2013இல் அதனை 27,991 ஆகக் குறைக்க முடிந்துள்ளது இந்த ஆண்டில் டெங்கு நோயினால் பலியானோரின் வீதம் 100இற்கும் 2.8% வீதமாக குறைவடைந்துள்ளதைக் குறிப்பிடவேண்டும்.


சிறுநீரக நோய் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அதற்கான மருத்துவ உபகரணங்களின் குறைபாடுகள் பற்றியும் எதிர்க்கட்சியினரால் குற்றஞ்சாட்டப்பட்டன. இதுவரை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு ஊடாக 200இற்கும் மேற்பட்ட உபகரணங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அத்துடன் யாழ்ப்பாணம், அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் சிறுநீரக நோய்த் தடுப்பு தொடர்பாக பாரிய செயற்றிட்டங்கள் வெளிநாட்டுக் கடன் உதவியுடன் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

மருந்துகளுக்கான விலைக் கட்டுப்பாடு தொடர்பில் புதிய சட்ட மூலம் ஒன்று அடுத்த வருட முற்பகுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மருந்து கொள்கையொன்றை நடைமுறைப்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம். இந்த சட்டமூலம் தயாரிப்பு நடவடிக்கைகள் 99 வீதம் பூர்த்தியடைந்துள்ளன. தமிழ் மொழி பெயர்ப்பு உட்பட மீதமாக சிறு சிறு நடவடிக்கைகளே உள்ளன. விரைவில் இது நிறைவு பெறும். 2013 முதல் 2018 வரைக்குமான புதிய ஐந்து வருட திட்டம் சுகாதாரத் துறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன் மூலம் பாரிய பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இலங்கையில் ஒரு நோயாளிக்காக 60 டொலரை அரசாங்கம் செலவளித்து வருகிறது.

அமெரிக்காவில் ஒரு நோயாளிக்காக 22,000 அமெரிக்க டொலர் செலவிடப்படுகிறது. ஆசியாவைப் பொறுததவரை எமது மருத்துவத்துறையே முன்னணியில் உள்ளது என்றார்.

# பாலம் அமைப்பு



வடமராட்சியில் மாலு சந்தி அல்வாய் வீதியில் நாவலடி சந்திக்கு அண்மையாக 5 மில்லியன் ரூபா செலவில் பாலம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இப் பாலம் மிக நீண்டகாலம் சேதமடைந்த நிலையில் இருந்தது. வீதி அபிவிருத்தி திணைக்களம் மாகாண விசேட அபிவிருத்தி நிதியின் மூலம் நிதியைப் பெற்று இப் பாலத்தை நிர்மாணித்து வருகின்றது. (90)

# தொழிற்கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தினால் பின்வரும் கற்கைநெறிகள் எதிர் வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர் கட்டட நிர்மாண உதவியாளர் முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்திருத்துநர் தொழிற்சாலை மின்னிணைப்பாளர் காய்ச்சி இணைப்பவர் (வெல்டிங்) குளிர்சாதன உபகரண திருத்துநர் டீசல் இயந்திர திருத்துனர் நீர்க்குழாய் பொருத்துநர். இவ்வனைத்து கற்கை நெறிகளும் தேசிய தொழிற் தகைமை (NVQ) சான்றிதழ்களுக்கான பயிற்சிகளாகும்.

இக்கற்கைநெறிகளைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை மாவட்ட அலுவலகம் 1ஆம் மாடி,வீரசிங்கம் மண்டபம், இல12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்(தொலைபேசி.021 2227949) அல்லது கைதடி பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 20ஆம்திகதிக்கு முன்னர் மேற் கொள்ளுமாறு மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளிக்குடா கிராம சேவையாளர் பிரிவில் தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மாலை 3.00மணிக்கு நடைபெற்ற போது.... (90)

# பயிற்சி நெறி

(யாழ்நிருபர்)

இலங்கை ஊடகவியல் கல்லூரி நடத்தும் பத்திரிகைகளுக்குஎழுதுவது எப்படி? விவரணக் கட்டுரைப்பயிற்சி நெறி எதிர்வரும்20 ஆம் திகதி முதல் 22ஆம்திகதி வரை இலங்கை ஊடகவியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தமிழ்மொழி மூலம் வழங்கப்படவுள்ள மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னதாக பயிற்சி ஒருங்கிணைப்பாளர் இலங்கை ஊடகவியல் கல்லூரி 96 கிருல வீதி, கொழும்பு-05 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். பயிற்சிநெறியை முழுமையாக நிறைவு செய்பவர்களுக்குப் பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படுமென்றும் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் தெரிவித்துள்ளார். (10)

# டெங்கு விழிப்புணர்வு

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட பெரியவிளான் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரமும், சிரமதானமும் இன்று காலை 9.30 மணி முதல் பெரியவிளான் பகுதியில் இடம் பெறவுள்ளது.

மழைக் காலம் ஆரம்பித்துள்ளமையால் டெங்கு நுளம்புகள் அதிகளவில் பெருகும் தன்மையுள்ள இடங்கள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்படவுள்ளதோடு, டெங்கு நோய் சம்பந்தமாக விளக்கமளிக்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்ட பெரியவிளான் இளைஞர் கழகத்தின் முதலாவது சமூகப் பாங்கான செயற்றிட்டமாக டெங்கு நோய் விழிப்புணர்வு பிரசாரமும் சிரமதானமும் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொண்டு ஆதரவளிக்குமாறு பெரியவிளான் இளைஞர் கழகத்தினர் கேட்டுள்ளனர். (48,114)

# திருவாசக விழா

(யாழ்நிருபர்)

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் திருவாசக விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை மாலை 5.00மணிக்கு ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமை யில் நடைபெறும். இந்நிகழ்வில தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் 'இமைப் பொழுதும்என் நெஞ்சில்" என்னும் பொருள்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

திருவாசத்தேனில்.... என்னும்பொருளில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள கருத்தரங்கிற்கு தமிழருவி த.சிவகுமாரன்,சிவத்திரு ச.லலீசன், கு.பாலசண்முகன் ஆகியோர் கருத்துரை வழங்குவார். (10)

# இளைஞர் கழகம் புனரமைப்பு

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட கழகங்கள் மீள புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் 2014ஆம் ஆண்டுக்கான இளைஞர் கழகங்களின் புதிய நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக சில்லாலை வடக்கு இளைஞர் கழகத்தின் புனரமைப்பு மற்றும் புதிய நிர்வாகிகள் தெரிவு இன்று காலை 8.30 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே குறித்த சில்லாலை வடக்கு கிராமசேவகர் பிரிவிற குட்பட்ட 13முதல் 29 வயதிற்குட்பட்ட இளைஞர் யுவதிகளை கலந்து கொண்டு இளைஞர் கழக செயற்பாடுகளில் இணைந்து கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் கேட்டுள்ளனர். (48,114)

# நாவலர் பாலர் பாடசாலை ஆண்டிறுதி கௌரவிப்பு விழா



சுதுமலை நாவலர் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான ஆண்டிறுதி கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் ஈஞ்சடி முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெற்றது.

இ.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.சிவராஜா கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக விவசாயத் திணைக்கள ஓய்வுநிலை பிரதிப் பணிப்பாளர் பா.நாகதாசன், சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் யோ.ஹேமநளினி ஆகியோர் கலந்துகொணடனர்.

மாணவர்களின் கலைநிகழ்வுகளும், மாணவர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன.

இங்கு உரையாற்றிய பிரதம விருந்தினர் யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் க.சிவராஜா துள்ளித்திரிகின்ற வயதில் துடுக்கடக்கி பள்ளிக்கு அனுப்பி விட்டால் போதாது. பிள்ளைகள் என்ன செய்கின்றனர் என்பதைப் பெற்றோர்கள் கணகாணிக்க வேண்டும். இதன் மூலம் நல்லதொரு சந்ததியை உருவாக்க முடியும்.

அத்துடன் ஒழுக்கமான பண்புகளை இச் சிறு வயதில் மாணவர்களிடத்தே விதைத்து விட்டால் அவர்கள் காலம்பூராகவும் ஒழுக்க சீலர்களாகவே வாழ்வார்கள் வீடானது பலமாக அமைய அத்திவாரம் எவ்வளவு அவசியமோ அதேபோலவே இச் சின்னஞ் சிறார்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய இப்பருவம் மிக முக்கியமானது.

எனவே, அவர்களை வழிப்படுத்தி நல்லவர்களாக்கும் பொறுப்பினை பெற்றாரும், சமூகமும் சரியான வழிகளில் மேற்கொள்ளல் வேண்டும் என்றார். (48)

# முல்லாவின் மரணதண்டனை எதிரொலி; பங்களாதேஷில் வெடித்தது வன்முறை

## –இன்று கதவடைப்பிற்கும் அழைப்பு



போர்க்குற்றத்துக்காக ஜமாத் இ இஸ்லாமி அமைப்பின் உயர் தலைவர் அப்துல் காதர் முல்லாவுக்கு (வயது-65) தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டதால் பங்களாதேசில் வன்முறை வெடித்துள்ளது இன்று கதவடைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம் பெற்ற வன்முறைக்கு 4 பேர் பலியாகி உள்ளனர்.

வியாழக்கிழமை இரவு தூக்கிலிடப்பட்ட முல்லாவின் உடல், இறுதிச்சடங்கு நடத்திய பிறகு பரித்பூர் மாவட்டம் அமிராபாத் கிராமத்தில் உள்ள அவரது குடும்ப சுடுகாட்டில் அதிகாலை 4.20 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

இதைக் கண்காணித்தவரும் மாவட்ட ஆட்சியருமான முகமது மமுன் ஷிப்லீ இந்தத் தகவலைத் தெரிவித்தார். இதையடுத்து, ஜமாத் அமைப்பினரும் அதன் மாணவர் பிரிவினரும் சத்ரா ஷிபிர் பகுதியில் ஆளும் அவாமி லீக் கட்சியினருக்கு சொந்தமான 50இற்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களை அடித்து நொறுக்கினர்.

இதுதவிர பல்வேறு பகுதிகளில் ஜமாத் ஆதரவாளர்கள் பேரணி நடத்தியதுடன் பெற்றோல் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதனால் பொலிஸார் கூட்டத்தைக் கலைப்பதற்காக துப்பாக்கிச்சூடு நடத்தினர். வாகனங்களை தீயிட்டு கொளுத்தினர். இந்த வன்முறைக்கு 4 பேர் உயிரிழந்தனர். மேலும் இன்று நாடு தழுவிய கதவடைப்பு போராட்டத்திற்கும் ஜமாத அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை இரத்துச்செய்யக் கோரி முல்லா தாக்கல் செய்திருந்து மறு ஆய்வு மனுவை பங்களாதேஷ் உச்சநீதிமன்றம் வியாழக்கிழமை தள்ளுபடி செய்து தண்டனையை உறுதி செய்தது குறிப்பிடத்தக்கது. பங்களாதேஷில் 1971இல் நடைபெற்ற விடுதலைப்போரின் போது பாகிஸ்தான் படைகளுடன் கை கோத்து அப்பாவி பொதுமக்களுக்கு எதிராக இழைத்த கொடிய குற்றங்களுக்காக முல்லாவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சீன பிராந்தியத்தில் தொடரும் பதற்றம்; அமெரிக்கா - ஜப்பான் கூட்டிணைவு



சீனா பிரகடனப்படுத்தியுள்ள புதிய வான் பாதுகாப்பு பகுதியை அமெரிக்கா அங்கீகரிக்காது என்று துணை ஜனாதிபதி ஜோ பிடன், ஜப்பானிடம் தெரிவித்துள்ளார்.

சீனா, ஜப்பான், தென் கொரியா ஆகிய நாடுகளில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடன் ஒரு வாரத்துக்கு முன் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அதையடுத்து, ஜப்பான் பிரதமர் ஷின்ஹஸா அபேயிடம் கடந்த புதன்கிழமை தொலைபேசி மூலம் பேசிய பிடன், ஜப்பானின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ள சீனாவின் புதிய வான் பாதுகாப்பு அறிவிப்புக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சீனா அண்மையில் அறிவித்த புதிய வான் பாதுகாப்பு மண்டலத்தை அமெரிக்கா அங்கீகரிக்காது. சீனாவின் இந்த அறிவிப்பு கிழக்கு சீன கடற்பகுதியில் அமெரிக்காவின் நடவடிக்கைகளை எவ்வழியிலும் பாதிக்காது. சீனா மற்றும் ஜப்பானின் புதிய இருதரப்பு விவகாரங்கள் உள்பட இந்த பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்க அமெரிக்கா உதவும். ஜப்பான் மற்றும் தென் கொரிய ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வரவேற்கத்தக்கது என்று கூறப்பட்டுள்ளது.

# 23 குழந்தைகளை குத்தியவருக்கு மரண தண்டனை

சீனாவில் பாடசாலை குழந்தைகளை தாக்கி காயப்படுத்திய நபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.சீனாவின் ஹெனான் மாகாணத்தில் உள்ள கூவங்சு நக்ரில் ஆரம்பப்பாடசாலை ஒன்று செயல்படுகிறது.கடந்தாண்டு டிசம்பர் மாதம் பாடசாலைக்குள் நுழைந்த மின் யோங்ஜுன்(வயது 36), என்பவர் வயதான பெண் உட்பட 23 குழந்தைகளை கத்தியால் சரமாரியாக குத்தி காயப்படுத்தினார்.இதனையடுத்து மின்னை கைது செய்த பொலிஸார் சிறையில் அடைத்தனர்.இதனைத் தொடர்ந்து நடந்த வழக்கில், மரணதண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது. இந்தத் தீர்ப்பினை பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் வரவேற்றுள்ளனர்

# இந்திய துணைத்தூதுவர் அமெரிக்காவில் கைது



அமெரிக்காவில், வீசா மோசடி செய்ததாக, இந்திய துணைத் தூதுவர், தேவயானி கோப்ராகடே, கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள, இந்திய தூதரகத்தின் அரசியல், பொருளாதார, வர்த்தகம் மற்றும் மகளிர் விவகாரங்களுக்கான துணைத் தூதுவராக தேவயானி பணியாற்றி வருகிறார். இந்திய வெளியுறவு சேவைகளுக்கான அதிகாரியான தேவயானி, மும்பையைச் சேர்ந்தவர் சர்ச்சைக்குரிய, மும்பை, ஆதரஷ் வீட்டு வசதி சங்கத்தில், கட்டடம் வாங்கிய விவகாரத்தில், தேவயானியின் பெயர் பரபரப்பாக பேசப்பட்டது. அமெரிக்காவில், தன் வீட்டில் வேலை செய்வதற்காக, ஒரு இந்தியரை, அழைத்து வந்து, தங்கவைப்பதற்காக, அவருடைய வீசா விண்ணப்பத்துடன் போலியான ஆவணங்களை இணைத்து சமர்ப்பித்த குற்றத்திற்காக, தற்போது, கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த ஊழியருக்கு குறைவான சம்பளம் வழங்கியதன் மூலம், அவருடைய பொருளாதாரத்தை சுரண்டியுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இதேவேளை, தேவயானி, 1.5 கோடி ரூபாய் ரொக்க பிணையில் வெளிவந்துள்ளார்

# "ஜெ"சொத்துக் குவிப்பு வழக்கில் நிறைவான தீர்ப்புக் கிடைக்கும்



முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் முழுமையான, நிறைவான தீர்ப்பு உரிய நேரத்தில் வரும் என்றே தமிழகம் எதிர்பார்க்கிறது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் தொடர்புடைய, சென்னையில் உள்ள அசையும் சொத்துக்களை, வழக்கு விசாரணை நடக்கும் பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்துக்கு, வரும் 21ஆம் திகதிக்குள கொண்டு வர வேண்டும் என்று, தனி நீதிபதி உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

நீதிபதி ஜோன் மைக்கேல் டி.குன்ஹா அளித்த தீர்ப்பில், எந்த நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறதோ, அங்கேதான் வழக்கு தொடர்பான பொருள்கள் இருக்க வேண்டும். முதலில் சென்னை நீதிமன்றம், வழக்குப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு, அவற்றைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வழக்கை நடத்திக் கொண்டிருந்தது. இப்போதுதான், வழக்கு இந்த நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. இந்தவழக்குக்கான சொத்துக்களை நீதிமன்றம் தன் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு வழக்கை நடத்துவது தான் சட்ட முறையாகும் என்று தனி நீதிபதி விளக்கமாகத் தெரிவித்துவிட்டார்.

குறிப்பிட்ட நீதிபதிதான், சொத்துக் குவிப்பு வழக்கைத் தொடர்ந்து விசாரிக்க வேண்டும் என்று வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, புதிய நீதிபதி ஒருவர் விசாரணையை மேற கொண்டு, ஒரு முடிவினை வழங்கியிருக்கிறார். இதுவே இந்த வழக்கில் முழுமையான தீர்ப்பல்ல. நீதிபதி பாலகிருஷ்ணாதான் இந்த வழக்கைத் தொடர்ந்து விசாரிக்க வேண்டும் என்று, உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா தரப்பினர் கோரிக்கை வைத்து, அது நிறைவேறாமல் போனபோதே சட்டம் தன் கடமையைச் சிறப்பாகச் செய்கிறது என்றுதான் கருதப்பட்டது. அதே வரிசையில் முழுமையான, நிறைவான தீர்ப்பு உரிய நேரத்தில் வரும் என்றே தமிழ்நாடு எதிர்பார்க்கிறது என்றார்.

# முதலமைச்சரின் கைவண்ணத்தில் தயாராகும் சேலைகள்

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி சேலை வடிவமைப்பிலும் தடம் பதித்துள்ளார். மக்கள் நலன் சார்ந்த பணியாகவே மம்தா மேற்கொண்டுள்ளார். மம்தாவின் வடிவமைப்பில் உருவாகும் சேலைகளால் தந்துஜா நிறுவனத்தின் பிராண்ட் மதிப்பு பெருமளவில் அதிகரிக்கும் என்றும் அதன் விற்பனையை வெகுவாக உயர்த்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# இன்று மண்டேலாவின் இறுதி யாத்திரை



தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் இறுதி ஊர்வலம் இன்று இடம்பெறவுள்ளது.

நேற்றுக் காலை மண்டேலா உடல் வைக்கப்பட்ட பெட்டி இளம்வயதில் அவர் வாழ்ந்த கேப் மாகாணத்தின் பூர்விக குனு கிராமத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. அவரது குடும்பத்துக்குச் சொந்தமான தோட்டத்தில் இன்று அடக்கம் செய்யப்படும். அரச மரியாதையுடன் நடை பெறும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக முக்கிய அரசியல் தலைவர்கள், வெளிநாட்டு தலைவர்கள் என ஏராளமானோர் குனு சென்றுள்ளனர்.

நுரையீரல் தொற்றால் பல மாதங்களாக அவதிப்பட்டு படுக்கையில் இருந்த மண்டேலா (வயது-95) கடந்த 5ஆம் திகதி ஜோகன்னஸ்பேர்க்கில் மரண மடைந்தார். மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை ஜோகன்னஸ் பேர்க்கில் உள்ள மைதானத்தில் நடந்தது.

# நோயாளியை பார்த்து கடிகாரம் கூறிய "செத்துப்போ"




இங்கிலாந்தில் உள்ள மருத்துவமனை ஒன்றில் நோயாளியை பார்த்து கடிகாரம் செத்துப் போ என்று கூறியதால் பரபரப்பு ஏற்பட்டது. இங்கிலாந்தின் யார்க்ஷயரில் உள்ள ஷெப்பீல்டில ராயல் ஹாலம்ஷயர் என்ற மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

இங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளி ஒருவரை பார்த்து, கடந்த செவ்வாய்கிழமை செத்துப் போ என்று கூறியுள்ளது.மருத்துவமனை சுவரில் பொருத்தப்பட்டிருக்கும் ஜேர்மன் கடிகாரம் செத்துப்போ என்று கூறியதை நாங்களும் கேட்டோம் என்று ஸ்டூவர்ட் கார்டர் மற்றும் பியோனா பாத்ராப் ஆகிய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். டயன்ஸ்டாக் என்றால் ஜேர்மானிய மொழியில் செவ்வாய்கிழமை என்று அர்த்தம், அதன் சுருக்கத்தை தான் அந்த கடிகாரம் டை என்று தெரிவித்துள்ளது. இதனீ பின்பு கடிகாரம் ஆங்கில மொழிக்கு மாற்றப்பட்டது என்று அந்த் மருத்துவர்கள் தெரிவித்தனர், ஆங்கிலத்திற்கு மாற்றப்பட்ட பிறகு கடிகாரம் ட்யூ என்று தெரிவித்துள்ளது. அதாவது ட்யூஸ்டே செவ்வாய்கிழமை என்பதன் சுருக்கமாகும்.

# யாழ்.பல்கலையில் முகாமைத்துவ ஆய்வரங்கு; வணிக முகாமைத்துவப் பிரிவு ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

'நிலைத்திருக்கும் அபிவிருத்தி நோக்கிய மனித வளத்தை வலுவூட்டுதல்' என்ற தொனிப்பொருளிலான சமகால சர்வதேச முகாமைத்துவ ஆய்வரங்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 14, 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகமொன்று சமூகத்துக்கான அறிவியல் பங்களிப்பை வழங்க வேண்டுமென்ற நோக்குடன் யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள இந்த ஆய்வரங்கு சம்பந்தமான பத்திரிகையாளர் சந்திப்பொன்று நேற்று முற்பகல் யாழ்.பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இங்கு இந்த ஆய்வரங்கினை யாழ்.பல்கலைக்கழகத்தில் 2014 ஆம் ஆண்டு நடத்துவதற்கு யாழ்.பல்கலைக்கழக மூதவை மற்றும் பேரவை என்பன அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரிவித்த துணைவேந்தர், இந்த ஆய்வரங்கினை நடத்துவதன் மூலம் பல்கலைக்கழக மாணவர்களின் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது மற்றும் சமூகத்துடன் இணைந்து சமூகத்திற்கு அறிவியல் பங்களிப்பைச் செய்வதற்குமாகவே இந்த ஆய்வரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் கடந்த வருடம் ஒரு ஆய்வரங்கை நடத்தியிருந்தோம். அடுத்த வருடம் இவ்வாறு ஆய்வரங்கொன்றை நடத்தவிருப்பதாகவும் அவர், முதன்முறையாக எமது பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப் பிரிவு நடத்த விருப்பதாகவும் தெரிவித்தார்.

இவர்கள் இந்தஆய்வரங்கிற்கு எடுத்திருக்கும் தலைப்பு நிலைத்திருக்கும் அபிவிருத்தியினை நோக்கிய மனித வளத்தை வலுவூட்டல் என்பதாகும். இந்த ஆய்வரங் கிற்கு பதினைந்து உப தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்க முடியும்.

கணக்கீடும் நிதியும், சுற்றுலாத்துறையும் விருந்தோம்பலும் மற்றும் நிகழ்வு முகாமை, சந்தைப்படுத்தலும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவமும், வங்கியியலும் காப்புறுதியும், மனித வள அபிவிருத்தி, வணிகமும் சட்டச் சூழலும், தந்திரோபாய முகாமைத்துவம், வணிப் பொருளியல், முயற்சியாண்மையும் செயற்பாட்டு முகாமைத்துவமும், பிராந்திய மற்றும் சமூகத்திட்டமிடல், சர்வதேச வியாபாரமும் நிதியும், கலாசாரமும், நெறிமுறைகளும், நகர முகாமைத்துவம், தகவல் தொழிலநுட்படும் தொடர்பாடலும், செயற்பாட்டு ஆய்வு என்பன இதற்கான உப தலைப்புகளாகும்.

இந்த ஆய்வுக் கட்டுரைச் சுருக்கம் டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி கையளிக்கப்பட வேண்டும். இதற்கான ஆய்வுகளுக்கு அன்பளிப்பு ஏற்பறிப்பு டிசம்பர் 31 ஆம் திகதியும், ஆய்வுக் கட்டுரை கையளிப்பு ஜனவரி 15 ஆம் திகதியும், ஆய்வுக்கட்டுரை ஏற்பு பெப்ரவரி 15 ஆம் திகதியும், ஆய்வரங்கு பதிவு மார்ச் முதலாம் திகதியும் ஆய்வரங்கு மார்ச் 14, 15, திகதிகளிலும் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தார் பேராசிரியா வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் வணிக முகாமைத்துவ பிரிவு தலைவர்களும், விரிவுரையாளர்களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்த சர்வதேச ஆய்வரங்கு சம்பந்தமாக் யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப் பிரிவினால் இணையத்தள சேவை ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட் டுள்ளது.

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் இதனை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். (பா)

## சர்வதேச...

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட இனப்படு கொலைகள் தொடர்பான. ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி ஹெடாட சீன், அஹமட் பா வின் கருத்தை ஆமோதித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க குறித்த ரோம் உடன்பாட்டில் கைச்சாத்திடுவதை நிராகரித் தார். எனினும் 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க இந்த உடன்பாட்டில் கையெழுத்திட மறுத்ததாக ஞாயிறு திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

அதேவேளை வெளிநாடுகளில் உள்ள புலிகளின் உறுப் பினர்களான ருத்ரகுமாரன், அடேல் பாலசிங்கம், நெடியவன் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ரோம் உடன்பாட்டில் கையெழுத்திடுமாறு வெளிநாட்டில் இருந்து வந்த இலங்கையர் ஒருவர் அரசாங்கத்திடம் கோரியதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ அதனை நிராகரித்து விட்டதாகவும் திவயின குறிப்பிட்டுள்ளது.

தெற்காசியாவில் உள்ள எந்த நாடும் ரோம் உடன்பாட்டில் கையெழுத்திடவில்லை என்றும் திவயின மேலும் கூறியுள்ளது.

## ஆணைக்குழுவின்...

நட்டஈடு வழங்குதல் போன்ற கோரிக்கைகளையும் ஏற்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் 500 இற்கும் மேற்பட்ட பரிந்துரைகளையும் அமுல் படுத்த முடியாது. இவற்றில் ஏற்கனவே 100இற்கும் மேற்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டதுடன், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டுமென்பதை நடைமுறைப்படுத்த முடியாது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் தேசியப் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படக் கூடியவாறான பரிந்துரைகளை அமுல்படுத்த முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முப்பது...

பக்ஷ தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது இலங்கையும், கென்யாவும் பொதுவான சவால்களையே எதிர்கொள்வதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

## கிளிநொச்சி...

தடங்கலுமின்றி இடம் பெற்றது. குறித்த பரீட்சை மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கரும்பலகை ஒன்றுக்கிடையில் புகுந்து படுத்திருந்த முதலையை பரீட்சை ஆரம்பித்த பொழுதே அவதானித்த மேற்பார் வையாளர் மாணவர் களுக்கு தெரியப் படுத்தாது பரீட்சை முடியும்வரை அதனை அவதானித்தாவாறே இருந்துள்ளார்.

மாணவர்கள் பரீட்சை எழுதி முடிந்த பின்னர் மேற்பார்வையாளர் .முதலை தொடர்பாக தெரியப்படுத்தியபோது மாணவர்கள் அச்சத்தினால் மண்டபத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதன்பின்னர் கிளிநொச்சி பொலிசாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் முதலையைப் பிடித்து பாதுகாப்பாக வெளியேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நல்லிணக்க...

கையுடன் பகிர்ந்து கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜனா திபதி நெல்சன் மண்டேலாவின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் நோக்கில் நாடாளுமன்றக் கட்டடத்தில் விசேட கூட்டமொன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட உயர் ஸ்தானிகர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்ற ஜனநாயக முறைமையை நிலை நாட்டுவதில் அமரர் நெல்சன் மண்டேலா அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மண்டேலா வின் மறைவு தென் ஆபிரிக்கா விற்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த உலகிற்குமே இழப்பாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். எங்கள் காலத்தின் மிகச் சிறந்த தலைவர்களில் ஒருவர் மண்டேலா என அவர் தெரிவித்துள்ளார்.

# இராணுவ வீரர் உயிரிழப்பு

மின்னேரியாவில் பயிற்சிக் கல்லூரியொன்றில் பயிற்சி நடவடிக்கையொன்றின் போது வெற்றுத் தோட்டா ஒன்று வெடித்தலில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெற்றுத் தோட்டா வெடித்ததில் கடும் காயங்களுக்கு உள்ளான அந்த இராணுவ வீரர் பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிக்சூரிய கூறினார்.

சிலாபம் பகுதியைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவரே இதன் போது உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க பணிப்பு

(வலி.வடக்கு)

வலி.வடக்குப் பிரதேச செயலகத்தின் ஊடாக ஓய்வூதியம் பெறுபவர்களை வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரத்தினைச் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலக கணக்காளர் கேட்டுக்கொண டுள்ளார்.

இதற்கான விண்ணப்பப் படிவம் இம்மாத ஓய்வூதிய வவுச்சருடன் இணைத்து அனுப்பப் பட்டுள்ளது. இதனைப் பூர்த்தி செய்து கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன், எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

வலி.வடக்குப் பிரதேச எல்லைக்கு வெளியே வசிப்பவர்கள் குறித்த பிரதேச செயலகத்தின் மேலொப்பத்தினையும் பெற்றுகொள்ள வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (54)

# இலங்கையில் நோய் பரப்பலா? முற்றாக மறுக்கிறது ஐ.நா.

இலங்கையில் நோய் பரப்பியதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு அந்த அமைப்பு மறுப்பை வெளியிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் விவசாய அமைப்பு இவ்வாறு இலங்கையில் நோய்களைப் பரப்பியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. இனந்தெரியாத ஒரு வகை சிறுநீரக நோய்களை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு பரப்பியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த இருபது ஆண்டுகளாக இலங்கையின் விவசாயத்தில் ஈடுபடுவோர் இனந்தெரியாத சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்டுள்னர். நோய்களினால் பாதிக்கப்பட்ட 20,000 பேர் கொல்லப்பட்டதுடன், 450,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாய நடவடிக்கைகளின் போது பயன்படுத்தப்படும் இரசாயன வகைகளே இந்த நோய்க்கான பிரதான ஏதுவென நீண்ட ஆய்வுகளின் பின்னர் கண்டறியப்பட்டுள்ளது.

கட்மியம் மற்றும் ஆர்சனிக் போன்ற நச்சுப் பதார்த்தங்களினால் சிறுநீரக நோய் ஏற்படுவதாக உள்நாட்டு வெளிநாட்டு ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர். பல்தேசிய நிறுவனங்களின் சார்பில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனம் இரசாயன பசளைகள் மற்றும் இரசாயன கிருமிநாசினிகளை ஊக்குவித்து வருவதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது.

எவ்வாறெனினும், வர்த்தக நோக்கத்தின் அடிப்படையில் எந்தவொரு தரப்பினையும் ஐக்கிய நாடுகள் அமைப்பு மேம்படுத்தியதோ பிரச்சாரம் செய்ததோ கிடையாது என ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய நிறுவனம் அறிவித்துள்ளது.

## காணாமற்போன...

போனால், அவர்களின் உறவினர்களுக்கு, அவர்களில் தங்கி வாழ்ந்தவர்களுக்கு இழப்பீடு கொடுக்குமாறு நாங்கள் அரசாங்கத்திடம் பரிந்துரை செய்வோம். சிலர் தகவல்களை வழங்க அச்சப்படுவதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

அப்படியான அச்சுறுத்தல் கள் விடுக்கப்பட்டால் எங்களி டம் மக்களை முறைப்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார் மக்ஸ்வெல் பரணகம.

கொழும்பு கொஹவலை பகுதியில் அமைந்துள்ள இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அலுவலகத்தில் வடக்கு கிழக் குப் பிரதேசங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட பலர் தங்க ளின் காணாமற்போன உறவினர்கள் தொடர்பான முறைப்பாடுகளை செய்திருந்தனர்.

தங்களின் உறவினர்களை விடுதலைப் புலிகள் பிடித்துச் சென்றதாக வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த பலர் இங்கு முறைப்பாடு செய்தனர்.

தமது உறவினர்கள் கண்டு பிடிக்கப்படாவிட்டால் தமக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் அரசாங்கத் திடம் கேட்டுக்கொண்டனர்.

உயிரிழந்த மற்றும் காணாமற்போனவர்களின் பெற்றோர் கள் ஒன்றியம் என்ற அமைப்பு இந்த முறைப்பாடு கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தது.

மூன்று ஆண்டுகளாக தென்னிலங்கையில் மட்டும் இயங்கிவந்த தங்களின் அமைப்பு, வடக்கிலும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளால் காணாமற்போனவர்களின் பிரச்சினை நிலவுவதால் அங் கும் சென்று பணியாற்றி வருவதாக அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் ஆனந்த ஜயமான்ன தெரிவித்தார்.

## ஐ.நா. மனித...

ளார். அடுத்த மாதத்தில் லலித் வீரதுங்க ஜெனிவாவிற்கு விஜயம் செய்வார் எனத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக லலித் வீரதுங்க, ஜெனிவாவிற்கு விஜயம் செய்து நிலைமைகளைத் தெளிவுபடுத்துவார் என அகாஷி குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தமது கடமைகளைச் செய்வதற்காகவே அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார் எனவும் அவரின் விஜயம் பற்றி எதுவும் குறிப்பிட வேண்டியதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசியல் கைதிகளின் விடுதலை உடனடியாக சாத்தியப்படாது

## அமைச்சர் வாசு தெரிவிப்பு



அரசியல் கைதிகளுக்கிடையிலும் குற்றமிழைத்தவர்கள் உள்ளனர். எனவே அவர்கள்ள உடனடியாக விடுதலை செய்வதென்பது முடியாதகாரியம். எனவே, அவர்கள் சரியாக இனங்காணப்பட்டதன் பின்னரே இது குறித்து தீர்மானங்களை எடுக்க முடியும் என மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைசசர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடனடியாக அரசு அமுல்படுத்த வேண்டும் எனக் கடந்த புதன் கிழமை ஊடகவியலாளர் சந்திப்பின்போது வலியுறுத்தியிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகள் தொடர்பில் என்னால் எதுவும் கூறமுடியாது. ஆனால், ஆண்டகை கூறியிருப்பதை நாமும் அறிவோம். அவர் கூறியிருப்பதில் உள்ள ஒரு பிரசசினை என்னவெனில் அரசியல் கைதிகள், சாதாரண கைதிகள் என யாரும் இதுவரையிலும் அரசினால் அடையாளம் காணப்படவில்லை.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களையே அரசியல் கைதிகளாகக் கூறப்படுகின்றது. ஆனால், அது இன்னமும் நிரூபிக்கப்படவில்லை. அவர்களுக்குள்ளும் குற்றமிழைத்தவர்கள் உள்ளனர். இந்த நிலையில் இவர்களைக் கைது செய்தமை அரசியல் பழிவாங்கல் என எவ்வாறு கூறுவது? இவர்கள் குறித்து ஆராயப்பட்ட பின்னரே எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியும்.

அதேவேளை குற்றங்கள் செய்தமைக்கு ஆதாரங்களின்றி சிறையில் கைதிகள் இருப்பார்களாயின் அவர்களை உடனே விடுதலை செய்ய முன்வர வேண்டும். அவ்வாறு அல்லாவிடின் அவர்கள் மீது வழக்காவது தொடர வேண்டும். இவ்வாறு ஒன்றுமில்லாது சிறையில் அவர்களை அடைத்து வைத்திருப்பது எம்மைப் பொறுத்தமட்டில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். ஆகவே இதுவிடயத்தில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என்றார்.

# எந்தவொரு ஜனாதிபதிக்கும் அடிமையாக இருக்கவில்லை

## என்கிறார் அமைச்சர் ராஜித

எந்தவொரு ஜனாதிபதிக்கும் அடிமைச் சேவகம் செய்ததில்லை என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரநாயக்கக்களுடனும், ராஜபக்சக்களுடனும் அரசியல் செய்திருக்கின்றேன். சரியானதற்கு ஆதரவளிப்பேனே தவிர, அடிமைச் சேவகம் செய்ததில்லை.

பண்டாரநாயக்கவின் மூத்த புதல்வி, இளைய புதல்வி, மகன் மற்றும் இரண்டு மருமகன்களுடன் நான் அரசியல் செய்திருக்கின்றேன்.

விஜேதுங்க ஜனாதிபதியுடனும் அரசியல் நடத்தியிருக்கின்றேன். எனினும், எவருக்கும் அடிமைச் சேவகம் செய்தது கிடையாது. என்னைக் கொலை செய்ய நினைத்த பிரபாகரனும், ரோஹன விஜேவீரவும் இன்று உயிருடன் இல்லை. என்னை வீழ்த்த கேம் ஆடியவர்கள் இன்று வீடு சென்றுள்ளனர்.

வெலிகம மீனவர்கள் காணாமல்போனபோது அவர்களுக்கு நட்ட ஈடு வழங்க நான் அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்தேன்.அதனை திறைசேரி நிராகரித்திருந்தது. பணம் எடுக்கும் முறையை அமைச்சர் பசில் ராஜபக்ச எனக்கு சொல்லிக் கொடுத்தார். பசிலும் ஓர் அமைச்சர், ராஜிதவும் ஓர் அமைச்சர். பசிலுக்கு முடிந்தால் ஏன் ராஜித்தவிற்கு முடியாது.

எனது மகனுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அவற்றில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார்.

# இரகசிய வாக்கெடுப்பு நடத்தினால் தோல்வியடையும் பட்ஜெட்

## என்கிறது ஜே.வி.பி.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பாக, இரகசியமான வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அது தோல்வியடையக் கூடும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் முடிந்தால் இரகசியமான வாக்கெடுப்பை நடத்துமாறு அவர் அரசாங்கத்திற்கு சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனச்சாட்சியின்படி வாக்களிக்கும் வாக்கெடுப்பை நடத்தினால் அரசாங்கத்தின் நிலைமையைக் கண்டுகொள்ள முடியும்.

ஆளும் கட்சியின் ஆட்சியின் கீழ் இருக்கும் உள்ளூராட்சி சபைகளின் வரவு செலவுத் திட்டங்கள் தொடர்ச்சியாக தோல்வியடைந்து வருகின்றன. கிராம மட்டத்தில் இருக்கும் அரசாங்கத்திற்கு எதிரான நிலைப் பாடுகளை அந்த சபைகளின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் பிரதிபலித்து வருவதே இதற்கு காரணம்.

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் தங்கள் மனச்சாட்சியின் படி வாக்களிக்க அனுமதி வழங்கினால், உள்ளூராட்சி சபைகள் போன்று நாடாளுமன்றத்திலும் வரவு செலவுத் திட்டம் தோல்விடையும் என்றார்.

# இனம், மதம் சார்ந்த வகையில் அடையாள அட்டை இருக்காது

## ஆட்பதிவுத்திணைக்களம் அறிவிப்பு

அடுத்த வருடம் ஜூன் மாதமளவில் புதிதாக வழங்கப்படவுள்ள இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்பவர்கள், மதம் மற்றும் இனத்தை பிரதிபலிக்கும் வகையில் புகைப்படம் எடுக்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு புகைப்படங்கள் இருப்பின், ஆள் அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது என ஆட்பதிவுத் திணைக்களத்தின் பொது ஆணையாளர் ஆர்.எம்.எஸ்.சரத்குமார தெரிவித்தார். நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு - கல்லடியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி புதிதாக வழங்கப்படவுள்ள இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முஸ்லிம்கள், கிறிஸ்தவ அருட்தந்தை மற்றும் அருட்சகோதரிகள் ஆகியோர் தமது மதத்தை பிரதிபலிக்கும் வகையில் தொப்பி மற்றும் பர்தா அணிந்து புகைப்படம் எடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

2014ஆம் ஆண்டு ஜூன் மாதத்தின் பின்னர் புதிதாக வழங்கப்படவுள்ள இலத்திரனியல் ஆள் அடையாள அட்டை, இலங்கை முழுவதும் வாழும் மக்களுக்கு ஒரே விதமானதாகவும், கலர் புகைப்படத்துடன் சிங்களம், தமிழ் மொழிகளை மாத்திரம் கொண்டு அமைந்திருக்கும்.

எந்தவொரு இன, மத [illegible]ா சாரத்தினையும் பிரதிபலிக்கக்கூடிய வகையில் அவை அமைந்திருக்காது எனத் தெரிவித்தார். இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன், கபே நிறுவனத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளர் ஏ.எச்.ஏ. ஹுஸைன், ஆட்பதிவுத் திணைக்களத்தின் அதிகாரிகள், தமிழ் மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மன்னாரில் விபத்து; சிப்பாய் உயிரிழப்பு


மன்னார், மாந்தை பிரதான வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பெரிய மடுவில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த தனியார் பேருந்து, தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து மாந்தை வீதியூடாக சென்று கொண்டிருந்த இராணுவச் கெப் வாகனத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த கெப் வாகனத்தின் சாரதியான இராணுவச் சிப்பாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மேலும் வாகனத்தில் இருந்த இரு இராணுவ வீரர்கள் காயமடைந்த நிலையில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் குறித்த மேலதிக விசாரனைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 10 மில்லியனுக்கு ஏலம் போன கைவிடப்பட்ட வாகனங்கள்



இறுதியுத்தத்தின் போது கைவிடப்பட்டு எவராலும் உரிமை கோரப்படாது காணப்பட்ட பாவனைக்கு உட்படுத்தப்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட வாகனங்கள் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினால் பத்து மில்லியனுக்கு ஏலத்தில் விற்க்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் இடம்பெற்ற பகுதிகளான மாத்தளன், பொக்கணை, வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் மற்றும் புதுக்குடியிருப்பு இரணைப் பாலை போன்ற பிரதேசங்களில் மக்களால் கைவிடப்பட்ட வாகனங்களின் ஒரு தொகுதி கிளிநொச்சி திருநகர் பகுதியில் வைக்கப்பட்டிருந்தன இதன் போது வாகனங்களின் ஆவணங்களை சமர்ப்பித்து உரிமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களைத் தவிர ஏனைய வாகனங்களே ஏலத்தில் விடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதிகேதீஸ்வரன் கருத்து தெரிவிக்கும் போது கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் வாகனங்கள் உரிமையாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு அவர்களினால் தங்களின் வாகனம் என உறுதிப்படுத்தும் வகையில் ஏதேனும் ஒரு ஆவணத்துடன் மீள ஒப்படைக்கப்பட்டு வந்தன இந்த நிலையில் இதுவரை காலமும் பல வாகனங்கள் எவராலும் பெற்றுகொள்ளப்படாமையினாலும் இவை பாவனைக்கு உதவதாத நிலையில் இருந்தமையினாலும் அவற்றினை மாவட்டச் செயலகம் இரும்புக்காக பத்து மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளது. இதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனை மற்றும் நீதிமன்ற அனுமதியும் பெறப்பட்டதாகவும் தெரிவித்தார்.

“ஏலத்தில் வாகனங்களை” பெற்றுக்கொண்டவர்கள் அவற்றினை இரும்புக்காக திருநகர் பகுதிலியிருந்து ஏற்றிச் செல்கின்றனர். (29)

# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி பொன்னுத்துரை



மட்டுவில் மத்தி, மடத்தடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பொன்னுத்துரை 10.12.2013 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், தேவராணி, திருநாவுக்கரசு, (முன்னாள் கிராம அலுவலர் - கனடா), தேவபாதம் (STO மருத்துவ பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்), சிவலோகநாதன் (கனடா), காலஞ்சென்ற யோகராணி மற்றும் சுகிர்தராணி (கனடா), ஜமுனாராணி (கனடா), ஆனந்தராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற கனகசபை (ஆசிரியர்), தயாநிதி (கனடா), தங்கேஸ்வரி (ஆசிரியை),வசந்தி (கனடா),சிவராசா (கனடா), திருக்கேதீஸ்வரன் (கனடா), சிறிதரன் (கனடா), ஜெனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் மத்தி, மடத்தடி, சாவகச்சேரி. (இ)

தகவல்
ஆர்.இராஜகுமார் (பேரன்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.